Registered as a News Paper

மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா

"Registered in the Department of Posts of Sri Lanka under No. QD/75/News/2009

பொழிவு - 12
குவிப்பு - 03
பக்கங்கள்- 20
விலை ரூபா 30.00
மார்ச் - 2009
(ISSN 1800-2641)

THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Pozhivaham, Manna Paper Office, No. 31/2, Hospital Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2251161/ 060-2233276, Fax No - 023-2251161, E. Mail : nesanmnr@gmail.com

வன்னிப் போர்ப் பிரதேசத்தில் மனித பேரவலத்தின் மத்தியில்

மக்களோடு வாழும் குருக்கள் துறவியரை

வத்திக்கான் பாராட்டுகிறது

திருத்தந்தையின் இலங்கைக்கான பிரதிநிதி பேராயர் மாறியோ செனாறி ஆண்டகை அவர்கள் மன்னார் மற்றும் யாழ்ப்பாண ஆயர்களுக்கு எழுதிய கடிதத்தில் வன்னிப் போர்ப் பிரதேசத்தில் மனிதப் பேரவலத்தின் மத்தியில் மக்களோடு இருக்கும் குருக்கள் துறவியருக்கு வத்திக்கான் நற்செய்தி அறிவிப்பு பேராயத்தின் பாராட்டுக்களையும் செபங்களையும் தெரிவித்துள்ளார். அக்கடிதத்தின் முழு விபரம் வருமாறு



மேதகு ஆயர் அவர்களே!

இலங்கைவாழ் மக்களிடையே இடம்பெற்றுவரும் இனமுரண்பாடுகள் பற்றியும், இனப்பிரதேசங்களில் வாழும் குடிமக்கள் அனுபவித்துவரும் சொல்லொண்ணாத்துயர்கள் பற்றியும், இப்பகுதி-யில் பணியாற்றிய ஒருசில குருக்கள் மற்றும் ஆண், பெண் துறவிகள் தொடர்ந்தும் அந்த மக்களுடன் வாழ்வதற்கு எடுத்த துணிச்சலான தீர்மானம் பற்றியும் நற்செய்தி அறிவிப்புப் பேராயத்திற்கு அறிவித்திருந்தோம்.

இந்தப் பேராயத்தின் தலைவர் அதிமேதகு காத்தினால் ஐவன் டயஸ் ஆண்டகை தங்களுடனும், குருக்கள், ஆண் பெண் துறவிகள், இறைமக்கள் மற்றும் போரினால் தாக்கப்பட்டு அல்லலுறும் அனைத்து மக்களுடனும் தான் ஆழமான விதத்தில் ஒன்றித்திருப்பதாக அறிவிக்கும்படி கேட்டுக்கொண்டார்.

தங்களது சொந்த உயிரையும் பொருட்படுத்தாது துன்புறும் மக்களுடன் தங்கியிருப்பதற்குத் தீர்மானித்து அதனைச் செயற்படுத்தும் குருக்கள் மற்றும் ஆண், பெண் துறவிகள் அனைவரும் எமது உயர்ந்த மதிப்புக்கு உரியவர்கள். அளவிடற்கரிய துன்பத்தின் மத்தியில் வாழும் மக்களுக்கு இவர்களது பிரசன்னமும் உடனிருப்பும் மிகப்பெரிய ஆறுதலைக் கொடுக்கும் என்றும் அதிமேதகு கர்த்தினால் ஐவன் டயஸ் ஆண்டகை குறிப்பிட்டுள்ளார்.

எனது சகோதர ஆதரவையும் செபத்தையும் அளித்து நிற்கிறேன்.

- அதிமேதகு மாறியோ செனாறி
இலங்கைக்கான
அப்போஸ்தலிக்க தூதுவர்

திருத்தந்தையின் தவக்கால மடல்

பாவத்தையும், அதற்கு இட்டுச் செல்லும் அனைத்து வழிகளையும் தவிர்க்க உதவும்

உண்ணா நோன்பு!

"அவர் நாற்பது நாள் இரவும், பகலும் நோன்பிருந்தார். அதன்பின் பசியுற்றார்"
(மத் 4:1-2)



திருத்தந்தையின் தவக்காலத் திருமடலின் முழுமையான வடிவத்தை 6ம் பக்கத்தில் காணலாம்.

வன்னியில் மகக்கள் அனுபவிக்கும் பேரவலம் குறித்து

தமிழக ஆயர் பேரவை கடும் கண்டனம்

" விடுதலைப் புலிகளை
அழிக்கின்றோம் என்ற போர்வையில்
இலங்கை இராணுவம் அப்பாவி மக்கள்மீது
குண்டு வீச்சு நடத்துகிறது.
உணவு, உடை, வீடு, தண்ணீர், மருந்து
என அனைத்து வாழ்வுரிமைகளும்
மறுக்கப்பட்ட நிலையில்
தமிழினமே அழியும் நிலை உள்ளது."



என தமிழக ஆயர் பேரவை சார்பாக அதன் தலைவர் பேராயர் மேதகு பீற்றர் பெர்னாண்டோ ஆண்டகை அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். இவ்வறிக்கையின் முழு விபரத்தையும் 3ம் பக்கத்தில் காணலாம்.

இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் இடம்பெயர்ந்துள்ள வன்னி மக்களைத் தரிசித்தனர்

வன்னியில் இடம்பெறும் இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்து வவுனியாவில் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களையும் மற்றும் வவுனியா, மன்னார் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுவரும் மக்களையும் இலங்கை கத்தோலிக்க ஆயர் குழுவினர் கடந்த மார்ச் மாதம் 12ம் திகதி நேரில் சந்தித்து ஆறுதல் கூறினர்.

மன்னார் ஆயர் மேதகு இரா யோசேப்பு ஆண்டகை, அநுராதபுர ஆயர் மேதகு நோபட் அன்றாடி, சிலாப ஆயர் மேதகு வலன்ஸ் மென்டிஸ், இரத்தினபுரி ஆயர் மேதகு கிளிற்றஸ் பெரேரா, காலி ஆயர் மேதகு கறல்ட் பெரேரா, கண்டி ஆயர் மேதகு வியான்னி பெர்ணான்டோ ஆகியோரே இந்த ஆயர் குழுவில் இடம்பெற்றவர்கள் ஆவார். (தொடர்ச்சி 2ம் பக்கம்)

இலங்கைக்கான புதிய வத்திக்கான் தூதுவர் நியமனம்

இலங்கைக்கான புதிய வத்திக்கான் தூதுவராக (திருத்தந்தையின் பிரதிநிதியாக) மோல்ரா நாட்டைச் சேர்ந்த அதிவந்தனைக்குரிய யோசேப் ஸ்பித்தேரி (Rev. Monsignor Joseph Spiteri) அடிகளார் திருத்தந்தை 16ம் பெனடிக்ற் அவர்களால் நியமிக்கப்பட்டுள்ளார்.

49 வயதான யோசேப் ஸ்பித்தேரி அடிகளார் 1984ல் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். இவர் வத்திக்கான் செயலகத்தில் பணியாற்றியதுடன் பனாமா, ஈராக், மெக்சிக்கோ, வெனிசுவேலா, போர்த்துக்கல், கிறீஸ் ஆகிய நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தி வத்திக்கான் இராஜதந்திர பணியகத்- திலும் பணியாற்றியுள்ளார்.

புதிய வத்திக்கான் தூதுவரை மன்னா வாசகர்கள் சார்பாக வரவேற்கின்றோம். அவர் பணி சிறக்க வாழ்த்துகிறோம்.

உள்ளே.....

- மன்னார் வைத்தியசாலையில் உள்ள காயமடைந்த வன்னி மக்களுக்கான **மன்னார்த் திருச்சபையின் பரந்துபட்ட பணிகள்** பக்கம் - 4
- புனித பவுல் ஆண்டு மற்றும் நற்செய்தி அறிவிப்பு ஆண்டு கட்டுரைத் தொடர் 1 **பவுலின் வாழ்க்கைக் குறிப்புகள்** பக்கம் -9
- ஜோர்மன் நாட்டில் 10 வருடத்திற்கு ஒருமுறை இடம்பெறும் **அபூர்வமான திருப்பாடுகளின் காட்சி** (ஜோர்மனியில் இருந்து மின்னஞ்சல் மூலம் கமிலஸ் துரைசிங்கம்) பக்கம் -9
- உளவியல் கட்டுரை - **தனிமை ஒரு இனிமையா?** பக்கம் -12
- தவக்காலச் சிறப்புப் பொழிவு - சிறப்புக் கட்டுரை இயேசுக் கிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் பின்னணியில் **பிலாத்துவின் வகிபாகம்** - ஒரு வரலாற்றுக் கண்ணோட்டம் - திரு. எஸ். டேவிட், கோட்டைக் கல்லீப் பணிப்பாளர், முசலி பக்கம் 15,16
- தவக்காலச் சிறப்புப் பொழிவு **உண்மையான தவம்** - அருட்பணி. ஏ. இரபேல் - பக்கம் 17

மன்னா
மனப்பொழிவு
பதிப்பாசிரியர் பகர்வது

யுத்தம் தீர்வைத் தராது!

வன்னியில் தாக்குதல் நடவடிக்கைகள் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன. தொடர்ந்து ஏராளமான பொதுமக்களும், புலிகளும், இராணுவத்தினரும் கொல்லப்படுகின்றனர். உயிரிழப்புக்கள் எல்லா நிலைகளிலும் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன. வன்னியில் இருந்து வெளியேறி வந்துள்ளவர்களின் அனுபவங்களைக் கேட்கும்போது உள்ளம் பதைபதைக்கின்றது. மனித உயிர் இந்தளவுக்கு மலிவானதாகிவிட்டதா? என்று எண்ணி ஏங்கத்தோன்றுகிறது.

யுத்தம் தீர்வைத் தராது அழிவையும் பகையுணர்வையும்தான் தரும்

தொடரும் உயிரழப்புக்கள் மத்தியில் தொடர்ந்து யுத்தம் முன்னெடுக்கப்பட்டுக்கொண்டே இருக்கிறது. இந்நிலையில் யுத்த வெற்றி என்பது என்றுமே நிச்சயமான, நிரந்தரமான வெற்றி அல்ல என்பதை சம்மந்தப்பட்ட அனைவருமே முதலில் புரிந்துகொள்ளவேண்டும்.

'மக்களை விடுவிப்பதற்கான யுத்தம்,' 'பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம்' என எப்படிப்பட்ட வார்த்தைகளைக் கையாண்டு யுத்தத்தை நியாயப்படுத்த முனைந்தாலும் யுத்தம் என்பது அழிவையும், பகையுணர்வையும், பழிவாங்கும் மனோபாவத்தையும்தான் கொண்டுவரும்.

"யுத்தத்தில் தோற்றவனும் இல்லை வென்றவனும் இல்லை" என்பது வெறும் வார்த்தை மட்டுமல்ல, அதுவே உலகத்தினுடைய யுத்த வரலாறாகவும் உள்ளது. யுத்தவெற்றி என்பது நிரந்தரமானதல்ல எனும்போது தோற்றவன் மீண்டும் வெற்றியாளனாவதும், வெற்றிகொண்டவன் தோற்றவனாவதும் சுழற்சிமுறையில் தொடரும் நிலைப்பாடாகும். எனவே எங்கோ ஓர் இடத்தில் யுத்தம் நிறுத்தப்பட்டே ஆகவேண்டும். அது உண்மையென்றால் ஏன் இந்த அழிவின் யுத்தத்தைத் தொடவேண்டும். அருமையான மனித உயிர்களை அழித்தொழித்துவிட்டு யுத்தத்தில் களைப்படைந்த நிலையில் இனிப் பேசித் தீர்வுகாண்போம் என ஒருநாள் இருதரப்பும் வரவேண்டிய நிலை இருக்குமென்றால் ஏன் அந்த நாள் இந்த நாளாக இருக்கக்கூடாது. காலம் கடந்த ஞானம் வேண்டாம். அழிவுகள் தொடர அனுமதிக்க வேண்டாம்.

பொதுமக்கள் இருதரப்பாலும் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள்

யுத்த முனையில் சிக்கியுள்ள, யுத்தத்தில் சம்மந்தப்படாத அப்பாவிப் பொதுமக்களைப் பாதுகாக்கும் பொறுப்பு அரசபடைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் உண்டு. ஆனால் இருபகுதியினரும் மக்களின் உயிரிழப்புக்கள் குறித்து அக்கறைப்படுவதாகத் தெரியவில்லை. யுத்த காலங்களில் கடைப்பிடிக்கப்படவேண்டிய சர்வதேச மனிதாபிமானச் சட்டங்கள் பொதுமக்களின் பாதுகாப்புக்குறித்து மிகத்தெளிவான வரையறைகளை முன்வைத்திருக்கும் சூழ்நிலையில் அவைகுறித்து யாரும் அலட்டிக்கொள்வதாகத் தெரியவில்லை. இந்நிலையில் பொதுமக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகள், உயிரிழப்புக்கள் வகைதொகையின்றி தொடர்கின்றன. உண்மையான இழப்புக்கள் குறித்த தகவல்கள் ஊடகங்கள் மூலம் வெளிவராமல் மூடிமறைக்கப்படுகின்றன.

எனவே மனிதாபிமானத்தின் பெயரால் வேண்டுகோள்விடுக்கின்றோம். யுத்தத்தில் நம்பிக்கை வைக்காமல் பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண சம்மந்தப்பட்ட இரு தரப்பினரும் முன்வரவேண்டும். மனித அவலங்களும், உயிர் இழப்புக்களும் உடனடியாக முடிவுக்குக்கொண்டுவரப்படவேண்டும். மனித உயிர்களின் மாண்பு பேணப்படவேண்டும்.

யுத்த களத்திலிருந்து வெளியேற மக்கள் அனுமதிக்கப்பட வேண்டும்

யுத்தத்தோடு தொடர்பில்லாத அப்பாவி மக்களை யுத்தகளத்திலிருந்து வெளியேற விடுதலைப் புலிகள் அனுமதிக்கவேண்டும். இது தொடர்பாக இலங்கையின் தமிழ் ஆயர்களும் விடுதலைப்புலிகளின் தலைவரிடம் கூட்டாக அவசர வேண்டுகோள் விடுத்துள்ளனர். யுத்தமுனையில் அகப்பட்டுக் காயப்படுத்தப்பட்டும், கொலைசெய்யப்பட்டும் உள்ள மக்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்தவண்ணமே உள்ளது. தம் அன்புக்குரியவர்களைப் பறிகொடுத்து வேதனையில் துடிக்கும் மக்கள், அங்கங்களை இழந்த நிலையில் எதிர்காலத்தை நினைத்து ஏங்கும் மக்கள் போன்றோரின் நிலைமைகள் மிகவும் பயங்கரமானது, பரிதாபகரமானது. இத்தகைய இழப்புக்கள் ஈடுசெய்யப்பட முடியாத பேரிழப்புக்களாகும்.

இன்றைய ஆபத்தான சூழ்நிலையில் மக்கள் தமக்கு பாதுகாப்பு எனக் கருதுகின்ற இடங்களுக்கு நகர்ந்து தமது பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்ள அவர்களுக்குள்ள உரிமையை அனைத்துத் தரப்பினரும் உறுதிசெய்ய வேண்டும் என விநயமாக வேண்டுகோள் விடுக்கின்றோம்.

மீண்டும் மறுமடலில் சந்திக்கும்வரை
அன்புடன் - அருட்பணியாளர் நேசன்,
பதிப்பாசிரியர்

வாசகர் எண்ணங்கள்

புன்னகையோடு காத்திருக்கிறேன்

என் இனிய மன்னாவே
என் தோழியே! மாதம்தோறும்
புன்கையோடு காத்திருக்கின்றேன்
உன் வரவுக்காய்.
நீ சுமந்து வரும் அத்தனை அம்சங்களும்
இனிமையிலும் இனிமை!
வரிசையாய் வரும் வாசகர் எண்ணங்கள்,
கவிதைகள், சிறுகதைகள் அனைத்தும்
என்னை மகிழவைக்கும் அம்சங்களாகும்.
இனிய மன்னாவே,
மீண்டும் உன் அம்சங்களைக் காண
ஆசையோடு காத்திருக்கிறேன்.
அன்பான மன்னாவே,
உனக்கு என் இதயம் கனிந்த வாழ்த்துக்கள்!

பி. கரோலின் மெடோனா - தோட்டவெளி, மன்னார்.

உன் மடலில் வர ஆசைப்பட்டேன்

முகிலைத் தூதுவிட்டேன்
அது மறைந்துவிட்டது.
மழையைத் தூதுவிட்டேன்
அது ஓய்ந்துவிட்டது.
கடல் அலையைத் தூதுவிட்டேன்
அது காணாமல்போய்விட்டது.
காற்றைத் தூதுவிட்டேன்
அது நின்றுவிட்டது.
கடைசியில் இக்கவிதையினைத் தூதாக எழுதுகிறேன்.
மன்னாவே, என் நிலையைக் கொஞ்சம் உணர்வாயா?
மாதத்தில் ஒருமுறையாவது உன் மடலில்வர ஆசைப்பட்டேன்
அதுவும் கைகூடவில்லை.....!
வருடத்தில் ஒரு முறையாவது
உன் மடலில் பூவாய் மலர்ந்து வர
விடைகொடுப்பாயா?

ஜெ. செல்வராஜ் (தாசன்) ஒலிமடு, நானாட்டான்.

இன்றைய சமகாலச் சூழமைவில் தவக்காலச் சிந்தனைகள் – எழுத்துருவாக்கம் : திரு. சிங்கிளாயர் பீற்றர்

இயேசுவின் சிலுவைப் பயணத்தில் உதவிபுரிந்த சீரேனே ஊர்ச் சீமோன்கள் இன்றும் செயலாற்றுகின்றனர்

உலகிலுள்ள கிறிஸ்தவர்களில் பெரும்பாலானவர்கள் தவக்காலத்தின் 40 நாட்களும் இயேசுவின் பாடுகளைத் தியானித்து மனமுருகி, தானம் வழங்கி, சிலுவைப்பாதை சுற்றி பாவத்திற்காக அழுது புலம்பி நோன்பிருப்பர். ஆனால் இலங்கையில் 40 சதுரக் கிலோ மீற்றர் பரப்பளவிலுள்ள 3 இலட்சம் இந்து, கிறிஸ்தவ, பிறசமய மக்கள் செயற்கையின் கோரத்தாண்டவத்தினால் அனுபவிக்கும் வேதனைகளோ சொல்லில் அடங்காது. இந்தப் போர்க்காலச் சூழ்நிலையில் அன்று இயேசுவுக்கு உதவிபுரிந்த சீரேனே ஊர்ச் சீமோன்கள் இன்றும் பல்வேறு வழிகளில் துன்புறும் இயேசுக்களுக்கு உதவுகின்றனர். இவர்களை எண்ணிப்பார்த்து ஆண்டவருக்கு நன்றிகூறுவதும் அந்தச் சீமோன்களாக நாமும் ஏதோ ஒருவகையில் மாறிச் செயல்படுவதும் இன்றைய காலத்தின் கட்டாயமாகும்.

1990ம் ஆண்டு தமது சொந்த வாழ்விடத்தை 48 மணித்தியாலத்தில் வலோத்காரமாக இழந்த எமது யாழ், வவுனியா, மன்னார் முஸ்லிம் சகோதரர்களை எண்ணிப்பார்க்கின்றோம். இவர்கள் கடல் மார்க்கமாக மழையிலே நனைந்து வெயிலில் தவித்து புத்தளம், மதவாச்சி, அநுராதபுரம் செல்வதற்கு உதவிய நல்லிதயம் படைத்த தமிழ், இந்து, கிறிஸ்தவ மக்களில் .....

கடந்த 18 வருடங்களாக இவர்களுக்கு அளப்பெரிய உதவிகள் புரிந்த புத்தளம், மதவாச்சி, அநுராதபுரத்திலுள்ள முஸ்லீம் மக்களில், அற்புதமாக மீள்குடியேற்றம் செய்ய உதவிய அரச, அரசசார்பற்ற ஊழியர்களில் .....

1995ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இருந்து (இஸ்ராயேல் மக்கள் எகிப்தில் இருந்து புறப்பட்டு வந்ததைப்போன்று) 5 இலட்சம் மக்கள் மூன்றே நாட்களில் யாழ் ஏரியைக் கால்நடையாகக் கடந்து, கிளாலிக்கு வந்து, பூநகரி, கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற இடங்களில் நான்கு ஐந்து வருடங்கள் தங்கியிருந்தபோது அவர்களுக்கு அன்பும், ஆதரவும், புகலிடமும் வழங்கிய வன்னி மக்களில் .....

2007ம் ஆண்டில் மனிதநேயப் பணி எனக்கூறி ஆரம்பிக்கப்பட்ட சமாதான யுத்தத்தினால் 5 இலட்சம் மன்னார், வவுனியா கிளிநொச்சி, முல்லைத்தீவு வாழ் இந்து, கிறிஸ்தவ, கிறிஸ்தவமல்லாத மக்கள் 12 தடவைகளுக்குமேல் இடம்பெயர்ந்தபோது அரசின் கோரிக்கையினால் சகல அரச அரசசார்பற்ற நிறுவனங்களும் வெளியேற்றப்பட்டபோது தனியாக இருந்து கடமையாற்றிய சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் (ICRC), உலக உணவு ஸ்தாபனம் (WFP), ஒருசில மனிதநேய அரச ஊழியர்கள், கிறிஸ்தவ, இந்துப் பிரதிநிதிகள், கறிற்றாஸ், கியூடெக், வாழ்வுதயம் போன்ற ஸ்தாபனங்கள், முல்லை மாவட்ட இளைஞர்கள், கடமையே கண்ணென நினைத்து செல் மழை, விமானக் குண்டுவீச்சு, கண்ணிவெடி, பல்குழல் எறிகணை போன்றவற்றின் மத்தியில் இரவு பகல் பாராது உண்ணாநோன்பிருந்து அரும்பணியாற்றிய கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, மாத்தளன் போன்ற இடங்களில் கடமையாற்றிய வைத்தியர்கள், தாதிகள், தொண்டர்கள் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க ஊழியர்கள் போன்றோரில் .....

போர் உச்சக்கட்டத்தை அடைந்தபோது புற்றீசல்போல் வீடுகளிலும், காடுகளிலும், வீதிகளிலும், பதுங்குகுழியிலும், செல் வீச்சினாலும், துப்பாக்கிச் சூட்டினாலும் மடிந்தும் காயப்பட்டும் உள்ள சிறார்கள், வயோதிபர்கள், பெண்கள், கர்ப்பிணித் தாய்மார் போன்றோருக்கு அன்பு வார்த்தையினால் சிகிச்சைகள் பல புரிந்த வைத்தியர்கள் மத்தியில் ..... இறந்தவர்களையும் காயப்பட்டவர்களையும் சைக்கிளிலும், வண்டிகளிலும், தோளிலும் சுமந்து வைத்தியசாலைகள் எனக் கூறப்படும் சனசமூக நிலையங்கள், புளியமரம், வேப்பமரங்களின்கீழ் இயங்கும் நடமாடும் வைத்திய - சாலைகளுக்கு தூக்கிச்சென்ற தொண்டர்கள் மத்தியில் .....

ஆயிரத்துக்கும் மேற்பட்ட காயப்பட்டவர்களை வவுனியாவுக்கு தரைமார்க்கமாகவும், இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட காயப்பட்டவர்களைத் திருகோணமலைக்கு கடல் மார்க்கமாகவும் அழைத்து வந்த சர்வதேச மற்றும் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க ஊழியர்கள் மத்தியில் ..... அவர்களை ஆதரவோடு ஏற்றுக்கொண்ட இலங்கை இராணுவ, கடற்படை ஊழியர்கள் மத்தியில் .....

திருகோணமலை, வவுனியா, மன்னார், கந்தளாய், செட்டிகுளம், முருங்கன் வைத்தியசாலைகளில் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட கடும் காயமுற்றவர்களையும், கை, கால் இழந்தவர்களையும் மருந்திட்டுக் காப்பாற்றிய, பராமரித்த வைத்தியர்கள், தாதியர், ஊழியர்களில் .....

இவ்வைத்தியசாலைகளில் அரும்பணியாற்றிய கிறிஸ்தவக் குருக்கள், அருட்சகோதரிகள், பொதுநிலைப் பணியாளர்கள், இன்னும் இந்து முஸ்லீம் மத ஸ்தாபனங்கள், பொருட்களைச் சேகரித்து வழங்கிய கிழக்கு மாகாண முஸ்லீம் மக்கள், வர்த்தகர்கள், தொண்டுகள் புரிந்த அன்பிய ஊக்குவிப்பாளர்கள், அறநெறிக் குழுக்கள், ஆலயப் பணிக் குழுக்கள், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினர், சிறப்பாக பணியாற்றிய தொண்டர்கள் போன்றவர்கள் மத்தியில் .....

வவுனியாவிலுள்ள 14 முகாம்களில் நெருக்கிடைகள் மத்தியில் தங்கியுள்ள 35 ஆயிரம் மக்கள் மத்தியிலும் மன்னாரில் 3 முகாம்களில் தங்கியுள்ள 800க்கும் மேற்பட்ட மக்கள் மத்தியிலும் சேவைகள் புரியும் வவுனியா, மன்னார் அரச, அரசசார்பற்ற சிங்கள தமிழ் முஸ்லீம் தொண்டுக் குழுக்கள், இராணுவ பொலிஸ் ஊழியர்கள் போன்றோர் மத்தியில் .....

இயேசுவின் பாடுகளில் உதவிபுரிந்த சீரேனே ஊர்ச் சீமோனைக் கண்டுகொண்டேன்.

இவ்வாறு கடந்த சில வருடங்களாக மக்களுக்கு அரும்பணியாற்றும் அற்புத மக்களைக் கண்டு வியந்துள்ளேன். "சுமை சுமந்து சோர்ந்திருப்போரே நீங்கள் அனைவரும் என்னிடம் வாருங்கள்" என அழைக்கும் இயேசுவின் வார்த்தையின்படி மற்றவர்களின் சுமைகளைக் குறைக்க நாமும் சீமோன்களாக மாறுவோம். அதற்கான சந்தர்ப்பங்கள், சூழ்நிலைகளை நாமே தேடிக்கொள்வோம். இத்தவக்காலம் அதற்கான சிறப்பான காலமாகும். ஒருமுறையாவது வைத்தியசாலைகள் மற்றும் முகாம்களுக்கு சென்று வேதனையில் வாழும் மக்களுடன் உறவாடி சிலுவை சுமக்கும் இயேசுவைக் காண முற்படுவோம்.

இலங்கை கத்தோலிக்க ஆயர்கள்.....

1ம் பக்க தொடர்ச்சி

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து செட்டிகுளம் மெனிக்பாம் பகுதியிலும் வவுனியா நகரிலுமுள்ள நலன்புரி நிலயங்களில் 35,000 இற்கும் மேற்பட்ட மக்கள் தங்கியுள்ளனர். இவர்கள் முகாம்களைவிட்டு வெளியே செல்லவோ அல்லது உறவினர், நண்பர்கள் உட்பட வெளியார் எவரும் இவர்களை சந்திக்கவோ அனுமதிக்கப்படுவதில்லை. இந்த நிலையில் இந்த மக்களின் நிலைமைகள் குறித்து நேரில் பார்வையிடுவதற்காக பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப்பெற்று ஆறு கத்தோலிக்க ஆயர்கள் இங்குள்ள சில நலன்புரி நிலையங்களுக்கு நேரில் விஜயம் செய்தனர்.

ஆயர்கள் இந்த மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து விரிவாகக் கேட்டறிந்தனர். தங்களது நிலைமைகள் குறித்தும் தாங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் அந்த மக்கள் ஆயர்களிடம் தெரிவித்தனர்.

வன்னித் தாக்குதல்களில் படுகாயமடைந்த நிலையில் வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களையும் நேரில் சென்று பார்வையிட்டனர். இதன்பின் அவர்கள் வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் மற்றும் இராணுவ உயர் அதிகாரிகளையும் சந்தித்து கலந்துரையாடினர். பின்னர் இவர்கள் மன்னார் வைத்தியசாலைக்கு விஜயம் செய்து அங்கு சிகிச்சை பெற்றுவரும் வன்னி மக்களையும் சந்தித்து ஆறுதல் கூறினர்.

இடம்பெயர்ந்த மக்கள் படும் துன்ப, துயரங்கள் குறித்து ஊடகங்கள் மூலம் தாங்கள் அறிந்துகொண்டதாகவும் இந்த மக்களின் வாழ்க்கையில் விரைவில் அமைதியேற்பட தாங்கள் வேண்டிக்கொள்வதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

விடுதலைப் புலிகளை அழிக்கின்றோம் என்ற போர்வையில் இலங்கை இராணுவம் அப்பாவி மக்கள்மீது குண்டு வீச்சு நடத்துகிறது.

உணவு, உடை, வீடு, தண்ணீர், மருந்து என அனைத்து வாழ்வுரிமைகளும் மறுக்கப்பட்ட நிலையில் தமிழினமே அழியும் நிலை உள்ளது.

காயப்பட்ட, அங்கங்கள் சிதைக்கப்பட்ட மக்களை அன்றாடச் செய்தியில் காணும்போது நம் நெஞ்சம் பதறுகிறது!

தமிழக ஆயர் பேரவை உணர்வுபூர்வமான அறிக்கை

இந்தியா போன்றே இலங்கையும் ஒரு பன்மைச் சமூகம். அச்சமூகத்தில் பங்கேற்கும் சமூகக் குழுவான தமிழர்கள் நியாயமான கோரிக்கைகளை முன்வைக்கின்றபோது அவர்களைப் பிரிவினைச் சக்திகளாய் கருதி அழித்தொழிக்க முயல்வது சர்வாதிகாரப் போக்காகும். தமிழினப் பிரச்சினையை உள்நாட்டுப் பிரச்சினை என்று கூறி இறையாண்மையின் பெயரில் அப்பாவி மக்களைக் கொன்று குவிப்பதற்கு இலங்கை அரசுக்கு எவ்வுரிமையும் இல்லை. இதனைக் கண்டிப்பதற்கு உலக நாடுகளுக்கு கடமையும் உரிமையும் உண்டு எனத் தமிழக ஆயர் பேரவையின் சார்பில் அதன் தலைவர் மேதகு பேராயர் பீட்டர் பெர்னாண்டோ ஆண்டகை அவர்கள் விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார். இவ்வறிக்கையின் முழு வடிவமும் வருமாறு.

இந்திய நாட்டிலிருந்து சில கல் தொலைவில் அமைந்துள்ள இலங்கையில் நடக்கும் போரும், நாளும் நிகழ்த்தப்பெறும் மனிதக் கொலைகளும் நாகரீகச் சமூகத்தின் துடைக்க இயலாத களங்கமாயுள்ளன. சொந்த மண்ணில் அவர்களால் தங்கி வாழ இயலவில்லை. நாடு கடந்தும் அகதிகளாயினர். சொந்த நாட்டிலும் அகதிகளாயினர். சிங்கள - பௌத்த பெரும்பான்மை இனவாதத்தின் கொடுமை - யினால் தமிழ் மக்கள் சிதைக்கப்படுகின்றனர்.

விடுதலைப் புலிகளை அழிக்கின்றோம் என்ற போர்வையில் இலங்கை இராணுவம் அப்பாவி மக்கள்மீது குண்டு வீச்சு நடத்துகிறது. உணவு, உடை, வீடு, தண்ணீர், மருந்து என அனைத்து வாழ்வுரிமைகளும் மறுக்கப்பட்ட நிலையில் இலங்கைத் தமிழினமே அழியும் நிலை உள்ளது. காயப்பட்ட, அங்கங்கள் சிதைக்கப்பட்ட மக்களைக் குறிப்பாகக் குழந்தைகளை அன்றாடச் செய்தியில் காணும்போது நம் நெஞ்சம் பதறுகிறது.

கடந்த கால் நூற்றாண்டாக நடக்கும் போரில் கொல்லப்பட்ட சிறுபான்மைத் தமிழர்கள் ஏராளம் என்றும், 60,000 பேர் காணாமல்போயுள்ளனர் என்றும் ஐ. நா. சபை அறிவிக்கிறது. அங்கு தமிழினமே அழியும் நிலை உள்ளது. இந்தியா போன்றே இலங்கையும் ஒரு பன்மைச் சமூகம். அச்சமூகத்தில் பங்கேற்கும் சமூகக் குழுவான தமிழர்கள் நியாயமான கோரிக்கைகளை முன்வைக்கின்றபோது அவர்களைப் பிரிவினைச் சக்திகளாய் கருதி அழித்தொழிக்க முயல்வது சர்வாதிகாரப் போக்காகும். தமிழினப் பிரச்சினையை உள்நாட்டுப் பிரச்சினை என்று கூறி இறையாண்மையின் பெயரில் அப்பாவி மக்களைக் கொன்றுகுவிப்பதற்கு இலங்கை அரசுக்கு எவ்வுரிமையும் இல்லை.

(தொடர்ச்சி 9ம் பக்கம்)

தமிழக ஆயர் பேரவையின் தலைவர் பேராயர் மேதகு பீற்றர் பெர்னாண்டோ ஆண்டகை அவர்கள்

அருட்பணியாளர் முரளியின் தாயார் இறைபதம்

கடந்த ஆண்டு குருவாக திருநிலைப் படுத்தப்பட்ட மன்னார் மறைமாவட்ட அருட்பணியாளர் ஏ. முரளிதரன் அவர்களின் அன்புத் தாயார் திருமதி. ஆனந்தநாயகம் அந்தோனியா அவர்கள் கடந்த 03.03.2009 அன்று பிரான்ஸ் நாட்டில் இறைபதமடைந்தார். சில காலமாக இவர் நோய்வாய்ப்பட்ட நிலையில் இருந்தார். இவர் இறக்கும் முன்னர் அருட்பணி. முரளி அவர்கள் பிரான்ஸ் நாட்டிற்குச் சென்று தன் தாயாரைப் பார்த்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

தன் அன்புத்தாயாரின் பிரிவில் துயருற்றிருக்கும் முரளி அடிகளாருக்கும் அவரது சகோதரர்கள், உறவினர்களுக்கும் மன்னார் மறைமாவட்டத் திருச்சபையின் ஆழ்ந்த அனுதாபங்களையும் செபங்களையும் தெரிவிக்கின்றோம். அன்னாரின் ஆன்மா ஆண்டவரின் அமைதியுனுள் இளைப்பாறுவதாக!

வன்னியில் இருந்து வந்துள்ள மன்னார் மறைமாவட்டக் குருக்கள்

வன்னியில் இருந்து அருட்பணியாளர்கள் அருள்நாதன் (அமதி), சத்தியராஜ், ஆரோக்கியம், லக்கோன்ஸ் ஆகியோர் கடந்த 07.03.2009 அன்று கப்பல் மூலம் திருகோண - மலைக்கு வந்து பின்னர் மன்னார் வந்துசேர்ந்துள்ளனர்.

அருட்பணியாளர் நேரு அவர்கள் தொடர்ந்தும் வன்னியில் தங்கியிருந்து மக்கள் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. வன்னியில் பணிசெய்யும் குருக்கள், துறவியர் மற்றும் பயங்கரமான சூழ்நிலையில் வாழும் இலட்சக்கணக்கான மக்களுக்காக தொடர்ந்தும் செபிக்கும்படி இறைமக்களை மன்னா கேட்டுநிற்கின்றது.

மன்னார் மறைமாவட்டக் குருக்களின் பணிமாற்றங்கள்

பங்குத்தந்தையர்கள்:

01. அருட்பணியாளர் அல்பன் இராஜசிங்கம் (அமதி) – வஞ்சியன்குளம்
02. அருட்பணியாளர் செ. ஸ்ரீபன்ராஜா – தாழ்வுபாடு
03. அருட்பணியாளர் சூ. மரியதாஸ் லியோன் – எழுத்தூர் (புதியபங்கு)
04. அருட்பணியாளர் ச. பிரான்சிஸ் மரி டீ கோல் – கோமரசன்குளம்
05. அருட்பணியாளர் செ. வசந்தக்குமார் – கீளியன்குடியிருப்பு
06. அருட்பணியாளர் க. அ. அருள்ராஜ் குரூஸ் – முருங்கன்
07. அருட்பணியாளர் எ. டெனி கலிஸ்ரஸ் – உயிலங்குளம்
08. அருட்பணியாளர் இ. செபமாலை – கற்கடந்தகுளப்பங்கின் குஞ்சுக்குளம் பிரிவு
09. அருட்பணியாளர் ச. சவுல்நாதன் – பம்மைமடுப்பங்கின் தரணிக்குளம் பிரிவு

உதவிப்பங்குத் தந்தையர்கள்:

01. அருட்பணி. சூ. மில்ரன் தேவராஜ் (நியூட்டன்) 2வது உதவிப்பங்குத்தந்தை, வவுனியா
02. அருட்பணியாளர் அ. றஜனிகாந் உதவிப் பங்குத்தந்தை – நானாட்டான்
03. அருட்பணியாளர் அ. றூபன் பெனாண்டோ, 2வது உதவிப் பங்குத்தந்தை, பேசாலை

ஆணைக்குழுக்கள், நிறுவனங்கள்:

1. அருட்பணி. ஸ்ரனி அன்ரனி (அமதி) – விவிலியம், மறைபரப்பு ஆணைக்குழு
2. அருட்பணி. லா. செபஸ்ரியான் குரூஸ் (தி.ப.ச.) – வவுனியா மாவட்ட துறவற சபையினரின் ஆன்மீகக் குரு (பம்பைமடு)
3. அருட்பணி. சூ. டக்ளஸ் மில்ரன் லோகு – அன்பியப்பணியுடன் பாப்பிறையின் மறைபரப்புச் சபைகள்
4. அருட்பணியாளர் ஜே. ஜெ. ஜெகானந்தன் – பேராலய உதவிப்பங்குத்தந்தைப் பணியுடன், மன்னார் மருத்துவமனை ஆன்மீகக்குரு

சர்வதேச சமூகம் உங்களைக் கைவிட்டுவிட்டது போன்ற உணர்வு உங்களுக்கு ஏற்பட்டாலும், எல்லாமே எதிர்மறையான நிலைபோன்று தென்பட்டாலும்

இறைவன் ஒருநாளும் உங்களை மறப்பதில்லை

- திருத்தந்தையின் பிரதிநிதி -

சர்வதேச சமூகம் உங்களைக் கைவிட்டு விட்டது போன்ற உணர்வு உங்களுக்கு ஏற்பட்டாலும், எல்லாமே எதிர்மறையான நிலைபோன்று தென்பட்டாலும் இறைவன் ஒருநாளும் உங்களை மறப்பதில்லை என்று கூறிய திருத்தந்தையின் பிரதிநிதி அவர்கள், இப்படியான வேளைகளில்தான் நாம் எமது விசுவாசத்தில் மிகுந்த உறுதியோடு இருக்க வேண்டுமென்றும், ஏனையவர்களுக்கும் உறுதியூட்ட வேண்டுமென்றும் திருத்தந்தையின் பிரதிநிதி மேதகு மாறியோ செனாறி ஆண்டகை அவர்கள் தெரிவித்தார்.

இலங்கையில் தனது பணியை முடித்துக்கொண்டு சிரியா நாட்டிற்கு வத்திக்கான் தூதுவராகச் செல்கின்ற திருத்தந்தையின் பிரதிநிதி அவர்கள், தான் இலங்கையைவிட்டு போவதற்கு முன்னதாக பெப்ரவரி மாதம் 6ம் திகதி முதல் 8ம் திகதிவரை யாழ்ப்பாண மறைமாவட்டத்திற்கு விஜயம் செய்து ஆயர், குருக்கள், துறவிகள் ஆகியோரைச் சந்தித்தார்.

(தொடர்ச்சி 9ம் பக்கம்)

மன்னா பத்திரிகைப்பணிக்கு பங்காற்றிய அருட்சகோதரி பெனிக்னஸ் அவர்களுக்கு நன்றி

கடந்த 5 வருடங்களாக மன்னார் மறைக்கல்வி நிலையத்தில் பணியாற்றி வந்த அருட்சகோதரி பெனிக்னஸ் (தி.கு) அவர்கள் மன்னா பத்திரிகைப் பணிக்கும் கணிசமான தன் பங்களிப்பை வழங்கியுள்ளார். மன்னா பத்திரிகை ஒப்புநோக்கு (Proof Reading) மற்றும் மன்னா பத்திரிகைக்கான பணத்தை விநியோகஸ்தர்களிடம் இருந்து பெற்று பதிவு செய்வது போன்ற பணிகளைச் செய்து மன்னா பத்திரிகையின் வளர்ச்சிக்குத் தன் சேவையை வழங்கினார்.

தற்போது யாழ்ப்பாணம் பாசையூர் திருக்குடும்ப கன்னியர் இல்லத்திற்கு மாற்றலாகிச் சென்றுள்ள அருட்சகோதரி பெனிக்னஸ் அவர்களுக்கு மன்னா பத்திரிகை நிர்வாகம் தனது மனமார்ந்த நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து நிற்கின்றது.

கோமா நிலையில் இருந்த பெண்ணின் மரணத்துக்கு இத்தாலிய நீதிமன்றம் வழங்கிய அனுமதி தொடர்பாக

திருத்தந்தை கடும் கண்டனம்

உடலியக்கங்கள் செயலிழந்து கோமா நிலையிலிருந்த இத்தாலியப் பெண் ஒருவரின் மரணமடையும் உரிமைக்கான நீதிமன்றப் போராட்டம் 17 வருடங்களுக்குபின் வெற்றிபெற்றுள்ளது.

எலுவானா இங்லாரோ என்ற இந்தப் பெண் (37 வயது), 1992ஆம் ஆண்டு இடம்பெற்ற கார் விபத்தையடுத்து உடலியக்கங்கள் செயலிழந்த நிலைக்குத் தள்ளப்பட்டார். அவரது தந்தையான பெப்பினோ தனது மகளின் இறப்பிற்கு அனுமதிக்கும்படி 1999ஆம் ஆண்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தார்.

இந்நிலையில் இத்தாலியின் உச்ச நீதிமன்றமானது இங்லாரோவுக்கு வழங்கப்பட்டு வந்த குழாய் உணவை நிறுத்த அனுமதி - யளித்துத் தீர்ப்பளித்தது. எனினும் அரசாங்க மருத்துவமனைகள் மேற்படி பெண்ணின் மரணத்துக்கான செயற்கிரமங்களை மேற் - கொள்ள முடியாது என இத்தாலிய சுகாதார அமைச்சு எச்சரிக்கை விடுத்திருந்தது. இதனையடுத்து இங்லாரோ உடின் நகரிலுள்ள தனியார் மருத்துவமனைக்கு அம்புலன்ஸ் மூலம் எடுத்துச்செல்லப்பட்டார். அங்கே அவர் உரிய முறையில் மரணத்தைத் தழுவ ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

இங்லாரோவின் மரணத்துக்கான உரிமை குறித்து நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பிற்கு திருத்தந்தை 16ஆம் ஆசீர்வாதப்பர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். "வேதனைப்படுபவர் -களின் துன்பத்தைக் களைவதற்கு எடுக்கப்பட்ட மோசமான தீர்வாக இது உள்ளது. மிகவும் சரியானது எனத் தோன்றுகின்றபோதும் மரணத்தைத் தீர்வாக வழங்குவது பொறுப்புணர்வு மிக்க செயலல்ல" என திருத்தந்தை கூறியுள்ளார்.

திருக்குடும்பத்தில் விளங்கிய நற்பண்புகளை குடும்பங்கள் கடைப்பிடிக்க வேண்டும்

திருத்தந்தை வலியுறுத்து

உலகின் அனைத்துக் குடும்பங்களும் திருக்குடும்பத்திடம் விளங்கிய விசுவாசம், நம்பிக்கை, பிறரன்பு ஆகிய நற்பண்புகளைக் கடைப்பிடிக்குமாறு அழைப்பு விடுத்துள்ளார் திருத்தந்தை 16ம் பெனடிக்ட்.

குடும்பங்கள், இல்லத் திருச்சபைக்கு மாபெரும் விதத்தில் சான்றுபகர்வதன் மூலம் அகிலத் திருச்சபை மற்றும் உலகளாவிய சமுதாயத்தின் வாழ்வுக்குச் சான்றாக இருக்கின்றன என்றும் திருத்தந்தை கூறினார்.

ஒவ்வோர் இல்லத்தையும் இணைக்கும் அன்புக்கும், வாழ்வை ஆதரிப்பதற்கும் எப்போதும் திறந்த மனதாய் இருக்குமாறும் குடும்பங்களுக்கு அவர் அழைப்பு விடுத்தார்.

இன்றைய நவீன சமூதாயத்தில் குடும்ப வாழ்வுக்குப் பெரும் அச்சுறுத்தலாக இருக்கும் விவகாரங்களில் ஒன்றான வேலையில் பாதுகாப்பின்மை, வேலைவாய்ப்புகளில் அதிகரித்துவரும் நிலையற்ற தன்மை ஆகியவைகளையும் குறிப்பிட்டு உலகில் எல்லா இடங்களிலும் எல்லோருக்கும் மாண்புடன்கூடிய வேலைகள் அமையுமாறு கேட்டுக்கொண்டார்.

மன்னார் மறைமாவட்ட செய்திகள்

மன்னார் வைத்தியசாலையில் உள்ள காயமடைந்த வன்னி மக்களுக்கான

மன்னார்த் திருச்சபையின் பரந்துபட்ட பணிகள்

அருட்பணி. ஜெகானந்தன் தலைமையில் பல துறவற, இல்லறப் பணியாளர்கள் இணைந்து பணியாற்றுகின்றனர்

மன்னார் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் வன்னியில் காயப்பட்ட மக்களின் உடல், உள, ஆன்மீகத்தேவைகளை பூர்த்திசெய்யும் பணியில் மன்னார்த் திருச்சபை முனைப்போடு ஈடுபட்டு வருகின்றது. மன்னார் வைத்தியசாலையின் ஆன்மீகக்குருவாக இருக்கும் புனித செபஸ்தியார் பேராலய உதவிப் பங்குத்தந்தை அருட்பணியாளர் ஜெகானந்தன் அடிகளார் இந்த மக்களின் நலன்களைக் கவனிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவரோடு அருட்சகோதரிகளான லூட்ஸ் மேரி (தி.கு), ஜோசப்பின் மேரி, (தி.கு) எலிசபெத் (தி.கு), றெஜினா (சி.ஐ.சி) ஆகியோரும் மற்றும் அருட்பணியாளர்கள், மன்னார்ப் பேராலயத்தைச் சேர்ந்த பொதுநிலையினர் குழுக்கள் ஆகியோர் இந்த மக்களைச் சந்தித்து ஆறுதல் கூறி, அவர்களுக்குத் தேவையான அத்தியாவசியப்பொருட்களை அரசசார்பற்ற நிறுவனங்கள் ஊடாகப் பெற்றுக்கொடுப்பதில் ஈடுபட்டுள்ளனர்.

மன்னார்த்தீவின் பல்வேறு பங்குகளைச் சேர்ந்த பொதுநிலையினர்கள் குழுக்களாக வைத்தியசாலையைத் தரிசித்து இந்த மக்களைப் பார்வையிட்டு ஆறுதல்கூறுவதுடன் பெருந்தொகையான இந்த மக்களுக்கான சமையல் பணிகளிலும் உதவிபுரிந்து வைத்தியசாலை நிர்வாகத்தின் சுமைகளைக் குறைக்கின்றனர்.

தோட்டவெளிப் பங்கைச் சேர்ந்த பணியாளர்கள் வாரத்தின் செவ்வாய், வியாழன், ஞாயிறு ஆகிய தினங்களில் தொடர்ச்சியாக வருகை தந்து மக்களைச் சந்திப்பதோடு துப்பரவுப் பணிகளிலும் ஈடுபடுகின்றனர். அத்துடன் வங்காலை, அரிப்பு, பள்ளிமுனை, எழுத்தூர், சாந்திபுரம் பங்குகளைச் சேர்ந்த பணியாளர்களும் இப்பணிகளில் ஈடுபடுகின்றனர். மன்னார் சிகையலங்கார சங்கத்தினர் கடந்த 2 மாதங்களாகத் தொடர்ந்து இந்த மக்களுக்கு இலவசமாக முடிதிருத்தும் பணிகளை அன்போடு மேற்கொண்டு வருகின்றனர். (தொடர்ச்சி 9ம் பக்கம்)

அருட்பணியாளர் ஜெகானந்தன்

அளவக்கைப் பங்கில் இளைஞர் ஒன்றுகூடல்

அளவக்கைப் பங்கின் கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தின் 2009ம் ஆண்டிற்கான முதலாவது மாதாந்த ஒன்றுகூடலானது ஆத்திக்குளி ஆலயத்தில் கடந்த 04. 02. 2009 அன்று காலை 9.00 மணியளவில் பங்குத்தந்தை அருட்பணி. டெஸ்மன் குலாஸ் அடிகளார் தலைமையில் இடம்பெற்றது. இதில் 60 இளைஞர் யுவதிகள் கலந்துக்கொண்டனர்.

இந்த ஒன்றுகூடலைச் சிறப்பிக்க மன்னார் மறைமாவட்ட மறைக்கல்வி நிலைய இயக்குனர் அருட்பணி. ஜெயபாலன் அடிகளார் வருகைதந்திருந்தார். நிரந்தர மறைவாழ்வுப் பணியாளர்கள் மூவர் இதில் கலந்துகொண்டு சிறப்புரைகளை வழங்கினர். அருட்தந்தை ஜெயபாலன் அடிகளாரால் வன்னி மக்களுக்கான சிறப்பு நற்கருணை வழிபாடு இடம்பெற்றது. இவ்வழிபாட்டிலே கலந்துகொண்ட இளைஞர், யுவதிகள் கண்ணீரோடு வன்னி மக்களுக்காக மன்றாடினர். இவ்வாறான ஒன்றுகூடல்களைத் தொடர்ந்து நடாத்துவதற்கு எம்மை ஊக்கப்படுத்தி வருகின்ற பங்குத்தந்தைக்கு எமது பங்கு இளைஞர் ஒன்றியத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மன்னார் மறைமாவட்டப் பங்குகளில் இளைஞர்களுக்கான கருத்தமர்வுகள்

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் சவால்களைச் சந்திக்கின்றனர். அதிலும் சிறப்பாக இளைஞர் சமுதாயம் கூடுதலான சந்தர்ப்பங்களில் சவால்களைச் சந்தித்து வருகின்றது. அந்த வகையில் சவால்களை எதிர்கொள்ளாதவர்கள் இந்த உலகில் எவருமில்லை எனலாம். சவால்கள் பல வடிவில், பல சந்தர்ப்பங்களில், பல கோணங்களில் தோன்றலாம். சவால்களை ஒருவர் எதிர்கொள்ளும்பொழுது அவற்றை வாழ்வின் உயர்வுக்கான படிக்கட்டுக்களாக ஏற்றுக்கொள்ளுகின்றவேளையில் அச்சவால்கள் அந்நபரின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் வழிசமைக்கும். எதிர்கொள்கின்ற சவால்களைத் தடைச்சுவர்களாகக் கருதும்பொழுது அவைகள் அதேநபரின் வீழ்ச்சிக்குக் காரணமாக அமையும்.

இந்த வகையில் இளைஞர் சமுதாயம் எதிர்காலத்தை மனதிற்கொண்டு நேர்மறையான குறிக்கோளுடன் செயற்படும் வேளையில் சவால்களைப் படிக்கட்டுகளாகக் கருதி வாழவேண்டுமே ஒழிய அவைகளைத் தடைச் சுவர்களாகக் கணித்து விரக்தியின் விளிம்பிற்குத் தள்ளப்பட்டு ஒளிமயமான எதிர்காலத்தை மழுங்கடித்துவிடக்கூடாது.

இந்தவகையில் இளைஞர்களை வழிப்படுத்துவதற்காக மன்னார் மறைமாவட்ட இளைஞர் ஆணைக்குழுவினால் நெறிப்படுத்தப் -பட்ட இளைஞர் கருத்தமர்வுகள் பல்வேறு இடங்களில் நடைபெற்றன.

பம்பைமடுப்பங்கு இளைஞர்களுக்கு வேப்பங்குளம் ஆலய மண்டபத்தில் தை 24ம் திகதியும், நானாட்டான், அரிப்புப் பங்கு இளைஞர்களுக்கு நானாட்டான் புனித மரியன்னை ஆலயத்தில் தை 31ம் திகதியும், செட்டிக்குளம் பங்கு இளைஞர்களுக்கு செட்டிக்குளம் புனித அந்தோனியார் ஆலய மண்டபத்தில் மாசி 7ம் திகதியும் இக்கருத்தமர்வுகள் இடம்பெற்றன. இதன்போது இளைஞர்களது உள்ளங்களில் நற்சிந்தனை -களை விதைத்தவர்கள் பாராட்டுக்குரியவர்கள். (தொடர்ச்சி 19ம் பக்கம்)

பெரிய கோமரசன்குளம்

பரலோகமாதா ஆலயத்திறப்பு விழா

– ஓர் கண்ணோட்டம் –

வவுனியா மாவட்டத்தில் தனிக் கத்தோலிக்கர் -களைக் கொண்ட பெரிய கோமரசன்குளம் கிராமம் 1904ம் ஆண்டு 4 குடும்பங்களோடு ஆரம்பிக்கப்பட்டது. இக்கிராமம் புனித பரலோக அன்னையைப் பாதுகாவலியாகக் கொண்டுள்-ளது. பல இந்துக் கிராமங்கள் சூழ்ந்துள்ள ஒரேயொரு கத்தோலிக்க கிராமம் இதுவாகும். இன்றுவரை எந்தவித மதக்கலப்பும் இல்லாமல் நூறுவீதமான கத்தோலிக்க விசுவாசிகளைக் கொண்ட கிராமமாக இது திகழ்கின்றது.

ஆரம்பத்தில் ஒரு சிறிய ஓலைக் கொட்டிலால் ஆன ஆலயம் இருந்தது. பின்பு 1933ம் ஆண்டு வவுனியா பங்குத்தந்தையாக இருந்த வணபிதா வேந்தக்கோன் அடிகளாரால் இவ்வாலயம் சிறியளவில் புனரமைப்புச் செய்யப்பட்டது.

பின்பு இன்றைய மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் பெரிய கோமரசன்குளம் பங்கின் தாய்க்கோவிலாக இருக்கின்ற இந்தப் பரலோக மாதா ஆலயத்தைப் பெரிதாக, புதிய ஆலயமாக அமைக்க விருப்பம்கொண்டு அதற்கான சகல ஆலோசனைகளையும் உதவிகளையும் வழங்கினார். பங்கு மக்களும் இப்புதிய ஆலயத்தை அமைப்பதில் ஆர்வம் கொண்டு ஒன்றுமையுடன் செயற்பட்டார்கள்.

இவ்வாறாக 2006ம் ஆண்டு தை மாதம் 15ம் திகதி மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்களாலும் பங்குத்தந்தை அருட்பணி. அ. சகாயநாதன் அடிகளாராலும் இப்புதிய ஆலயத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. மக்களின் பெரும் பங்களிப்பால் பழைய கோவில் இடிக்கப்பட்டு புதிய ஆலயத்திற்கான அத்திவாரம் போடப்பட்டது. ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் என்ற பாகுபாடு இல்லாது அனைவரும் ஆலய வேலைகளில் ஆவலோடு கலந்துகொண்டார்கள்.

இரண்டு தடவைகள் உண்டியல்கள் ஊடாகவும், வேளாண்மை செய்ததன் ஊடாகவும் பெருமளவு நிதி சேகரிக்கப்பட்டது. கோமரசன்குளம் பங்கைச் சேர்ந்த வெளிநாடுகளில் வாழ்கின்றவர்களின் உதவியும் கிடைத்தது. இவ்வாறாக ஆயர் அவர்களின் நிதி உதவியோடும் மக்களின் பெரும் ஒத்துழைப்போடும் இவ்வாலயம் கட்டி முடிக்கப்பட்டு 2008ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 20ம் திகதி மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்களால் ஆசீர்வதிக்கப்பட்டு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு திறந்துவைக்கப்பட்டது.

பங்குத்தந்தை அருட்பணி. அ. சகாயநாதன் அவர்களின் ஊக்கத்தினாலும் அயராத முயற்சியினாலும் கிராம மக்களின் கடின உழைப்பினாலும் ஆலயம் கட்டி முடிக்கப்பட்டது. இன்று சிதம்பரபுரம், ஆச்சிபுரம், எல்லப்பர் மருதங்குளம், கல்நாட்டின குளம், முருகனூர் ஆகிய துணைப் பங்குகளின் தாய்க்கோவிலாக பரலோக மாதா ஆலயம் திகழ்கின்றது.

மனம் தேடும் இறைவனைத் தினம்தோறும் காண்கின்ற மாண்புறு ஆலயமாக இது திகழ்கிறது.

தகவல் : அ. ஸிரோமி - மறையாசிரியர்

தலைமன்னார் பங்கில் போல் றொபின்சன் அடிகளாரின் தியானம்

கடந்த பெப்ரவரி மாதம் 9ம், 10ம் திகதிகளில் தலைமன்னார் பங்கின் தாய் ஆலயமான புனித லோறன்சியார் ஆலயத்தில் அருட்பணியாளர் போல் றொபின்சன் மற்றும் அவருடைய குழுவினரினால் இறைவார்த்தைத் தியானம் நடாத்தப்பட்டது.

அன்றைய தினங்களில் தியான வழிபாடுகள், குணமாக்கும் வழிபாடுகள் நடைபெற்றன. வெவ்வேறு இடங்களிலிருந்து ஏராளமான மக்கள் குணம்பெற வந்தார்கள். நோயினால் வருந்துவோர், உடல் உளப் பாதிப்படைந்தவர்கள், இன்னும் தீராத நோயினால் துன்பமடைந்தோர் எனப் பலரும் உடல், உள, ஆன்மீக நற்சுகம் பெற்றார்கள். பல அற்புதங்கள் நடைபெற்றன. இந்நிகழ்வினை தலைமன்னார் பங்குத்தந்தை அருட்பணியாளர் அவிதப்பர் மற்றும் ஆலய அருட்பணிச்சபையினர் ஆகியோர் கூட்டாக ஒன்றிணைந்து ஒழுங்கமைத்திருந்தனர்.

தகவல் : சி. கொன்சி குரூஸ், தலைமன்னார் மேற்கு, தலைமன்னார்.

தேசிய ரீதியில் ஆங்கில மொழிப் போட்டியில் மூன்றாம் இடம்

கிறிஸ்தவத் திணைக்களத்தினால் சென்ற ஆண்டு ஒக்ரோபர் மாதம் நடாத்தப்பட்ட தேசிய கிறிஸ்தவ இலக்கிய விழாப் போட்டியில் 12 வயதிற்குட்பட்டவர்களுக்கான ஆங்கில மொழி மூலமான பேச்சுப் போட்டியில் கொழும்பு கந்தானை புனித செபஸ்தியார் திருத்தலப் பங்கைச் சேர்ந்த செல்வி சொய்லின் டனிலா பொனிபஸ் அவர்கள் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

சிங்களக் கிறிஸ்தவ இலக்கியத்திற்கு பங்களிப்பாற்றிய "அமரர் அருட்தந்தை ஜெயக்கொடியும் அவரது பாடல்களும்" என்னும் தலைப்பிலேயே இவரது ஆங்கிலப் பேச்சு அமைந்திருந்தது. டனிலாவுக்கு மன்னாவின் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் மகிழ்வோடு தெரிவித்துக்கொள்கிறோம்.

மன்னாரிலிருந்து விடைபெற்றுச் செல்லும் அருட்பணியாளர் பிரான்சிஸ் டானியல் அடிகளார்



அருட்பணியாளர் பிரான்சிஸ் டானியல் (அமதி) அடிகளார் கடந்த மூன்று வருடங்களாக மன்னாரில் உள்ள அமலமரித்தியாகிகளின் ஆன்மீகக் கல்வி நிலையமான 'ஞானோதயம்' இல்லத்தின் மேலாளராகவும் மற்றும் நவசன்னியாசத்திற்குச் செல்லும் மாணவர்களை ஆயத்தப்படுத்தும் பொறுப்பாளராகவும் சிறப்பாகச் செயற்பட்டபின்னர் இவ்வாண்டு பெப்ரவரி மாதத்தில் மன்னாரில் தன் பணியை முடித்துக்கொண்டு விடைபெற்றுச் சென்றுள்ளார்.

இவருடைய பணிக்காலத்தில் இரண்டு நவசந்நியாச மாணவர் குழுக்கள் மன்னார் ஞானோதயத்தில் தங்கியிருந்து 6 மாத காலப் பயிற்சியைப் பெற்றுச் சென்றுள்ளனர். இந்தியா, பாக்கிஸ்தான், பங்காளதேஸ், இலங்கை ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஆரம்ப நவசந்நியாச மாணவர்களே இங்கு பயிற்சிக்காக வந்தனர். நாட்டின் போர்ச்சூழல் காரணமாக இம்மாணவர்கள் தொடர்ந்து மன்னாருக்கு வரமுடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

டானியல் அடிகளார் தற்போது மறைபோதகராக (Missionary) வெளிநாடு செல்வதற்கான ஏற்பாடுகளை செய்துகொண்டிருப்பதாக அறியமுடிகிறது. தனது நகைச்சுவைப் பேச்சுக்களால் மற்றவர்களை மகிழ்விக்கும் சுபாவம் கொண்ட அடிகளார் தொடர்ந்து நற்சுகத்தோடு அன்புப் பணிபுரிய மன்னா சார்பாக வாழ்த்தி நிற்கின்றோம்.

மன்னார் மறைமாவட்டத்தின் திருவழிபாட்டு நாட்காட்டி

ஏப்ரல் மாதம்

03 - பரப்புக்கடந்தான் கர்த்தர் கோயில் திருவிழா
05 - குருத்தோலை ஞாயிறு - புனித வாரம் ஆரம்பம்
06 - புனித எண்ணை அர்ச்சிக்கும் திருப்பலியும், திருச்சடங்கும்
- மாலை 5.00 மணிக்கு மன்னார் தூய செபஸ்தியார் பேராலயம்.
10 - புனித வெள்ளி - உண்ணாநோன்பும், மாமிசத் தவிர்ப்பும்
- குருமடங்களுக்கான நிதி சேகரிப்பு
19 - தூய தோமையார் - கொவ்வங்குளம், குமனாயங்குளம்
- இறை இரக்கப் பெருவிழா
25 - நற்செய்தியாளரான தூய மாற்கு விழா
- காலம் சென்ற யாழ் ஆயர் பேரருட்திரு வ. தியோகுப்பிள்ளை ஆண்டகையின் நினைவு தினம் (2003)

இலங்கைத் திருச்சபைச் செய்திகள்

வன்னியில் சாவின் அகோரப்பிடியில் சிக்கியுள்ள பொதுமக்கள்

செஞ்சிலுவைச் சங்கத்தின் பொறுப்பில் வெளியேற ஒழுங்குகள் செய்யவேண்டும்

விடுதலைப்புலிகளின் தலைவரிடம் தமிழ் ஆயர்கள் உருக்கமான வேண்டுகோள்

வன்னியில் சாவின் அகோரப்பிடியில் சிக்கியுள்ள பொதுமக்களைப் பாதுகாக்கும் பொருட்டு, அவர்கள் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பொறுப்பில் வெளியேற ஒழுங்குகள் செய்யவேண்டும் எனத் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனிடம் தமிழ் மறைமாவட்டங்களின் நான்கு ஆயர்கள் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளனர். இத்தகவலை யாழ் ஆயரின் செயலாளர் அருட்பணியாளர் ஆர். றொசான் அடிகளார் தெரிவித்தார்.

யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம், மட்டக்களப்பு – திருகோணமலை ஆயர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை, மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு, மட்டக்களப்பு துணை ஆயர் பொன்னையா ஜோசப் ஆகியோர் இக்கோரிக்கையை விடுத்துள்ளனர். ஆயர்கள் கூட்டாக தலைவர் பிரபாகரனுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வன்னியில் குறுகிய வட்டத்துக்குள் சிக்குண்டு சாவின் அகோரப்பிடியில் மக்கள் சிக்கித்தவிக்கிறார்கள். அண்மைய தகவல்களின் பிரகாரம் 3 ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். அதேவேளை மூன்று மடங்கானவர்கள் காயமடைந்துள்ளனர். இந்தப் பயங்கர மனித அவலத்தைத் தடுத்து நிறுத்த எடுத்த சகல முயற்சிகளையும் அரசு அலட்சியப்படுத்திக்கொண்டு போரை கொடிய முறையில் முன்னெடுத்துக்கொண்டிருக்கின்றது. எம் அருமை வன்னிவாழ் மக்கள் பூண்டோடு அழிந்துபோக தாங்கள் அனுமதிக்கமாட்டீர்கள் என்ற நோக்கில் இந்த வேண்டுகோளை தங்கள் உடனடி நடவடிக்கைக்காக மிக உருக்கமாக நான்கு ஆயர்களாகிய நாங்கள் சமர்பிக்கின்றோம் என அக்கோரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஊடகத்துறையில் ஈடுபடுகின்ற ஒவ்வொருவரும் தியாகிகளே!

தொண்டன் இதழின் ஆசிரியர் அருட்பணி. றொகான் பேர்னாட் உரை

ஊடகத்துறையில் ஈடுபடுகின்ற எழுத்தாளர்கள் எல்லாரும் தியாகிகளே. தமது நேரம், பணம், பொழுதுபோக்கு இவற்றிற்கு மேலாக தமது உயிரையே துச்சமாக மதித்து ஊடகத்துறையினர் இன்று பணிபுரிகின்றனர் என்று தொண்டன் சஞ்சிகையின் ஆசிரியரும் திருமலை மட்டுநகர் மறைமாவட்ட சமூகத் தொடர்பு நிலைய இயக்குனருமான அருட்பணியாளர் றொகான் பேர்னாட் அடிகளார் கூறினார்.

திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் 'தொண்டன்' இலக்கிய மாத சஞ்சிகையின் 40வது ஆண்டு (1969-2009) நிறைவு நிகழ்வு திருகோணமலை புனித மரியாள் பேராலய அரங்கில் நடைபெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து அங்கு உரையாற்றுகையில்,

இந்திய விடுதலைப்போராட்டத்தில் பங்கேற்பதிலிருந்து ஊடகத்துறையினருக்கு மகாத்மா காந்தி விலக்களித்தார். இதனால் ஏமாற்றமடைந்த ஊடகத்துறையினர் காந்திஜியைச் சந்தித்து, "நாம் தியாகம் செய்யமாட்டோம் என்பதனாலா எம்மை விடுதலை போராட்டத்திலிருந்து விலக்கி வைத்துள்ளீர்கள்?" என்று கேட்டனர். அதற்கு காந்திஜி அவர்களைப் பார்த்து, "அப்படியல்ல. பத்திரிகைகளில் நீங்கள் பணிபுரிவதே தியாக வாழ்க்கை. அதனால்தான் விதிவிலக்கு" என்று பதிலளித்தார்.

ஊடகத்துறையினர் அனைவருமே தியாகிகள், போற்றுதற்குரியவர்கள் என்றும் அருட்பணி. றொகான் பேர்னாட் தெரிவித்தார்.

மனிதர்கள் கற்குகைகளில் வாழ்ந்த காலத்தில் குகைகளுக்கு வாயில் காவலர்களை நியமித்தனர். வெளியே இடம்பெறும் வழமைக்கு மாறான நிகழ்வுகளை, விலங்குகளின் நடமாட்டங்களை மற்றும் அபாயங்களை உடனே பறை மூலமோ வேறு குறிகள் மூலமோ குகைக்குள் இருப்பவர்களுக்கு அறிவிப்பது வாயிற்காப்போனின் கடமையாகும்.

இன்று இந்த வாயிற் காவலனின் பணியைத்தான் ஊடகத்துறையினர் ஆற்றிவருகின்றனர். ஊடகங்கள் வழங்குகின்ற அறிவிப்பை ஆய்வுசெய்து முடிவெடுப்பவர்கள் மக்களே என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

அருட்பணி. விமல் அவர்களின் ... 20ம் பக்க தொடர்ச்சி

இசைதொகுப்பின் முதல் பிரதியை மட்டக்களப்பு புனித சிசிலியா மகளிர் கல்லூரி அதிபர் அருட்சகோதரி எலிசபெத் அவர்கள் பெற்றுக்கொண்டார். இசைத் தொகுப்பு பற்றிய மதிப்பீட்டை அருட்பணியாளர் ஜெயபாலன் அவர்கள் வழங்கினார்.

சமகாலப் போரின் அழுத்தங்கள் நிறைந்த வாழ்வியல் சூழ்நிலைகளை பின்னணியாகக் கொண்டு இந்த இசைத்தொகுப்பின் பாடல்கள் அமைந்துள்ளன. பாடல் வரிகள் நாளாந்த துன்ப அனுபவங்களோடு இணைந்ததாக இருப்பதைக் காணமுடிகிறது. இசையும் அதற்கு ஏற்ற உணர்வை வரவழைப்பதாக உள்ளது. இந்த இசைத்தொகுப்பின் சிறப்புக்களை மதிப்பீட்டுரை வழங்கிய ஜேபாலன் குரூஸ் அடிகளார் இந்நிகழ்வின்போது சிறப்பாக எடுத்து விளக்கினார்.

இந்தியாவில் ஒலிப்பதிவு செய்யப்பட்ட இப்பாடல்களை இந்தியாவின் பிரபல பாடகர்களான மனோ, ஹேமா அம்பிகா, நித்யாஸ்ரீ சுவாதி, பேபி திவ்வியா, ஜெயதேவ், ரோசினி, கௌசிக், தினேஸ், தேவி ஆகியோர் பாடியுள்ளனர்.

மன்னாரைச் சேர்ந்தவரும் தற்போது இந்தியாவில் இசையமைப்பாளராகப் பணியாற்றி வருபவருமான திரு. ஜேக்கப் விமல்ராஜ் அவர்கள் இந்த இசைத் தொகுப்பிற்கான இசை ஒழுங்கமைப்பைச் செய்துள்ளார். அருட்பணியாளர் விமல் அவர்கள் இத்தொகுப்பில் உள்ள பாடல்களை எழுதி இசை அமைத்து வெளியீடு செய்துள்ளார். இத்தொகுப்பு விமல் அடிகளாரின் இரண்டாவது முயற்சியாகும். ஏற்கனவே இவர் 'இரங்குமையா' என்ற இசைத்தொகுப்பையும் வெளிக்கொணர்ந்துள்ளார். அருட்பணி. விமல் அவர்களுக்கு மன்னாவின் வாழ்த்துகளும் பாராட்டுக்களும்.

இந்த இசைத்தொகுப்பின் விலை 200.00 ரூபா. இதை மன்னாரில் உள்ள வளனகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கரவெட்டியில் கார்மேல் சபையினரின் பொன்விழா நிகழ்வு

யாழ் கரவெட்டிப் பங்கில் காலடி பதித்ததன் ஐம்பதாவது ஆண்டு நிறைவை அப்போஸ்தலிக்க கார்மேல் சபைக் கன்னியர்கள் நினைவுகூர்ந்து இறைவனுக்கு நன்றிகூறினார்கள். இதையொட்டிய நன்றித்திருப்பலி கடந்த 14ம் திகதி சனிக்கிழமை காலை 11.00 மணிக்கு கரவெட்டி புனித அந்தோனியார் ஆலயத்தில் யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

யாழ் மறைமாவட்டத்தில் கல்விப்பணிபுரிவோர் இடமாற்றம்

யாழ் இளவாலை புனித கென்றியரசர் கல்லூரி அதிபர் அருட்பணி. ஜேம்ஸ் சிங்கராயர் காவலூர் புனித அந்தோனியார் கல்லூரி அதிபராகவும், காவலூர் புனித அந்தோனியார் கல்லூரி அதிபர் அருட்பணி. ஜே. ஏ. யேசுதாஸ் இளவலை புனித கென்றியரசர் கல்லூரி அதிபராகவும் பொறுப்பேற்றுள்ளார்கள். அத்துடன் அருட்பணி. றொபின்சன் தனது கல்விப்பணியைத்தொடர காவலூர் புனித அந்தோனியார் கல்லூரிக்கு மாற்றலாகிச் சென்றுள்ளார்.

இறந்த உடல்களை அடக்கம் செய்வதும், காயங்களுக்கு கட்டுப்போடுவதும்தான் எமது அன்றாடக் கடமைகளாகிவிட்டன!

வன்னியிலிருந்து அருட்பணியாளர் அன்ரன் றொக்

கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாகக் காடுகள், கரம்பைகள், பதுங்குகுழிகள் என்று அலைந்து நாய்படாப் பாடுகள் பட்டுக்கொண்டிருக்கும் நாமும் எமது மக்களும் தற்போது வலைஞர் மடத்தில் 'தஞ்சம்' புகுந்து எம்மைக் காப்பாற்ற யாராவது வருவார்கள் என்ற நம்பிக்கையுடன் இறைவனைப் பிரார்த்தித்துக்கொண்டு வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். இறந்த உடல்களை அடக்கம் செய்வதும், காயங்களுக்கு கட்டுப்போடுவதும், மக்களின் கண்ணீரைத் துடைப்பதும்தான் எமது அன்றாடக் கடமைகளாகி-விட்டன. அடுத்த கட்டம் கடலுக்குள் பாய்வதைத் தவிர வேறொன்றுமில்லை.

இவ்வாறு வட்டக்கச்சி பங்குத்தந்தையும் தற்போது இடம்பெயர்ந்து வலைஞர்மடத்தில் பணிபுரிபவருமான அருட்தந்தை அன்ரன் றொக் அடிகளார் தொலைபேசியில் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், வன்னியில் பணியாற்றும் அநேகமான குருக்கள் தற்போது என்னோடு இருக்கின்றார்கள். எம்மால் இயன்றவரையில் மக்களுக்கான ஆன்மீகப் பணிகளைச் செய்துவருகின்றோம்.

பயங்கரம் நிறைந்த ஓர் சூழ்நிலையில் வாழ்ந்துகொண்டிருக்கும் மக்களுக்கு தற்போது சாப்பிடுவதற்கு எதுவுமில்லாத ஒரு நிர்ப்பாக்கியநிலை தோன்றியுள்ளது. இப்படியான ஓர் துன்பத்தை அனுபவிக்க இறைவன் எம்மைத் தேர்ந்தெடுத்தது ஏன்? எமது மக்களின் விடுதலைக்காக நாம் உங்களுடைய பங்களிப்-பைத்தான் எதிர்பார்த்து நிற்கின்றோம். நீங்கள் உங்கள் முயற்சிகளில் சோர்வடைந்து எம்மை மறந்துவிடவேண்டாம் என்று அவர் உருக்கமான வேண்டுகோள் விடுவித்தார்.

திருச்சிலுவைக் கன்னியர்களின் நித்திய அர்ப்பணம்

திருச்சிலுவைக் கன்னியர் சபையைச் சேர்ந்த அருட்சகோதரிகளாகிய பத்தாவத்தையைச் சேர்ந்த வேர்ஜினி எட்வேட் ராஜா, மாதகலைச் சேர்ந்தவரும் இரணைப்பாலையை வசிப்பிடமாகக் கொண்டவருமான ஜெயசீலி சிங்கராஜா, யூலனூரைச் சேர்ந்த விஜயா ஆசீர்வாதம் ஆகிய மூவரும் கடந்த ஜனவரி மாதம் 31ம் திகதி தமது பணிவாழ்வை இறைவனுக்கு நித்தியமாக ஒப்புக்கொடுத்து நித்திய வாக்குத்தத்தம் செய்துகொண்டார்கள்.

யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் யாழ்ப்பாணம் கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்ட சிறப்புத் திருப்பலியின்போது இடம்பெற்ற இந்த நித்திய வாக்குத்தத்தச் சடங்கை திருச்சிலுவை கன்னியர் சபையின் மாகாணத் தலைவி அருட்சகோதரி இமாக்குலேற் அவர்கள் நிறைவேற்றிவைத்தார். நித்திய அர்ப்பணத்தின்போது எடுக்கப்பட்ட படத்தைக் கீழே காணலாம். நித்தியமாகத் தம்மை அர்ப்பணித்த சகோதரிகளுக்கு மன்னாவின் வாழ்த்துக்களும் செபங்களும் உரித்தாகுக.

உங்கள் பிள்ளைகளுடைய ஆன்மீக வளத்தையா அன்றேல் பொருளாதார வளத்தையா எதிர்பார்க்கிறீர்கள்?

கொழும்புப் பேராயர் பெற்றோரிடம் கேள்வி எழுப்புகிறார்

மரியாளும் யோசேப்பும் இயேசுவைத் தேவாலயத்துக்கு அழைத்துச் சென்றனர். அவர் தன்னிடம் கையளிக்கப்பட்ட பணியை ஆரம்பிக்கும் முன்னர் அவர் ஆன்மீகப் பலம் பெறவேண்டும் என்று அவர்கள் எதிர்பார்த்தனர். விரைவான மாற்றத்தை அடைந்துகொண்டு வரும் இன்றைய உலகில் நீங்கள் இன்று உங்கள் பிள்ளைகளுடைய ஆன்மீக வளத்தையா?, அன்றேல் கல்வி வளத்தையா? அன்றேல் பொருளாதார வளத்தையா? எதிர்பாக்கிறீர்கள் என்று வினாவெழுப்பினார் பேராயர் மேதகு ஒஸ்வோல்ட் கோமிஸ் ஆண்டகை.

2009 ஜனவரி 02ம் நாள் தேவத்தையில் இடம்பெற்ற திருவிழா ஆசீரின்போதே அவர் இவ்வாறு கூறினார். இறைமக்களுக்கு விசேடமாகப் பெற்றோருக்கு எச்சரிக்கைவிடுத்து அவர் கூறியது, "உங்கள் பிள்ளைகளுக்காகப் பணம் சேகரிப்பது நல்லது. ஆனால் உங்கள் பிள்ளைகள் ஞானத்திலும் உடல் அளவிலும் வளர்ச்சி-யடையும்போது அவர்கள் சிறந்த மனிதர்களா-கவும் வாழ்வில் வெற்றியீட்டும் நோக்கத்தைக் கொண்டவர்களாகவும் இருக்க வேண்டும் என்பதை அவர்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டுமென்று கூறினார்.

நாம் எமது பிள்ளைகளுக்கு நற்-குணங்களையும் நீதியையும் கற்பிப்பதோடு அவர்களை இறைவனுக்கு நெருக்கமாகக் கொண்டுவர முயற்சிக்க வேண்டும். திருக்குடும்பத்தை மாதிரியாகக் கொள்ளுங்கள். இயேசு, மரியாள், சூசை ஆகியோரது அர்ப்பணத்தால் நீங்களும் பலப்படுங்கள் என அவர் மேலும் கூறினார்.

திருத்தந்தையின் தவக்கால மடல்

பாவத்தையும், அதற்கு இட்டுச் செல்லும் அனைத்து வழிகளையும் தவிர்க்க உதவும்

உண்ணா நோன்பு!



"அவர் நாற்பது நாள் இரவும், பகலும் நோன்பிருந்தார். அதன்பின் பசியுற்றார்" (மத் 4:1-2)

அன்பார்ந்த சகோதர, சகோதரிகளே!

நம்முடைய வழிப்பயணத்தில் மிகவும் ஆழமான ஆன்மீகத் தயாரிப்பை மேற்கொள்ளக் கொடுக்கப்பட்டிருக்கிற இத்தவக் காலத்தின் தொடக்கத்தில், இத்திருவழிபாடு, திருவிவிலியத்திற்கும், கிறிஸ்தவ பாரம்பரியத்திற்கும் உகந்த ஒப்புரவு செயல் வகைகளான செபம், ஈகை மற்றும் உண்ணா நோன்பு ஆகிய மூன்றை முன்னிலைப்படுத்தி, ஆண்டவருடைய உயிர்ப்புப் பெருவிழாவை நன்கு கொண்டாட நம்மைத் தயாரிக்கின்றது. இதன் மூலமாக "அக்கிரமங்களை ஒழிக்கிறது, குற்றங்களைக் கழுவிப்போக்குகின்றது, தவறினோருக்கு மாசின்மையையும், துயருற்றோருக்கு மகிழ்ச்சியையும் அளிக்கிறது, பகைமையை விரட்டுகின்றது, ஆணவத்தை அடக்குகின்றது., உள ஒற்றுமையை உருவாக்குகின்றது." (பாஸ்கா புகழுரை) என்ற இறைவனின் வல்லமையை பாஸ்கா திருவிழிப்பின்போது நம்மால் உய்த்துணர முடியும்.

இவ்வாண்டிற்கான தவக்காலச் செய்தியை, மிகவும் சிறப்பாக என் சிந்தனைகளை "உண்ணா நோன்பின் நன்மையும், அதன் அர்த்தமும்" என்ற தலைப்பில் மையப்படுத்த நான் விழைகின்றேன். இத்தவக்காலம் சிறப்பாக நம்முடைய ஆண்டவர் தம்முடைய பணி வாழ்வை ஆரம்பிப்பதற்கு முன்பு பாலைநிலத்தில் நாற்பது நாட்கள் மேற்கொண்ட நோன்பினை நினைவுபடுத்துகின்றது.

"இயேசு அலகையினால் சோதிக்கப்படுவதற்காகப் பாலைநிலத்திற்குத் தூய ஆவியினால் அழைத்துச்செல்லப்பட்டார். "அவர் நாற்பது நாள் இரவும் பகலும் நோன்பிருந்தார். அதன்பின் பசியுற்றார்." (மத்.4:1-2) என்று நற்செய்தியில் நாம் வாசிக்கின்றோம். உடன்படிக்கையின் வார்த்தைகளான பத்துக் கட்டளைகளை ஆண்டவரிடமிருந்து பெறுவதற்கு முன்பாக நோன்பிருந்த மோசேயைப்போல, ஒரேபு என்ற மலையின்மீது ஆண்டவரைச் சந்திப்பதற்கு முன்பாக நோன்பிருந்த எலியாவைப்போல (1அர. 19:8) இயேசுவும் செபம் மற்றும் நோன்பு வழியாகத் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பணியை மேற்கொள்ள தம்மையே தயாரித்தார். அதன் தொடக்கத்தில் சோதிப்பவனோடு கடுமையாகப் போராடினார்.

நன்மை என்று நாம் கருதுகிற, நம் உடல் வளர்ச்சிக்கு உதவுகிற ஒருசிலவற்றிலிருந்து நாம் விலகி இருப்பதில் கிறிஸ்தவர்களாகிய நமக்கு அப்படியென்ன பலன் இருக்கிறது என்று நாம் ஆச்சரியப்படலாம். பாவத்தையும் அதற்கு இட்டுச் செல்லும் அனைத்து வழிகளையும் தவிர்க்க நோன்பு உதவுவதாகத் திருவிவிலியமும் ஒட்டுமொத்த கிறிஸ்தவப் பாரம்பரியமும் கற்பிக்கின்றன. இந்தக் காரணத்திற்காகத்தான் நோன்பை வரவேற்கக்கூடிய தருணங்கள் நிறைந்ததாக மீட்பின் வரலாறு உள்ளது.

திருவிவிலியத்தின் தொடக்கத்தில் "ஆண்டவர் விலக்கப்பட்ட கனியை உண்ணலாகாது" என்று ஆணையிடுகிறார். "ஆண்டவராகிய கடவுள் மனிதனிடம், 'தோட்டத்தில் இருக்கும் எந்த மரத்திலிருந்தும் உன் விரும்பம்போல் நீ உண்ணலாம். ஆனால் நன்மை - தீமை அறிவதற்கு ஏதுவான மரத்திலிருந்து மட்டும் உண்ணாதே. ஏனெனில் அதிலிருந்து நீ உண்ணும் நாளில் சாகவே சாவாய்' என்று கட்டளையிட்டுச் சொன்னார்" (தொ. நூ. 2:17) இந்தத் தெய்வீக் ஆணையைக் குறித்துச் சிந்திக்கின்றபோது, புனித பசில் "விண்ணகத்திலேயே நோன்பு தீர்மாணிக்கப்பட்டிருக்கின்றது" என்றும், "ஆதாமுக்கு இடப்பட்ட முதல் கட்டளையே இதுதான்" என்றும் குறிப்பிடுவார். மேலும் "உண்ணாதே என்பதுதான் நோன்பு மற்றும் சுத்த போசனத்திற்கான விதியாகும்" என்று கூறி முடிப்பார்.

பாவத்தாலும், அதன் விளைவுகளாலும் நாம் உள்ளிழுக்கப்பட்டு பலவீனப்படுத்தப்படுவதனால் இறைவனோடு நாம் கொண்டிருக்கிற தோழமையை, உறவை மீண்டும் சரிசெய்ய நோன்பு ஒரு கருவியாக முன்மொழியப்படுகிறது. நாடு கடத்தப்பட்ட நிலையிலிருந்து மீண்டும் வாக்களிக்கப்பட்ட நாட்டிற்குப் பயணத்தை மேற்கொள்ளத் தயாரிக்கிறவிதமாக, ஒன்றுகூட்டப்பட்ட மக்களை நோன்பிருக்க இறைவாக்கினர் எஸ்ரா வலியுறுத்துகிறார். இதன் மூலம் நாம் கடவுள்முன் நம்மையே தாழ்த்திக்கொள்ள முடியும் (எஸ்ரா 8:21) என்றுரைத்தார். "அவருடைய செபங்களுக்கு செவிமடுத்த இறைவன் தம்முடைய அருளையும், பாதுகாப்பையும் உறுதிப்படுத்தினார். அதேவழியில் இறைவாக்கினர் யோனாவின் அழைப்பை ஏற்று மனம் வருந்தி, உண்ணா நோன்பிருந்து தங்களுடைய விசுவாசத்தைக் காண்பித்த நினிவே நகரத்து மக்கள் "கடவுள் ஒருவேளை தம் மனத்தை மாற்றிக்கொள்வார். அவரது கடுஞ்சினமும் தணியும். நமக்கு அழிவு வராது" (யோனா 3:9) என்று நம்பிக்கையோடு கூறின இந்த நிகழ்விலும் இறைவன் அவர்களுடைய செயல்களைக்கண்டு தண்டியாது விட்டுவிடுகின்றார்.

புதிய ஏற்பாட்டில் சட்டம் முன்வைக்கிற அனைத்தையும் மிகக் கவனமாகக் கடைபிடித்து, ஆனால் தங்கள் உள்ளத்தால் இறைவனிடமிருந்து மிகத் தூரத்தில் இருக்கிற பரிசேயர்களின் மனப்போக்கைக் கண்டிக்கிற ஆண்டவர் இயேசு நோன்பின் நோக்கத்திற்கு புத்தொளி பாய்ச்சுகிறார். மறைவாய் உள்ளதைக் கண்டு தக்க கைமாறு அளிக்கிற (மத் 6:18) விண்ணகத் தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றுவதுதான் உண்மையான நோன்பு என்று நம்முடைய தெய்வீகக்குரு ஆண்டவர் இயேசு குறிப்பிடுகிறார்.

நாற்பது நாட்கள் மேற்கொண்ட பாலைவனச் சோதனையின் இறுதியில் சோதிக்கிறவனிடத்தில் "மனிதர் அப்பத்தினால் மட்டுமல்ல, மாறாகக் கடவுளின் வாய்ச்சொல் ஒவ்வொன்றாலும் வாழ்வான்" (மத் 4:4) என்று பதிலிறுத்தி நமக்கு முன்மாதிரியாக விளங்குகிறார். இப்படித் தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றுதல் (யோவான் 4:34) என்கிற உண்மையான உணவை உண்பதே உண்மையான நோன்பு என்று அறிவுறுத்தப்படுகிறது. "நன்மை - தீமை அறிவதற்கு ஏதுவான மரத்திலிருந்து மட்டும் உண்ணாதே" என்ற ஆண்டவருடைய கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் ஆதாம் செயற்பட்டாரென்றால் விசுவாசிகள் ஆண்டவருடைய அளவில்லாத கருணை மற்றும் நன்மைத்தனத்தில் நம்பிக்கைகொண்டு அவருக்குத் தங்களையே கையளிக்கிறவிதமாக நோன்பிருக்க வேண்டும்.

தொடக்ககாலக் கிறிஸ்தவ சமுதாயத்தில் உண்ணா நோன்பு கடைப்பிடிக்கப்பட்டது. (திப 13:3, 14:23, 2 கொரி 6:5) பாவத்திற்கு, குறிப்பாக, பழைய ஆதாமிடமிருந்த உடல் இச்சைக்கு கடிவாளமிடவும், விசுவாசியின் இதயத்தில் இறைவனுக்குரிய பாதையைத் திறந்துவிடவும் உண்ணா நோன்பின் வலிமையை திருச்சபையின் தந்தையர்களும் வலியுறுத்தியுள்ளனர். எல்லாவற்றையும்விட, ஒவ்வொரு காலகட்டத்திலும் வாழ்ந்த புனிதர்கள் தங்கள் வாழ்வில் கடைப்பிடித்த உண்ணா நோன்பைப் பரிந்துரைத்துள்ளனர். புனித பீட்டர் கிறிசலோகஸ் மிக அழகாக "உண்ணா நோன்பு என்பது செபத்தின் ஆன்மாவாகும். கருணை என்பது உண்ணா நோன்பின் உயிரோட்டம் நிறைந்த இரத்தமாகும். நீங்கள் உண்ணா நோன்பிருந்தால் கருணை காட்டுங்கள். உங்கள் வேண்டுதல் கேட்கப்பட வேண்டும் என்றால் மற்றவரின் வேண்டுதலுக்கு செவிசாயுங்கள். மற்றவர்களுக்கு உங்கள் செவிகளை மூடாதிருங்கள். நீங்கள் கடவுளின் செவியை உங்களுக்கென்று திறந்துகொள்கிறீர்கள்" என்று குறிப்பிடுகிறார்.

இன்று உண்ணா நோன்பு ஆன்மீக அர்த்தத்தை இழந்து, உடல் நலனுக்காக மட்டும், உடல் நலன் சார்ந்த மருத்துவம் என்ற பருப்பொருள் வாதத்தால் நாம் உள்வாங்கப்பட்டுள்ளோம். உண்ணா நோன்பு உடல் நலத்திற்கு ஏராளமான நன்மைகளை நிச்சயமாகக் கொண்டுவருகின்றது. ஆனால் விசுவாசிகளுக்கு இறைவனின் திருவுளத்திற்கு ஒவ்வாத ஒவ்வொன்றையும் தடுத்துக் குணப்படுத்துகின்ற சிகிச்சை முறையாக இது முதலிடத்திலிருக்கிறது.

திருத்தந்தை ஆறாம் பவுல் 1966ல் எழுதிய 'Paenitemini' என்ற திருத்தூதுக் கொள்கை விளக்கத்தில் உண்ணா நோன்பினை ஒவ்வொரு கிறிஸ்தவரின் அழைப்பின் ஒரு பகுதியாகக் கண்டார். ஒவ்வொரு கிறிஸ்தவரும் தங்களுக்காக மட்டும் வாழாமல் நம்மை அன்பு செய்து, நமக்காகத் தம்மையே கையளித்து அவருக்காக வாழ்ந்து, நம்மோடு வாழ்கிற அனைத்துச் சகோதர சகோதரிகளுக்காகவும் வாழ வேண்டும் என்று அழைப்பு விடுத்தார். இந்தத் திருத்தூதுக் கொள்கை விளக்கத்தில் உள்ள அனைத்து விதிமுறைகளையும் மீண்டும் வழங்க இத்தவக்காலம் உகந்ததாகும்.

இதன்மூலம் நீண்ட காலமாகக் கடைபிடிக்கப்பட்ட இதன் உள்ளார்ந்த முக்கியத்துவத்தையும் இன்றியமையாமையும் மீண்டும் கண்டுணரவும், நம்முடைய ஆணவத்தை அகற்றிடவும் புதிய சட்டத்தின் முதன்மையானதும் தலைசிறந்த கட்டளையுமான ஒட்டுமொத்த நற்செய்தியின் சுருக்கமான இறையன்பிற்கும் பிறரன்பிற்கும் (மத்22:34-40) நம்முடைய இதயங்களைத் திறந்துவிடவும் முடியும்.

விசுவாசம் நிறைந்த உண்ணா நோன்பு எல்லாவற்றிற்கும் மேலாக, பாவத்தைத் தவிர்க்க உதவிசெய்து ஆண்டவரோடு நெருங்கி வளர்ந்த நமது முழு ஆளுமை, உடல் மற்றும் ஆன்ம ஒருங்கிணைப்பிற்குத் தக்கவிதத்தில் பங்களிப்புச் செய்கிறது. தன்னுடைய எதிர்மறையான உணர்ச்சிகளை நன்கு அறிந்த புனித அகுஸ்தினார் அவற்றை வரையறுக்கும்போது 'முறுக்கப்பட்ட சிக்கலான முடிச்சுகள்' என்பார். "நான் அடிப்படைத் தேவைகளைக் -கூட நிறைவு செய்யாத ஒறுத்தலை வலுக்கட்டாயமாக என்மேல் ஏற்பேன். அப்படி நான் செய்யும்போது இறைவன் என்னை மன்னிப்பார். அது அவருடைய கண்களை என்பக்கம் ஈர்த்து நான் இரக்கத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். அவருடைய பேரின்பத்தை நான் அனுபவிக்க முடியும்." என்று எழுதுகிறார்.

நம் உடலை மட்டுமே வளர்க்கின்ற உணவை மறுப்பது கிறிஸ்துவிற்கு செவிசாய்க்கும் உள்ளார்ந்த மனப்போக்கையும் அவருடைய மீட்பளிக்கும் வார்த்தையால் பேணிவளர்க்கப்படவும் உதவுகிறது. மேற்கொள்ளும் நோன்பு மற்றும் செபத்தின் வழியாக அவர் நம்மிடம் வந்து நம் உள்ளத்தின் ஆழத்தில் இறைவனுக்காக நாம் கொண்டிருக்கும் தாகத்தையும் பசியையும் அவர் தணிக்க அனுமதிக்கின்றோம்

அதே சமயம் நம்மோடு வாழ்கிற சக சகோதர சகோதரிகளின் சூழ்நிலையை நம் கண்களால் கண்டுணர இந்த உண்ணா நோன்பு நமக்கு உதவுகிறது. தம்முடைய முதல் திருமுகத்தில் புனித யோவான் "உலகச் செல்வத்தைப் பெற்றிருப்போர் தம் சகோதர சகோதரிகள் தேவையில் உழல்வதைக் கண்டும் பரிவுகாட்டவில்லை என்றால் அவர்களிடம் கடவுளின் அன்பு எப்படி நிலைத்திருக்கும்?" (1யோவான் 3:17) என்று கேள்வி எழுப்புகிறார். நாமே மனமுவந்து மேற்கொள்கின்ற இந்த உண்ணா நோன்பு துன்பத்தில் உழல்கிற சகோதரர்க்கு பணிவிடைசெய்த நல்ல சமாரியனுக்குரிய மனநிலையை - உணர்வை நம்மில் வளர்த்துக்கொள்ள உதவுகிறது. அடுத்தவர் நலனுக்காகத் தன்னையே மறுக்கிற செயலை மனச்சுதந்திரத்துடன் நாம் மேற்கொள்கின்றபோது தேவையிலிருக்கிற நம் சகோதரனும், சகோதரியும் அன்னியர் அல்ல என அறிக்கையிடுகிறோம். நம் சகோதர சகோதரிகளை வரவேற்று கவனித்துக்கொள்கிற மனப்போக்கினைக் குறிப்பாக வளர்க்கும் பொருட்டு தனிப்பட்ட மற்றும் சமுதாய உண்ணா நோன்புப் பழக்கம், ஒன்றுகூடி இறைவார்த்தையை வாசித்தல், செபித்தல், கருணைச் செயல்களைச் செய்தல் போன்ற காரியங்களை இத் தவக்காலத்தில் சிரத்தையுடன் மேற்கொள்ள எல்லா பங்குகளையும், ஒவ்வொரு குழுமங்களையும் நான் ஊக்குவிக்கின்றேன்.

தொடக்கத்திலிருந்தே கிறிஸ்தவ சமுதாயத்தின் அழியாத அடையாளமாக இருக்கின்ற இவற்றால் இக்காலத்தில் சிறப்பான பொருளுதவி மேற்கொள்ளப்படவும் (2 கொரி 8:9) (உரோ 15:25 – 27) தாங்கள் மேற்கொள்ளும் நோன்பின் விளைவாக சேமிக்கப்படுபவற்றை ஏழைகளுக்குக் கொடுக்கவும் விசுவாசிகள் அழைக்கப்படுகின்றார்கள். இந்த நடைமுறையை மீண்டும் கண்டெடுத்து நாம் வாழும் இன்றைய காலகட்டத்தில் குறிப்பாக இந்தத் தவக்கால திருவழிபாட்டுக் காலத்தில் ஊக்குவிக்க வேண்டும். நான் மேற்சொன்ன அனைத்திலிருந்தும் உண்ணா நோன்பு என்பது மிக முக்கியமான தவச்செயல், ஒரு முக்கிய ஒறுத்தல் முயற்சி. நமது முறைதவறிய ஒவ்வொரு பிணைப்பினையும் எதிர்த்துப் போராடத்தக்க ஆன்மீக ஆயுதம் என்பது மிகத்தெளிவாகிறது. ஜென்ம பாவத்தால் தளர்ந்துள்ள ஒவ்வொரு மனிதரிடமும் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள இயற்கையின் கோரப்பசியினை, கிறிஸ்துவின் சீடர் கட்டுப்பாட்டிற்குக் கொண்டுவர உணவு மற்றும் உலகப் பொருட்கள் தரும் இன்பத்தினின்று மனமுவந்து அவர் விலகியிருக்க உதவி செய்கிறது.

பழங்காலத்துத் தவக்கால திருவழிபாட்டுப் பாடல் ஒன்று "வார்த்தைகளையும் உணவு மற்றும் பானத்தையும், தூக்கம் மற்றும் பொழுதுபோக்கையும் அளவோடு பயன்படுத்துவோமாக. நம்முடைய புலன்களை அடக்கி ஆழ்வதில் விழிப்புடன் இருப்போமாக" என்றிருப்பது முற்றிலும் பொருத்தமே!

அன்பார்ந்த சகோதர, சகோதரிகளே, ஆண்டவருடைய ஊழியர் திருத்தந்தை இரண்டாம் ஜோன் பவுல் எழுதியுள்ளதுபோல தன்னையே கடவுளுக்கு முழுமையான கொடையாகக் கொடுக்க உண்ணா நோன்பின் உன்னதமான நோக்கம் எப்படி நம் ஒவ்வொருவருக்கும் உதவுகிறது என்பதை எண்ணிப் பார்ப்பது நலம் பயக்கும். ஆன்மாவை வளப்படுத்துகிற அனைத்திலும் வளர்ந்த இறையன்பிலும், பிறரன்பிலும் அதனைச் செலுத்தி அதனைத் திசை திருப்புகிற அனைத்திலிருந்தும் விலகி நிற்கும் பொருட்டு ஒவ்வொரு குடும்பமும், கிறிஸ்தவ சமுதாயமும் இத்தவக்காலத்தை நன்கு பயன்படுத்துவார்களாக. இறை வார்த்தையை வாசித்து, ஒப்புரவு அருட்சாதனத்தில் தஞ்சமடைந்து, திருப்பலியில் குறிப்பாக ஞாயிறு திருப்பலிக் கொண்டாட்டத்தில் முழுமையாகப் பங்கேற்று அனைவரும் செப வாழ்வில் ஈடுபட வேண்டும் என்று நான் ஆசிக்கிறேன். இத்தகைய உள்ளார்ந்த கிடக்கையுடன் தவக்காலத்தில் முன்னேற வேண்டும்.

பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து நம் இதயத்தை விடுவித்து அதனை இறைவன் வாழும் நற்கருணைப் பேழையாக மாற்றும் நம் முயற்சியில் ஆசீர்வதிக்கப்பட்ட அன்னை மரியா நம்முடனிருந்து நமக்கு உதவுவாராக. ஒவ்வொரு விசுவாசிக்கும் திருச்சபைக்கும் இத்தவக்காலத் திருப்பயணம் பலன்தர என்னுடைய செபத்தை உறுதிப்படுத்தும் இவ்வேளையில் இந்த எண்ணங்களுடன் உளப்பூர்வமாக உங்களுக்கு நான் என் அப்போஸ்தலிக்க ஆசீர்வாதத்தை வழங்குகிறேன்.

திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ற்

உலகத் திருச்சபைச் செய்திகள்

திருச்சபையிலிருந்து விலக்கப்பட்ட ஆயர்களை திருத்தந்தை மீண்டும் திருச்சபையில் ஏற்றுக்கொண்டார்!

1988ம் ஆண்டு மார்சல் லெவப்புரே (Marcel Lefebure) என்பவரால் ஆயர்களாகத் திருநிலைப்படுத்தப்பட்டவர்களும் புனித 10ம் பத்திநாதர் சபையைச் சேர்ந்தவர்களுமான நான்கு ஆயர்களைத் திருத்தந்தை 16ம் பெனடிக்ற் அவர்கள் மீண்டும் திருச்சபையில் ஏற்றுக்கொண்டார். (Lifted the Excommunication) இது உண்மையானதும், இறுதியானதுமான ஐக்கியத்திற்கு இட்டுச்செல்லும் என்று திருத்தந்தை நம்புகின்றார்.

திருப்பீடத்திற்கும் புனித 10ம் பத்திநாதர் சபையின் சார்பாக உரையாடலில் கலந்து கொண்ட ஆயருக்குமிடையே நடந்த பேச்சு வார்த்தையின் பின்னர் இருபது ஆண்டுகளுக்கு முன்னர் இவர்களுக்கு அளிக்கப்பட்ட திருச்சபையிலிருந்து விலக்கப்பட்ட தடை உத்தரவை நீக்குவதென்று தீர்மானிக்கப்பட்டது.

1988ம் ஆண்டு யூன் 30ம் நாள் இவர்கள் திருச்சபையின் சட்டத்திற்கு முரணான வகையில் ஆயர்களாகத் திருநிலைப்படுத்தப் -பட்டார்கள். 1988ம் ஆண்டு யூலை மாதம் முதலாம் திகதி திருப்பீடத்தின் ஆயர் மன்றத்தினால் இவர்கள் திருச்சபையிலிருந்து விலக்கப்பட்டார்கள்.

தடையுத்தரவு விலக்கப்பட்டு, திருச்சபையில் மீண்டும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் இந்த ஆயர்களில் ஒருவர் திருத்தந்தைக்கு எழுதிய கடிதத்தில், "நாம் என்றும் கத்தோலிக்க - ராயிருப்போம். திருச்சபையின் பணியில் எமது சக்திகளையெல்லாம் செலவிடுவோம் என்பதில் உறுதியாயிருக்கிறோம். உரோமன் கத்தோலிக்கத் திருச்சபையின் படிப்பினைகளை நாம் பிள்ளைகளுக்குரிய மனப்பான்மையுடன் ஏற்றுக் கொள்கிறோம். புனித பேதுருவினது முதன்மை யையும் அவரது தனியுரிமையையும் நாம் ஏற்றுக் கொள்கிறோம். இதனாலேயே தற்போதைய நிலைமைகளையிட்டு நாம் கவலையடை - கின்றோம்" எனக் குறிப்பிட்டிருந்தார்.



புற்றுநோயிலிருந்து குணம்பெற விசுவாசிகளின் செபம் எனக்கு உதவியது

– மும்பைக் கர்தினால் கிராசியாஸ் –

தான் புற்று நோயிலிருந்து விரைவாகக் குணம்பெற விசுவாசிகளின் செபம் தனக்கு உதவியுள்ளதாகத் தன் நன்றியைத் தெரிவித்துள்ளார் மும்பைக் கர்தினால் ஆஸ்வல்டு கிராசியாஸ்.

வயிற்றுப் புற்றுநோய் அறுவைச் சிகிச்சைக்குப்பின் தன் பணிகளைத் துவக்கியுள்ள கர்தினால் கிராசியாஸ், விசுவாசிகளின் தொடர்ந்த செபம் தன்னை விரைவில் குணப்படுத்தும் எனத் தான் அறுவை சிகிச்சைக்கு முன்னரே நம்பியதாகத் தெரிவித்தார்.

வார்த்தை மனுவுருவாகும் மாபெரும் வல்லமையை அனுபவ வாயிலாகக் கண்டறிவதற்கு இறைவார்த்தையை சுயாதீனமாக வாசிக்க வேண்டும்

உலக ஆயர் பேரவையில் எதிரொலித்த கருத்துக்கள்!

எமது வாழ்வில் வார்த்தை மனுவுருவாகும் மாபெரும் வல்லமையை நாம் அனுபவ வாயிலாகக் கண்டறிவதற்கு நாம் வேதாகமத்தை வாசிப்பது மட்டும் போதாது மாறாக இறைவார்த்தையைச் சுயாதீனமாக வாசிக்க வேண்டும். நாம் இதனை எவ்வாறு செய்யப் போகின்றோம்? இந்த வினாவையே புனித பவுல் வினாவினார்.

"அவர்கள் காணாத ஒருவரை எவ்வாறு விசுவசிக்ககூடும்? அவர்கள் கேள்விப்படாத ஒருவரை எவ்வாறு நம்பக்கூடும்? அறிவிக்கப்படா விட்டால் அவர்கள் எவ்வாறு கேள்விப்படுவார்கள்? அவர்கள் அனுப்பப்படாவிட்டால் எவ்வாறு அறிவிப்பார்கள்?"

இந்த வினாக்கள் மூலம் அப்போஸ்தலர் எம்மிடமிருந்து ஒரு பதிலை எதிர்பார்க்கிறார். திருச்சபையின் வாழ்விலும் பணியிலும் குருக்கள் மிகவும் முக்கிய பங்கு வகிக்கிறார்கள். இறை வார்த்தையை அறிவிக்க அனுப்பப்பட்டவர்கள் அவர்களே என்று ஆயர்கள் மாநாட்டின்போது மலேசியாவின் பேராயர் யோன் கா ஒவ் கூச்சிங் ஆண்டகை கூறினார்.

ஏனைய திருச்சபைகளிலிருந்து கத்தோலிக் - கத்திற்கு மதமாற்றம் பெறும் வளர்ந்தோர் தமது புதிய திருச்சபையில் தாம் செவிமடுக்கும் மறையுரையின் தன்மை பொதுவாகக் குறைபாடுடையதாகவும் தம்மை ஏமாற்றுவதாயும் உள்ளது என்றே அடிக்கடி கூறுகின்றார்கள் என்ற வார்த்தைகளும் மாநாட்டு மண்டபத்தில் எதிரொலித்தன. இது நாம் கவனம் செலுத்த வேண்டிய ஒரு எச்சரிக்கை. உண்மையிலேயே வேதாகம நிபுணரும் ஆயருமான பேராயர் ஹா ஆண்டகையின் கருத்தின்படி வார்த்தை இறையியலிலேயே பிரச்சினை உள்ளது. "வார்த் -தை இறையியலில்" உறுதியான அடித்தளம் இடப்படவேண்டும். இது குருத்துவக் கல்லூரியில் கற்பிக்கப்பட வேண்டும். இத்தகைய சிறந்த அடித்தளத்துடன் இறைவார்த்தையில் ஆர்வமுள்ள - இறைவார்த்தையை வாழ்வின் மையமாகக் கொண்ட குருக்கள் உருவாக்கப்பட வேண்டும்.



திருச்சபையின் வாழ்விலும் பணியிலும் இறைவார்த்தை தகுந்த இடம்பெற வேண்டும் என்று பேராயர் தொடர்ந்து கூறினார். திருச்சபை விவிலியத் திருச்சபையாய் உள்ளது. உயிரோட்டமுள்ள விசுவாச வாழ்வின் சூழ்நிலையில் வாழும் இறைவன், வாழும் மக்களுடன் கொண்ட உறவுக்குச் சான்றாக வாழ்ந்த வரலாற்றின் வாழ்வு அமைகின்றது. என்று ஒதொடொக்ஸ் பிதாபிதாவான பார்த்தலோமியு ஆயர் பேரவையில் கூறினார்.

எமது திருச்சபையில் இறைவன் உண்மையாகவே இருப்பதால் "ஏதோ வானத்திற்கு மேலே" உள்ள ஒருவரிடம் நாம் செபிக்கிறோம் என்ற மனநிலையில் அல்ல, மனுவுருவான வார்த்தையாகி இப்பொழுது எம்மிடையே வதியும் இறைவனிடமே செபிக்கின்றோம் என்ற மனநிலையுடன் சிறந்த முறையில் எம்மால் செபிக்க முடியும். இந்த அனுபவத்தை குருக்கள் தமது மறையுரையில் வெளிப்படுத்த வேண்டும்.

"திருச்சபையின் வாழ்விலும் பணியிலும் இறைவார்த்தை" என்ற மாநாடு ஒரு சர்வமத மாநாடாக மாறியது. கிறிஸ்தவர்கள் பிரதானமாயிருந்த இந்த மாநாட்டில் ஏனைய திருச்சபைகள் ஊக்கமுடன் செயற்பட அழைக்கப்பட்டனர்.

கருக்கலைப்பை அனுமதிக்கும் சட்டத்தில் மேலும் கட்டுப்பாடுகள் புகுத்தப்பட வேண்டும்

அமெரிக்க மக்கள் விருப்பம்

கருக்கலைப்பை அனுமதிக்கும் சட்டத்தில் மேலும் கட்டுப்பாடுகள் புகுத்தப்பட வேண்டும் எனப் பெரும்பான்மை அமெரிக்க ஐக்கிய நாட்டு மக்கள் விரும்புவதாக அந்நாட்டின் தேசிய அளவில் எடுக்கப்பட்ட ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது.

கருக்கலைப்புச் சட்டத்தில் மேலும் கட்டுப்பாடுகள் வேண்டுமென அமெரிக்கா ஐக்கிய நாட்டில் ஐந்துக்கு நான்கு பேர் அதாவது எண்பது விழுக்காட்டினர் விரும்புவதாக ஆய்வு மூலம் தெரியவந்துள்ளது. கருக்கலைப்பு என்பது எல்லாச் சூழலிலும் அனுமதிக்கப்பட வேண்டும் என ஒன்பது விழுக்காட்டினரே விருப்பம் தெவித்துள்ளதாகவும் ஆய்வு கூறுகிறது.

அமெரிக்க ஐக்கிய நாட்டில் ஆயர் பேரவையில் பன்வலைத் தொடர்பகம் மூலம் எடுக்கப்பட்ட இவ்வாய்வின் முடிவு வாழ்வுக்கு ஆதரவான நடவடிக்கைகளில் அமெரிக்க ஐக்கிய நாட்டு மக்கள் கொண்டுள்ள ஆர்வத்தின் புதுவெளிப் - பாடாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொருளாதாரப் பிரச்சினையைவிட குடும்பப் பிரச்சினையே ஆழமானது

கத்தோலிக்க – ஆர்த்தோடக்ஸ் கூட்டத்தின் இறுதி அறிக்கை

ஐரோப்பாவில் பொருளாதார நெருக் கடியைவிடக் குடும்பப் பிரச்சினையே ஆழமானதாக இருக்கிறது என்று கத்தோலிக்க - ஆர்த்தோடக்ஸ் கூட்டத்தில் கூறப்பட்டது.

"குடும்பம் - மனித சமுதாயத்திற்கு நல்லது" என்ற தலைப்பில் இத்தாலியின் த்ரெந்தோவில் கூட்டம் நடத்திய இவ்வமைப்பு வெளியிட்ட இறுதி அறிக்கையில் இறையியல் விவகாரங்கள் பற்றிக் கவனம் செலுத்துவதைத் தவிர்த்துவிட்டு இன்றைய மற்றும் எதிர்கால சமுதாயத்தின் மனித இனம் பற்றிய முக்கிய விவகாரங்கள் குறித்துக் கலந்துரையாடியதாகக் கூறியுள்ளது.

சமூக மற்றும் நன்னெறி விவகாரங்களில் இவ்விரு சபைகளின் பொதுவான நிலைப் - பாட்டையும் இக்கூட்டத்தினர் விவாதித்தனர். தாய்மையின் புனிதம் மற்றும் அதனை மனித சமுதாயம் மதிக்க வேண்டியதன் அவசியம், தாய்மாரின் இல்லப்பணி மற்ற எந்த வேலைக்கும் சற்றும் குறைவானதல்ல போன்ற கருத்துக்கள் இவ்வறிக்கையில் இடம்பெற்றுள்ளன.

நற்செயல்கள் மற்றும் எடுத்துக்காட்டான வாழ்வு மூலமே சமயங்கள் சமூகத்தொண்டு ஆற்ற முடியும்

திருப்பீட பல்சமய உரையாடல் அவைக்கும் லிபியாவின் டிரிபோலியை மையமாகக் கொண்ட உலக இஸ்லாமியக் கழகத்திற்கும் இடையே வத்திக்கானில் நடைபெற்ற 11வது கலந்துரையாடலின் முடிவில் வெளியிடப்பட்ட அறிக்கையில் சமயத் தலைவர்கள் தங்கள் சமய மரபுகளை போதனைகள், நற்செயல்கள், எடுத்துக்காட்டான வாழ்வு ஆகியவற்றின் வழியாக நிறைவேற்றுவதன் மூலம் தங்கள் சமூகங்களுக்குத் தொண்டாற்ற முடியும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

நீதி, அமைதி, சமூக நல்லிணக்கம், பொதுநலன், குறிப்பாக நலிந்தோர், தேவையில் இருப்போர், குடியேறிகள், ஒடுக்கப்பட்டோர் ஆகியோரின் நலன் உள்ளிட்ட அடிப்படை நன்னெறி மதிப்பீடுகளை வளர்ப்பதில் சமயத் தலைவர்களுக்கு முக்கிய பங்கு உண்டு என்பது அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இளையோர்மீது சிறப்புக் கவனம் செலுத்த வேண்டும். அதன் மூலம் அவர்கள் சமயத் தீவிரவாதம், இனவாதம் ஆகியவற்றில் ஈடுபடுவதைத் தவிர்க்கலாம். இன்னும் சமயக் கலவரங்களைத் தடுக்கும் விதமாகச் சமயத் தலைவர்கள் தேசிய மற்றும் சர்வதேச அளவில் பல்சமய உரையாடலை ஊக்குவிக்கவும் வேண்டுமென இசைவு தெரிவிக்கப்பட்டது.

ஐரோப்பாவில் குடும்ப நிலை கவலைக்கிடமாயுள்ளது!

ஐரோப்பாவில் பிறப்பு விகிதம் மிகக் குறைவு. ஸ்பெயின் மற்றும் ஒஸ்ட்ரியா போன்ற நாடுகளில் அது 0.1 விழுக்காடுகூட இல்லை. ஜெர்மனியிலும் இத்தாலியிலும் மக்கள் தொகைப் பெருக்கம் எதிர்மறையாக இருக்கின்றது என்று அறிக்கை ஒன்று கூறுகிறது.

பணக்கார நாடுகளில் 3 முதல் 6 வயதுக்குட்பட்ட குழந்தைகளில் ஏறத்தாழ 80 விழுக்காட்டினர் தங்கள் பெற்றோரிடம் இருப்பதில்லை. இதனால் அவர்களின் இளமைப்பருவ வளர்ச்சியின் தன்மை பாதிக்கப்படுகின்றது என்று யூனிசெப் என்ற ஐ. நா. வின் குழந்தை நல நிதிய அமைப்பின் புதிய அறிக்கை கூறுகிறது.

குழந்தைப் பருவ உயர்தரக் கல்வியும் கவனிப்பும் அக்குழந்தைகளின் அறிவாற்றல், மொழித்திறன், உணர்வுகள் மற்றும் சமூக வளர்ச்சியை உயர்த்துகின்றன என்றும் அவ்வமைப்பின் இயக்குனர் மார்த்தா சாந்த்தோஸ் பயேஸ் கூறியுள்ளார்.

சுவிஸ் காவல் படையினர்



திருத்தந்தையின் உயிர்காக்கத் தங்களை அர்ப்பணித்துள்ள சுவிஸ் படைவீரர்களைப் படத்தில் காணலாம்.

குருவாக இருந்து மாகாண ஆளுநராக மாறிய

பிலிப்பைன்ஸ் நாட்டின் கத்தோலிக்க குரு

சென்ற மாத மன்னா பத்திரிகையில் ஆயர் நிலையில் இருந்து அரசியல் தலைவராக மாறிய ஆயர் லோகோ அவர்களின் சுவாரஸ்யமான வாழ்க்கையைப் பார்த்தோம். இம்முறை குருவாக இருந்து ஆளுநனராக மாறிய ஒரு கத்தோலிக்க குருவின் வாழ்வைப்பற்றி பார்ப்போம்.

எட் பன்லிலியோ (Ed Panlilio) அடிகளார் பிலிப்பைன்ஸ் நாட்டின் பம்பன்கா மாகாண ஆளுநராகத் தெரிவுசெய்யப்பட்டபோது ஆட்சியாளர்கள் மத்தியில் அதிர்ச்சியும், மீதியும் ஏற்பட்டது. அருட்தந்தைக்குக் கிடைத்த அளவுக்கதிகமான வாக்குகளும் மக்களின் ஆதரவும் ஆட்சியாளர்களுக்குப் பேரிடியாய் விழுந்தன. தூய்மையான, களங்கமற்ற ஆளுநரே மக்களின் ஆவலும் எதிர்பார்ப்புமாய் இருந்தது. எனவே தாம் அன்புகொண்ட, நம்பிக்கை கொண்ட அருட்தந்தையை ஆளுநராக மாற்றிய -மைத்தனர். அருட்தந்தை எட் திருச்சபையினதும் மக்களினதும் ஆதரவுடன் மறைமாவட்டச் சமூகச் செயற்பாட்டு இயக்குனராகப் பணியாற்றியபோது மக்களால் பெரிதும் விரும்பப்பட்டார்.

கண்ணியமற்ற இலக்கியங்கள், சட்டவிரோதமான சூதாட்டங்கள், பெண்கள், சிறுவர்களை வியாபாரப் பொருளாக்குதல், போதைவஸ்து, குற்றச்செயல்கள், சிறுவர் துஷ்பிரயோகம் போன்றவை இவரது மாகாணமான பம்பன்காவில் தொடர்ந்து நிலவ முடியவில்லை. இவரும் ஆயர் லோகோவைப் போன்றே தனது திருவருட்சாதன, குருத்துவக் கடமைகளை ஒரு புறமாக ஒதுக்கிவிட மனமற்ற நிலையிலும் மக்களின் பெருந்தொகையான வாக்கினால் ஆட்சியாளரை முறியடித்து ஆளுநராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பிலிப்பைன்சில் அரசியல் பீதியும், குழப்பமும் ஏற்பட்டது. ஆனால் மக்கள் ஜனநாயகத்தை ஏற்படுத்தினர். அவர் உடனடியாகவே ஏமாற்றுதல், லஞ்சம் ஆகியவற்றை இல்லாதொழித்தார். மாகாணக் கருவூலத்திலிருந்து பெற்ற பணம் ஆளுநர்களதும், மாகாணத்தினதும் தேவைக்கு உதவியது. தரைமட்டமாக்கப்பட்ட வைத்தியசாலைகளை மீளவும் கட்டியெழுப்பினார். ஏழைகளுக்கு உதவிசெய்தார். ஒடுக்கப்பட்டவர்கள் மீண்டும் எழுச்சி பெற்று புதிய வாழ்வைத் தொடங்க உதவிபுரிந்தார்.

அவ்வாறே சட்டவிரோத சூதாட்டத்தைத் தடைசெய்ய அவர் எடுத்த முயற்சிகள் அரசியல் சக்திமிக்க ஒரு குடும்பத்தால் கட்டுப்படுத்தப்பட்டது. அவரை அதிகாரத்திலிருந்து அகற்று - வதற்காக ஒரு தேர்தலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. கைலஞ்சத்தை ஒருபோதுமே ஏற்றுக்கொள்ளாத ஒரு ஆளுநரைத் தேர்ந்தெடுத்தல் என்பது செல்வம் செழித்த அரசியல்வாதிகளினால் நினைத்துக்கூடப் பார்க்க முடியாமல் இருந்தது. ஜனாதிபதியின் மாளிகையில் பெருந்தொகைப்பணம் இவருக்குக் கைலஞ்சமாகக் கொடுக்கப்பட்டபோது அவர் அதனைத் திருப்பிக்கொடுத்துவிட்டுப் பொது மக்களிடம் சென்றார். இப்பொழுது நிதித்துறைக்குப்போதிய பணம் கிடைக்காத மாகாண ஆளுநர்களும், சபை அங்கத்தவர்களும் கோபாவேஷம் கொண்டு அவரது நற்செயல்களை எதிர்த்ததோடு அவரது தேவைக்குரிய பணத்தையும் அளிக்க மறுத்தனர். அவர் தனது அலுவலகத்திற்குச் செல்லும்போது மோட்டார் வாகனத்திற்குப் பதிலாகப் பொது வாகனத்திலேயே சென்றார்.

> "கைலஞ்சத்தை ஒருபோதுமே ஏற்றுக்கொள்ளாத ஒரு ஆளுநரைத் தேர்ந்தெடுத்தல் என்பது செல்வம் செழித்த அரசியல்வாதிகளினால் நினைத்துக்கூடப் பார்க்கமுடியாமல் இருந்தது.
>
> ஜனாதிபதியின் மாளிகையில் பெருந்தொகைப்பணம் இவருக்குக் கைலஞ்சமாகக் கொடுக்கப்பட்டபோது அவர் அதனைத் திருப்பிக்கொடுத்துவிட்டுப் பொது மக்களிடம் சென்றார்."

எல்லா ஆயர்களும் குருக்களும் இப்படியாகப் பொதுப்பணியில் இறங்கவேண்டுமென்பதல்ல, ஆனால் மக்களுக்குப் பணி செய்வதற்காக இவ்வாறு அனைத்தையும் இழப்பவர்களுக்கு இறைவன் உதவிசெய்கின்றார் என்பதற்கு இந்தக் குருவானவரின் வாழ்வும் சென்ற மன்னாவில் இடம்பெற்ற ஆயர் லேகோ அவர்களின் வாழ்வும் சிறந்த உதாரணங்களாக உள்ளன.

அனைத்து மக்களையும் ஒன்றாக அரவணைக்கும்

லூர்து திருத்தலம்

எழுத்துருவாக்கம்

திரு. ஏ. ஏ. யேசுதாசன்,
இல. 328/12,
மன்னார் றோட்,
பட்டாணிச்சூர்,
வவுனியா.

பிரான்ஸ் தேசத்தின் தென்பகுதியில் ஸ்பான்யா நாட்டைப் பிரிக்கும் பிரனீஸ் மலையடிவாரத்தில் இயற்கை அழகு கொஞ்சும் அமைதியான சூழலில் இற்றைக்கு நூற்றைம்பது ஆண்டுகளுக்கு (1858) முன் இறைபக்தியில் திளைத்த மலைவாழ் குடும்பத்தைச் சேர்ந்த சிறுமி பெர்ணதேத் என்பவருக்கு கன்னிமரியாள் காட்சி கொடுத்தார். ஒரு முறையல்ல பல தடவைகள் காட்சி கொடுத்து தனது விருப்பங்களைச் செயல்படுத்தும்படி வேண்டிக்கொண்டார். கடைசிச் சந்தர்ப்பங்களில் மரியன்னை கொடுத்த காட்சிகளை பெர்ணதேத்தின் தோழிகளும் கண்டுள்ளனர். இவற்றில் விசேடமானது மரியன்னை காட்சி கொடுத்த மலையடிவாரத்தில் உள்ள பாறையிலே மரியன்னை பெர்ணதேத்தைக் கொண்டு நிலத்தைத் தோண்டி நீரூற்றைப் பெருகச் செய்தார்.

மரியன்னை கொடுத்த பல காட்சிகளைக் கண்டுகளித்த பெர்ணதேத் வெளிப்படையாக அவற்றைப்பற்றி மக்களுக்குக் கூறியபோது அதை ஏற்றுக்கொள்ளாத மாவட்ட ஆட்சித் தலைவர்களும், காவல்துறையினரும் சிறுமி பெர்ணதேத்தை பல தடைவைகள் விசாரணைக்குட்படுத்தியதோடு சிறையிலும் அடைத்துவைத்தனர். சிறுமி பெர்ணதேத்தோ ஒன்றுக்கும் அச்சப்படவில்லை. தான் கண்ட காட்சிகளைப் பற்றியும் எல்லா விசாரணைகளிலும் ஒரே மாதிரியாகச் சாட்சியம் கூறியதோடு நீர் ஊற்றுப்பற்றியும் அந்நீரினால் குணமடைந்தோர் பற்றியும் விளக்கிக்கூறத் தயங்கவில்லை.

இதனால் விசனமடைந்த ஆட்சிதலைவர்களும் காவல்துறையினரும் பலவிதமான ஆய்வுகளை மேற்கொண்டனர். கத்தோலிக்க திருச்சபைக் குருக்களும் மேற்படி ஆய்வுகளுக்கு உதவினர். அத்தோடு சிறுமி பெர்ணதேத்திடம் இருந்து வெளிப்பட்ட மாற்றங்களும் உண்மைகளும் ஆராயப்பட்டு அவர் கூறியவை அனைத்தும் உண்மையென உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் அவர் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டார். மரியன்னை காட்சி கொடுத்தபோது தன்னிடம் விடுக்கப்பட்ட வேண்டுகோள் ஒவ்வொன்றையும் பெர்ணதேத் நிறைவேற்றிக்கொள்ளத் தயாரானபோது, தான் ஒரு துறவியாகச் செயல்பட விருப்பம் கொண்டு கன்னியர் மடத்தில் சேர்ந்துகொண்டார். அதன் பின்னர் மரியன்னை காட்சிகொடுத்த இடத்தில் ஓர் பேராலயம் அமைக்க வேண்டும் என்ற அவளது எண்ணமும் நிறைவேற்றப்பட்டது.

பெர்ணதேத் ஒரு துறவியாக திருநிலைப்படுத்தப்பட்ட பின்னர் நோயாளர்களுக்கும் அங்கவீனர்களுக்கும் மனநோயாளர் - களுக்கும் சேவை செய்தார். இவர்களுக்குச் சேவை செய்வதன் மூலம் மரியன்னை தன்னிடம் விண்ணப்பித்தவற்றுக்கு பரிகாரம் கண்டார். இவ்விதம் சேவை செய்து வந்த காலத்தில் மிக இளவயதில் காச நோயால் பாதிக்கப்பட்டு இறைவனடி சேர்ந்தார். அவரது உடல் இன்றும் பிரான்ஸ் தேசத்தின் நெவர்ஸ் (NEVERS) என்ற இடத்திலுள்ள ஓர் ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ளது.

லூர்து பதி பற்றிய சில தகவல்கள்

மரியன்னை காட்சி கொடுத்து 150 ஆண்டுகள் (1858 - 2008) நிறைவு விழா 2008ம் ஆண்டு முழுவதும் அதற்குப் பின்னரும் லூர்து பதியில் கொண்டாடப்பட்டு வருகிறது. தினமும் இலட்சசோப இலட்சம் மக்கள் அங்கு வருகிறார்கள். ஐரோப்பிய நாட்டு மக்களும் அமெரிக்க, ஆசிய நாட்டு மக்களும், ஏன் உலக நாடுகள் பலவற்றிலுமிருந்து இன, மொழி, மதம் கடந்து இங்கு வருகிறார்கள். இங்கு சென்று வருவதற்கு எல்லாவிதமான போக்குவரத்து வசதிகளும் கிரமமாக உள்ளன. களவுகள் இல்லை, காவல்துறை ரோந்துகள் இல்லை, கண்காணிப்பாளர்கள் இல்லை. அங்கு கூடும் மக்களுக்கு வேண்டிய பணிகளைச் செய்வதற்கு பாடசாலைச் சிறுவர்கள் முதல் பெரியர்வர்கள் வரை, ஆண், பெண் என்ற வேறுபாடின்றி தினமும் பல தொண்டர்கள் கூடுகின்றார்கள். எல்லா மொழிகளிலும் அங்கு வழிபாடுகள் நடைபெறுகின்றன. பல சிற்றாலயங்கள் அங்கு இருக்கின்றன. ஒரு ஆலயத்தில் தமிழ்மொழியிலும் திருப்பலிகளும் வழிபாடுகளும் நடைபெறுகின்றன. சுமார் 10,000 பேரை ஒரே நேரத்தில் உள்ளடக்கக்கூடிய பேராலயமும் அங்கு உண்டு. அவ்வாலயத்திலும் வழிபாடுகள் நடைபெறுகின்றன.

சனி, ஞாயிறு மாலை 9.00 மணிக்கு மாதா திருச்சொரூபம் ஊர்வலமாக எடுத்து வரும்போது யாத்திரிகர்களும் மெழுகுவர்த்திகளை தாங்கியவாறு ஊர்வலமாக வலம் வருவர். இக்காட்சி பக்திப்பரவசமுடையதாக இருக்கும். இந்நேரம் எல்லா மொழிகளிலும் செபங்கள் செய்யப்படும். தமிழ் மொழியில் "அருள் நிறைந்த மரியே" செபம் சொல்லும்போது எமது உள்ளங்களிலும் மிகவும் மகிழ்ச்சி உண்டாகும். ஆவே மரியா பாடல் இசைக்கும் போது மக்கள் மெழுகுவர்த்திகளை உயர்த்தியதும் மிகவும் அழகான காட்சியாக இருக்கும்.

கோயில் வளாகத்தில் மெழுகுவர்த்திகள் விற்கப்படுவதில்லை. ஒரு இடத்தில் விலைகள் குறிப்பிட்டபடி மெழுகுவர்த்திகள் வைக்கப்பட்டிருக்கும் விரும்பியவர்கள் அங்கு அதனை எடுத்துக்கொள்ளலாம். மிகப் பெரிய அளவிலான மெழுகுதிரிகளும் இருக்கும். யாரும் பணம் போடாமல் அதனைத் தொடுவதில்லை. மரியன்னை காட்சி கொடுத்த கெபியைத் தொட்டு மன்றாடுவதற்கும் நீரூற்று வெளிப்படும் இடத்தைத் தரிசிப்பதற்கும் மெழுகுவர்த்தியை ஏற்றுவதற்கும் எந்நேரமும் மக்கள் தொகை தொகையாகக் கூடுவார்கள். நீரூற்றுத் தண்ணீரைப் புனித நீராகக் கருதுவதால் அந்நீரை மக்கள் இலகுவாகப் பெறுவதற்கு உரிய வசதிகள் செய்யப்பட்டுள்ளன. அந்நீரை மக்கள் பருகுவதுடன் வீடுகளுக்கும் எடுத்துச் செல்வார்கள். புனித நீரில் குளிப்பதற்கு ஏற்ற வசதியும் செய்யப்பட்டுள்ளது. அந்நீரில் குளிக்க வேண்டிய ஒழுங்குகளைத் தொண்டர்கள் செய்வார்கள்.

இத்திருத்தலம் எந்நேரமும் அமைதியாகவே இருக்கும். வழிபாட்டு நேரத்தைத் தவிர வேறு நேரங்களில் எவ்வித ஒலிபெருக்கி ஓசையோ, வானொலிச் சத்தமோ எதையும் கேட்க முடியாது. திருப்பதி எந்நேரமும் சுத்தமானதாகவே இருக்கும். யாத்திரிகளும் அதனை அசுத்தப்படுத்துவதில்லை. களவுகளோ குற்றச் செயல்களோ அங்கு நடப்பதில்லை. ஆடம்பரமற்ற புனிதத்தலமாகவே அவ்வளாகம் எந்நேரமும் காணப்படும். அத்திருத்தலத்தால் நடத்தப்படும் பராமரிப்பு இல்லங்களில் பல ஆயிரக்கணக்கான நோயாளர்களும், அங்கவீனர்களும், மனநோயாளர்களும் பராமரிக்கப்படுகிறார்கள். இவர்கள் அன்னையின் அருளை வேண்ட வழிபாட்டு நேரங்களில் அன்னையின் தொண்டர்கள் பல வகையான வண்டில்களில் ஒழுங்கமைப்பாக இவர்களை அழைத்துவருவார்கள். இங்கு பல புதுமைகள் நடைபெற்றுவருவதால் நாளாந்தம் பலர் குணமடைந்து வருகிறார்கள்.

> *"மரியன்னை காட்சி கொடுத்து சுமார் 150 ஆண்டுகள் (1858-2008) நிறைவு விழா 2008ம் ஆண்டு முழுவதும் அதற்குப் பின்னரும் லூர்து பதியில் கொண்டாடப்பட்டு வருகிறது. தினமும் இலட்சசோப இலட்சம் மக்கள் அங்கு வருகிறார்கள். ஐரோப்பிய நாட்டு மக்களும் அமெரிக்க, ஆசிய நாட்டு மக்களும், ஏன் உலக நாடுகள் பலவற்றிலுமிருந்தும் இன மொழி மதம் கடந்து இங்கு வருகிறார்கள்."*

லூர்து என்னும் மரியன்னையின் திருப்பதியை நோக்கி இலட்சக்கணக்கான மக்கள் விசுவாசத்தோடு வந்து அருள்பெற்றுச் செல்வதால் இப்பதி புனித பூமியாக அனைவராலும் மதிக்கப்படுகிறது. அமைதி இழந்து தவிப்பவர்களுக்கும், நோயாளர்களுக்கும் பல்வேறு தேவைகளுக்காக ஏங்குபவர்களுக்கும் இப்பதி ஆறுதலையும் அமைதியையும், அருளையும் அன்பையும் அளிப்பதால் இப்பதி உலக மக்கள் அனைவரும் ஒன்றுகூடும் சிறந்த பூமியாகக் காணப்படுகின்றது.

இதை அங்கு சென்றவர்கள் உணர்வர். இதன் வெளிப்பாடாகவே எமது பல ஆலயங்களில் லூர்து அன்னையின் கெபி தனியாக அமைக்கப்பட்டு அன்னையின் புகழ் நிலை நாட்டப்படுகிறது.

புனித பவுல் ஆண்டு மற்றும் நற்செய்தி அறிவிப்பு ஆண்டு

கட்டுரைத் தொடர் 1

பவுலின் வாழ்க்கைக் குறிப்புகள்

எழுத்துருவாக்கம்
ஆயர் செ. சூசைமாணிக்கம்

ஆண்டவர் இயேசுவுக்கு அடுத்தபடியாகத் தொடக்கத் திருச்சபையில் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தவர் புனித பவுல் என்றால் அது மிகையாகாது. இவருக்கு **வேற்றினத்தாரின் திருத்தூதர், பதின்மூன்றாம் திருத்தூதர், திருத்தூதருள் பேராயர், ஐந்தாம் நற்செய்தியாளர், முதல் இறையியலாளர், கிறிஸ்தவ மறையின் (இரண்டாம்) நிறுவுனர்** என்றெல்லாம் பல சிறப்புப் பெயர்கள் உண்டு.

அவர் சீரிய சிந்தனையாளர், சிறந்த பேச்சாளர், எழுத்தாளர், அறிஞர், கவிஞர், பயணி, நிர்வாகி, அமைப்பாளர், புதுமை செய்பவர், அனுபூதி என அடைமொழிகளை அடுக்கிக்கொண்டே போகலாம். இன்றைய பாணியில் சொல்லவேண்டுமானால், அவர் ஒரு தன்னிகரில்லாதத் தானைத் தலைவர்; ஒரு காலத்தில் யூத மதம், யூத இனத்தின்பால் வெறி பிடித்து அலைந்த மத (அடிப்படை) வாதி - தீவிரவாதி; கிறிஸ்தவச் சுதந்திரத்தை நிலைநாட்டப் பாடுபட்ட போராளி; எல்லாவற்றுக்கும் மேலாக நற்செய்தியை உலகமயமாக்கியவர்!

அதே நேரத்தில் **எதிர்க்கிறிஸ்து, போலித் திருத்தூதர், இயேவின் எளிமையான நற்செய்தியைத் திரித்து வழங்கியவர், கிறிஸ்தவ மறையை முதன்முதல் பெரும் அளவில் சீரழித்தவர், பெண்களின் எதிரி** எனப் பலவாறு அவர் வர்ணிக்கப்படுகிறார். அவருடைய போதனைகளுள் சில தொன்று தொட்டே தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டு வந்துள்ளன (2பேது 3:15-16).

பவுலுடைய திருமுகங்களையும் அவற்றில் பொதிந்து கிடக்கும் இறையியல் கருத்துக்களையும் முறையாகவும் முழுமையாகவும் புரிந்கொள்வதற்கு அவருடைய வாழ்க்கைச் சூழலோடும் பணி வாழ்வோடும் அவற்றைப் பொருத்திப் பார்ப்பது இன்றியமையாதது. மேலும் அவரது பணியோடு தொடர்புகொண்ட முதல் நூற்றாண்டுத் திருச்சபையினூடாகவும் யூத, கிரேக்க, உரோமைச் சமுதாயங்களினுடையவும் வாழ்க்கைச் சூழல்கள் பற்றி அறிந்திருப்பது அவசியம்.

பவுலைப் பற்றிய குறிப்புகள் அவர்தம் திருமுகங்களில் அங்கும் இங்கும் சிதறிக் கிடக்கின்றன. மேலும் திருத்தூதர் பணிகள் என்னும் நூலின் இரண்டாம் பகுதியில் (13:1-28:31) அவருடைய நற்செய்திப் பயணங்கள், பணிகள் ஆகியவை பற்றி விரிவான விளக்கங்கள் காணப்படுகின்றன. இவற்றைக் கொண்டு பவுலின் வாழ்க்கை வரலாற்றை ஓரளவுக்கு நம்மால் எழுத முடியும்.

அவரது வாழ்க்கையின் காலவரிசையைக் கணிப்பது மிகவும் கடினம். இன்றைய அறிஞர்கள் பெரும்பாலும் ஏற்றுக்கொள்கின்ற காலவரிசைப் பட்டியல் பின்வருமாறு:

கி. பி. 7 - 10 பவுலின் பிறப்பு
30 இயேசுவின் பிறப்பு
33 பவுலின் அழைப்பு (கலா. 1:13-16)
35 முதல் எருசலேம் பயணம் (கலா. 1:18)
36-46 சிரியா, சிலிசியாவில் பணி (கலா.1:21)
47- 48 நற்செய்திப் பயணம் 1 (திப 13:3-14:28)
49 எருசலேம் சங்கம் (திப15:1-29; கலா2:1-10)
50-52 நற்செய்திப் பயணம் 2 (திப15:36-18:22)
51 தெசலோனிக்கர் திருமுகம் 1
? 52/80 + தெசலோனிக்கர் திருமுகம் 2
52-57 நற்செய்திப் பயணம் 3 (திப 18:23- 21:17)
53 கலாத்தியர் திருமுகம்
54 கொரிந்தியர் திருமுகம் 1
பிலிப்பியர் திருமுகம்
55 பிலமோன் திருமுகம்
55-56 கொரிந்தியர் திருமுகம் 2
57 உரோமையர் திருமுகம்
58 எருசலேமில் கைதுசெய்யப்படல் (திப.21:18-23:30)
? 58/80 + கொலோசையர் திருமுகம்
58-60 செசரியாவில் சிறையிருப்பு (திப 23:31-26:32)
60-61 உரோமைப் பயணம் (திப 27:1-28:16)
61-63 உரோமையில் சிறையிருப்பு, நற்செய்திப் பணி (திப 28:17-31)
? 63-64 ஸ்பெயின் நாட்டில் நற்செய்திப் பணி
64 பவுலின் கொலை

பெயர்

அக்காலத்தில் பெரும்பாலான யூதர்களுக்கு இரு பெயர்கள் உண்டு. ஒன்று யூதப் பெயர்; மற்றொன்று கிரேக்க அல்லது உரோமைப்பெயர். மனமாற்றத்தின்போது பவுல் பெயர் மாற்றம் பெற்றார். சவுல் பவுல் ஆனார் என்னும் கூற்றில் பொருள் இல்லை; ஏனெனில் மனமாற்றத்திற்கு பின்னரும் அவர் சவுல் என்றே தொடர்ந்து அழைக்கப்படுகிறார். செர்கியு பவுல் என்ற உரோமை ஆளுநரின் மனமாற்றத்திற்கு பின்னரே, அதாவது திப 13:9 லிருந்துதான் அவர் பவுல் என அழைக்கப்பெறுகிறார்.

பவுல் என்பது உரோமைப் பெயர். பவுலுஸ் என்னும் இலத்தீன் சொல்லுக்குச் 'சிறிய' என்பது பொருள். எனவே இப்பெயர் தமிழ்க் கத்தோலிக்க வழக்கில் 'சின்னப்பர்' என்று மொழிபெயர்த்து வழங்கப்பெற்றது; பொது விவிலியத்தில் 'பவுல்' என அது ஒலிபெயர்ப்புச் செய்யப்பட்டுள்ளது. யூதர் அல்லாதவர் நடுவே வரவேற்பும் செல்வாக்கும் பெற இப்பெயர் பெரிதும் துணை புரிந்திருக்கலாம். பவுல் என்பதே மக்கள் நடுவே புகழ்பெற்ற பெயர். இவ்வாறே அவர் தம்மை அறிமுகம் செய்துகொள்கிறார்.

சவுல் என்னும் எபிரேயப் பெயருக்கு '(கடவுளை) வேண்டிக்கிடைக்கப்பெற்றவர்' என்பது பொருள். இஸ்ரயேலின் முதல் அரசருடைய பெயர் இது. ஆகவே யூத வட்டாரங்களில் சவுல் என்றே அவர் அழைக்கப் பெற்றார். **(அடுத்த மன்னாவில் தொடரும்)**

ஜேர்மன் நாட்டில் 10 வருடத்திற்கு ஒருமுறை இடம்பெறும்

அபூர்வமான திருப்பாடுகளின் காட்சி

(ஜேர்மனியில் இருந்து மின்னஞ்சல் மூலம் கமிலஸ் துரைசிங்கம்)

தென் ஜேர்மன் அல்ப்ஸ் மலைச்சாரலில் ஏறக்குறைய எட்டு மாதங்களாவது பனி படர்ந்திருக்கும். இந்த அழகான இயற்கைச் சூழல் நிறைந்த அமைதியான மலையடிவாரத்தில் உள்ள ஒரு சிறிய கிராமத்தின் பெயர் ஓபர்அமெர்கவ் (Oberammergau). ஜேர்மன் மக்களிடம் இக்கிராமத்தின் பெயரைச் சொல்லிக் கேட்டால் இப்படிப் பெயருள்ள ஒரு கிராமம் இங்குள்ளதா என வியந்துகொள்வர். ஆனால் உலகில் பல்வேறு நாடுகளிலும் இக்கிராமத்தின் பெயர் மிகவும் பிரபலம் பெற்றுள்ளது.

அப்படி என்னதான் இக்கிராமத்தின் சிறப்பு என்று பார்த்தால், 1633ஆம் ஆண்டில் ஒருநாள், 30 வருடப் போரின் நடுப்பகுதியில் மக்கள் கொள்ளைநோயினால் மடிந்துகொண்டிருந்த பொழுது இக்கிராமத்தவர் ஒன்றுகூடினர். இக்கொடிய நோயிலிருந்தும், போரிலிருந்தும் தாம் காப்பாற்றப்பட்டால், துன்பம், இறப்பு, உயிர்ப்பை எடுத்துக்காட்ட ஒவ்வொரு 10 வருடமும் கிறிஸ்துவின் திருப்பாடுகளின் காட்சியை தமது கிராமத்தில் மேடையேற்றுவதாக எடுத்துக்கொண்ட நேர்த்தியின் வெளிப்பாடு 1634ஆம் ஆண்டில் முதல்முறையாக மேடையேறியது. அன்று தொடக்கம் 10 வருடங்களுக்கு ஒருமுறை கிறிஸ்துவின் பாடுகள், இறப்பு, உயிர்ப்பு போன்றவற்றை அக்கிராமத்தின் வீதிகளிலும், தோப்புகளிலும் இதற்காக அமைக்கப்பட்ட அரங்குகளிலும் காட்சியாக நடித்துக் காட்டுவது தொடர்கின்றது.

இதில் வியப்பதற்கு என்ன உண்டு? எம் நாட்டிலும் திருமறைக் கலாமன்றம் போன்ற அமைப்புக்கள் இக்காட்சிகளைச் சிறப்பாகச் செய்கிறார்களே என நாம் எண்ணலாம்.

ஆனால் இங்கு இடம்பெறும் மிகச்சிறப்பான அம்சம் என்னவென்றால் இந்நிகழ்வு ஒவ்வொரு பத்து வருடங்களுக்கு ஒருமுறை எவ்வித செயற்கை அலங்காரங்களும் இன்றி தத்ரூபமாக நிகழ்த்திக் காண்பிக்கப்படுவதுடன், ஏறக்குறைய அந்தக் கிராமத்தில் வாழும் பெரியோர், பெண்கள், இளைஞர், பிள்ளைகள் உட்பட 5000 மக்கள் நடிப்பில் பங்கெடுத்துக்கொள்வதுதான். பாரிய காட்சிகளான பிலாத்துவின் அரசவை முன்பாக கிறிஸ்துவைக் குற்றம்சாட்டும் காட்சியில் 750 பேரும், சிலுவைப்பாதைக் காட்சியில் 400பேரும் தோன்றுவர். இக்கிராமத்தின் அரைப்பங்கு மக்கள் காட்சிகளில் பங்கேற்க மிகுதி அரைப்பங்கு மக்களும் தமது ஊருக்கு இக்காட்சியைப் பார்க்க வரும் விருந்தினர்களை வரவேற்பதிலும் உபசரிப்பதிலும் கவனமெடுத்துக்கொள்வர்.

கடந்த முறை 2000ஆம் ஆண்டில் இந்நிகழ்வு மிகச்சிறப்பாக இடம்பெற்றிருந்ததைத் தொடர்ந்து மீண்டும் 10 வருடங்களின் பின்பு அடுத்த வருடம் 2010ல் இக்காட்சியை அரங்கேற்றுவதற்கான ஆயத்த நிகழ்வுகள் ஆரம்பமாகியுள்ளன. 2010ல் ஓபர் அமர்கவ்வில் இடம்பெறவுள்ள திருப்பாடு-களின் காட்சியில் பங்குபெறவுள்ள அனைத்து நடிகர்களுமே வழக்கம்போன்று 2009 திருநீற்றுப் புதன் கிழமையிலிருந்து தலைமுடி வெட்டுவதையோ, தாடி, மீசைகளைச் சவரம் செய்வதையோ தவிர்த்துக்கொள்வார்கள். இவ்விரதம் 2010ல் இக்காட்சிகள் இடம்பெற்று முடியும்வரை தொடரும். விசேடமாக இங்கு இடம்பெறும் நிகழ்வுகள் பலவும் வழமையான நிகழ்வுகளுக்குச் சற்று வித்தியாசமானதாக அமைந்திருக்கும்.

உதாரணமாக பார்வையாளர்கள் கிறிஸ்துவை சற்று வித்தியாசமானவராகக் காண்பார்கள். அன்பாக அளவளாவும் கிறிஸ்துவாக மட்டும் இல்லாமல் வாக்குவாதம் புரியும் இறைவாக்கினராகவும், மறையையும் அரசையும் தவறாகப் பயன்படுத்துவோரைக் கண்டிக்கும் ஒருவராகவும் மேடையில் காண்பர். இக்காட்சியின் இறுதியில் மகதல மரியாவின் உயிர்ப்புத் தரிசனம் கொடுத்த மகிழ்ச்சியின் குரல், அல்லேலூயா எனும் எழுச்சிக்குரல் பலரையும் உயிர்ப்பில் நேரடியாகப் பங்கேற்கும் உணர்வைக் கொடுப்பதாக அமைந்திருக்கும்.

2010ம் ஆண்டு மே 15 தொடக்கம் ஒக்டோபர் 03 வரை இடம்பெறவுள்ள இக்காட்சிகளைக் காண உலகின் பல பாகங்களிலுமிருந்தும் 5 இலட்சத்திற்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் இக்கிராமத்துக்கு வருகைதரவுள்ளனர் என்பதுடன் காலை தொடக்கம் இரவுவரை திறந்தவெளியரங்கில் 6 மணித்தியாலங்களுக்கு இக்காட்சி மதியம் ஒரு நீண்ட இடைவேளையுடன் நீடிக்கும். இந்நிகழ்வு 102 காட்சி நாட்களுக்கு இடம்பெறவுள்ளதுடன், தற்பொழுதே 3 இலட்சம் காட்சி நுழைவுச்சீட்டுகளும், அக்கிராமத்திலுள்ள பல தங்கும் விடுதி அறைகளும் பதிவு செய்யப்பட்டுவிட்டதாக இதன் அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். இந்நிகழ்வு இக்கிராமத்தவர்களுக்கு 10 வருடங்களுக்கொருமுறை இடம்பெறும் சமய நிகழ்வாக மட்டும் இல்லாது ஓர் சமய ஊர்த் திருவிழாவாகவும் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. இதுபற்றிய மேலதிக விபரங்களை அறிய விரும்புவோர் www.oberammergau-passionsspiele.de என்ற இணையத்தள முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

இறைவன் உங்களை ஒருநாளும் மறப்பதில்லை .....

3ம் பக்கத் தொடர்ச்சி

தனது விஜயத்தின் நோக்கத்தைப்பற்றி அவர் குறிப்பிட்டபோது, வன்னியில் நடக்கிற மனிதப் பேரவலத்தினால் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ள யாழ் குடாநாட்டு மக்களின் துன்பத்தில் தானும் இணைந்து பங்கெடுக்கவே வந்தேன் என்றும், தன்னிடம் இதற்கான உடனடித் தீர்வு எதுமில்லை யென்றும் தெரிவித்தார்.

திருத்தந்தை 16ம் பெனடிக்ற் அவர்கள் இலங்கையில் தற்போது நடக்கின்ற கொடூரமான போர்பற்றி நன்கு அறிவார் என்றும், தனது அக்கறையையும் செபங்களையும் இதனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தெரிவிக்கும்படி அவர் தன்னைக் கேட்டுக்கொண்டதாகவும் திருத் - தந்தையின் பிரதிநிதி மேலும் தெரிவித்தார்.

பெப்ரவரி 8ம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ் மரியன்னை பேராலயத்தில் யாழ் ஆயருடனும் பல குருக்களுடனும் அவர் இணைந்து திருப்பலி நிறைவேற்றினார்.

முன்னதாக இளவாலையில் உறுதிப்பூசுதல் அருட்சாதனச் சடங்கையும் நிறைவேற்றிய இவர் இடம்பெயர்ந்த மக்கள் வாழும் முகாம்களுக்கும் விஜயம்செய்து அம்மக்களின் நிலையை நேரில் அவதானித்துத் தெரிந்துகொண்டார்.

தான் இலங்கையைவிட்டுப் போவதற்கு முன்னதாக மக்களின் நல்வாழ்வுக்காகவும் நாட்டின் அமைதிக்காகவும் தன்னால் இயன்ற முயற்சிகளை மேற்கொள்வதாகவும் அவர் உறுதி கூறினார்.

காயம்பட்ட அங்கங்கள் சிதைக்கப்பட்ட மக்களை .....

3ம் பக்கத் தொடர்ச்சி

இதனைக் கண்டிப்பதற்கு உலக நாடுகளுக்கு கடமையும் உரிமையும் உண்டு.

சமத்துவமும், நீதியும் அற்ற சமூகத்தில் அமைதி இருக்க முடியாது. எனவே, தமிழர்கள் தங்கள் அடையாளத்தைப் பேணவும், தம் மாண்பினைக் காக்கவும் சர்வதேச மனித உரிமை நிறுவனங்கள் உத்தரவாதம் அளிக்க வேண்டும். இதனை ஓர் இனத்தின் பிரச்சினையாக மட்டும் பார்க்காமல், மனிதர்களே மனிதர்களை அழிக்கும் மனித உரிமைப் பிரச்சினையாகவே நாம் பார்க்கிறோம். இலங்கை அரசு அத்தனை மனித உரிமைகளையும் அப்பட்டமாக மீறுவதற்கு நாம் மௌன சாட்சிகளாய் இருக்க முடியாது. எனவே, இலங்கை அரசின் மனித உரிமை மீறல்களை, தமிழின அழித்தொழிப்பை இந்திய அரசு கண்டிக்க வேண்டும். உடனடியாக போர் நிறுத்தம் செய்து தமிழின மக்களின் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வு காண இலங்கை அரசை வலியுறுத்த வேண்டுமென இந்திய அரசை நாம் கேட்டுக்கொள்கிறோம்.

அங்கு இன்னலுறும் மக்களுக்கு இந்திய அரசு உடனடியாக மனிதாபிமான உதவிகள் சென்றடைய இலங்கையை வலியுறுத்தவும், மக்களின் மறுவாழ்வுக்கு வழிகாணவும் வேண்டுமென இந்திய அரசை வேண்டுகிறோம்.

மக்களின் துன்பம் துடைக்கவும், நிவாரணப் பணிகளை மேற்கொள்ளவும் முயலும் தன்னார்வத்தொண்டு நிறுவனங்கள், செஞ்சிலுவைச் சங்கம் போன்ற அமைப்புக்கு மக்கள் தங்கியுள்ள பகுதிகளில் நுழையவும், பணி செய்யவும் இலங்கை அரசு தடைகளை ஏற்படுத்தாமல் அனுமதி வழங்கவும் இந்திய அரசும் உலக நாடுகளும், பன்னாட்டு நிறுவனங்களும் வற்புறுத்த வேண்டுமெனக் கோருகிறோம்.

எனவே, இலங்கை அரசு உடனடியாகப் போர் நிறுத்தம் செய்து பேச்சுவார்த்தைமூலம் தீர்வு காண வேண்டுமெனக் கோருகிறோம். இந்திய அரசு இலங்கை இராணுவ நடவடிக்கைகளுக்கு ஒருபோதும் துணைபோகக்கூடாது எனவும் போர் நிறுத்தம் செய்வதற்குரிய அறிவுரைகளை தமிழக முதல்வர் இந்திய அரசுக்கு உடனடியாக வழங்க வேண்டுமெனவும் கோருகிறோம்.

மன்னார் திருச்சபையின் பரந்துபட்ட பணிகள் ....

4ம் பக்கத் தொடர்ச்சி

அதேபோன்று மன்னார்ப் பேராலயத்தைச் சேர்ந்த ஆண்கள் தோழமைக்குழுவினர் ஒவ்வொரு ஞாயிறு தினமும் காலை 9.00 தொடக்கம் மதியம் 1.00 மணிவரை இம்மக்களைச் சந்தித்து ஆறுதல் கூறுவதுடன் காயப்பட்டு நடக்க முடியாத நிலையில் இருப்பவர்களைக் கழுவித் துடைத்து துப்பரவுப் பணிகளிலும் ஈடுபடுகின்றனர்.

இப்பணிகளுக்கு தொடர்பாளராக இருந்து செயற்பட்டுவரும் அருட்பணியாளர் ஜெ. ஜெகானந்தன் அடிகளார் தன் பணிகள் தொடர்பாக மன்னாவுக்குக் கருத்துத் தெரிவிக்கையில், இதுவரை ஏறக்குறைய 1500ற்கும் மேற்பட்ட மக்கள் வைத்தியசாலையில் தங்கிச் சிகிச்சை பெற்றுள்ளனர். இதில் ஏறக்குறைய 800 பேர் மட்டில் சிகிச்சையை முடித்துக்கொண்டு சென்றுவிட்டனர். இன்னும் 700 பேர் மட்டில் தற்போது வைத்தியசாலையில் இருக்கின்றனர்.

தொடர்ந்து காயப்பட்ட மக்கள் வந்து - கொண்டிருப்பதாகவும் கூறினார்.

தன் பணியின் தன்மைபற்றி குறிப்பிட்ட அவர், மன்னார் மறைமாவட்டத்தில் இவ்வாண்டு நற்செய்தி அறிவிப்பு ஆண்டாக இருக்கும் சூழ்நிலையில் வைத்தியசாலையில் உள்ள வன்னி மக்களின் நலன்களைக் கவனிக்கும் இப்பணியானது வாழ்க்கை மூலம் நற்செய்திக்குச் சான்றுபகரும் நடைமுறைச்சாத்தியமான நற்செய்தி அறிவிப்புப் பணியாக இருக்கின்றது என்றார். மேலும் வைத்தியசாலையில் இப்பணிகளைத் தான் சுதந்திரமாக செய்வதற்கு அனுமதியளித்த வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி வைத்தியர் அரவிந்தன் அவர்களுக்கும் மற்றும் ஒத்துழைப்பு வழங்கும் தாதியர் தலைவி திருமதி லோறன்ஸ் இன்னும் பொருள் மற்றும் பண உதவிகளைத் தாராளமாக வழங்கிய நிறுவனங்கள், தனிநபர்களுக்கும் தன் நன்றிகளைத் தெரிவிப்பதாகக் கூறினார்.

மாணவர் பக்கம்

2008ம் ஆண்டு நடைபெற்ற உயர்தர பரீட்சை வினாவிடை

கிறிஸ்தவம் II

2008ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சையின் கிறிஸ்தவ பாட இரண்டாம் வினாத்தாளின் முதலாவது பகுதி வினாக்களும் விடைகளும் 2வது பகுதியின் வினாக்களும் விடைகளும் இங்கு தரப்படுகின்றன.

இங்கு வழங்கப்படும் விடைகள் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவைப் பிரிவினரால் தயாரிக்கப்பட்டவையாகும். இது விடைத்தாள் பரீட்சிகர்களின் பயன்பாட்டிற்காகத் தயாரிக்கப்பட்டது. இதனை வகுப்பறைக் கற்பித்தலின் துணைச் சாதனமாகக் கொள்ள முடியும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பகுதி I

1. எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக. பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து அதன் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டின்மீது எழுது.

1.1 19ஆம் நூற்றாண்டில் உலகத்தில் தொழிலாளர் உரிமைகள் பற்றி உரத்துக் குரல் கொடுத்தவர்,
(1) அருட்தந்தை யோசப் காடயின் (2) மாட்டின் லூதர் அரசன்
(3) 13ஆம் சிங்கராய பாப்பரசர் (4) 23ஆம் அருளப்ப பாப்பரசர்
(5) ஆபிரகாம் லிங்கன்

1.2 ஆதித் திருச்சபையில் காணப்பட்ட, இன்றைய திருச்சபைக்கு ஓர் சவாலாக விளங்கும் பண்பு :
(1) பெண் மறைபோதகர்கள் இருப்பது.
(2) அனைவரும் தமது உடமைகளைப் பொதுவாய் வைத்திருப்பது
(3) இறைவாக்குரைக்கும் ஆற்றல் உடையோர் இருப்பது
(4) சமூக அபிவிருத்திப் பணிகளில் ஈடுபடுவது
(5) தெண்டர்கள் இருப்பது

1.3 பர்னபா மூலம் கிறிஸ்தவ சபையில் நிறைவேற்றப்பட்ட உயர்ந்த சேவை :
(1) புனித பவுலை அப்போஸ்தலர்கள் ஏற்றுக்கொள்வதற்கு அவர் சார்பில் முன்னிற்றல்
(2) தனக்குரிய உடமைகள் அனைத்தையும் திருச்சபையின் தலைவரிடம் ஒப்படைத்தல்
(3) திருமுழுக்கு யோவானின் சீடர்களுக்குத் திருமுழுக்குக் கொடுத்தல்
(4) ஜெருசலேமில் ஆரம்பித்த சபையை அந்தியோக்கியாவிற்குக் கொண்டு செல்லக் காரணமாதல்
(5) புனித பேதுருவின் மறைபோதகப் பயணத்தில் பங்குகொள்ளல்

1.4 தான் பெற்ற உயர்ந்த அழைப்பிற்கேற்ப வாழத் தேவையான சக்தியும் ஒளியும் மனிதனுக்குக் கிடைப்பது
(1) திருச்சபையின் படிப்பினைகளின் மூலம்
(2) மறைபோதகர்கள் மூலம் (3) பரிசுத்த ஆவியின் மூலம்
(4) நற்செய்தியின் மூலம் (5) இறைவெளிபாட்டின் மூலம்

1.5 பாவத்தின் விளைவாக இருளடைந்த மனித அறிவை நேரிய வழியில் திருப்ப வேண்டியது
(1) சிறந்த அனுபவங்கள் மூலம் (2) மறைக்கல்வியின் மூலம்
(3) இறைவாக்கினர் மூலம் (4) காலத்தின் அறிகுறிகள் மூலம்
(5) ஞானத்தின் மூலம்

1.6 நாஸ்திகக் கொள்கைக்கு உண்மையான பிரதிபதில்
(1) தர்க்க ரீதியாக இறையியலைக் கற்றல்
(2) கிறிஸ்தவ படிப்பினைக்கு ஏற்ப விசுவாசத்தில் நிறைவான ஓர் வாழ்க்கை வாழுதல்
(3) தேசிய சிந்தனைக்கு ஏற்ப செயற்றிறன் உடையவராதல்
(4) விஞ்ஞானத்திற்கும் தொழில்நுட்பத்திற்கும் உரிய இடத்தை அளித்தல்
(5) மீட்பின் வரலாற்றை முறையாகக் கற்றல்

1.7 எத்தகைய மனிதக் குழுவினராயினும் அவர்களது கடமையாக இருப்பது
(1) தாம் ஏற்றுக்கொண்ட மறையைப் பிரச்சாரம் செய்தல்
(2) மனித அடிப்படையில் உரிமைகளைத் தேடிப்பார்த்தல்
(3) மனித இனத்திற்குப் பணியாற்றுதல்
(4) தமது தனித்துவத்தைத் காத்துக்கொள்ளுதல்
(5) சாதாரண வாழ்க்கைத் தொழிலைத் தெரிவுசெய்து கொள்ளுதல்

1.8 வேறு ஒருவர் செய்த குற்றத்திற்காகப் பரிகாரம் செய்யத் தான் தயார் எனப் புனித பவுல் அறிவிப்பது
(1) துரானசுக்கு (2) சில்வானசுக்கு (3) திமோத்தேயுவுக்கு
(4) தீத்துவிற்கு (5) பிலமோனுக்கு

1.9 இறுதிநாளைப் பற்றிய அச்சம் நம்மில் உருவாகாது இருக்க நாம் வாழவேண்டியது
(1) ஒளியின் மக்களாக
(2) விசேட அழைப்பு ஒன்றைப் பெற்றவர்களாக
(3) நிதியை மதிப்பவர்களாக
(3) தியாக சிந்தை உடையவர்களாக
(4) அயலாரைப் பற்றிய விழிப்புணர்வு உடையவர்களாக

1.10 கொரிந்திய சபையின் ஆரம்ப கர்த்தா ஆனவர்
(1) அப்பலோ (2) அகிலா (3) பிறிஸ்கிலா
(4) யோவான் மார்க்கு (5) புனித பவுல்

1.11 கிறிஸ்தவன் கிறிஸ்துவின் சாயலைத் தன்னில் சிறிது சிறிதாக வளர்த்துக்கொள்ள வேண்டியது
(1) சட்டத்திற்கேற்பச் செயற்படுவதன் மூலம்
(2) மனித உரிமைகளை மதிப்பதன் மூலம்
(3) ஒருமைப்பாட்டின் பிணைப்பு மூலம்
(4) பக்தி முயற்சிகளை நடாத்துவதன் மூலம்
(5) பொதுசன சேவை மூலம்

1.12 திருமுழுக்கின் மூலம் புதுவாழ்வைப் பெற்ற ஒருவரின் கடமையாக இருப்பது
(1) பாவத்தினால் வரும் அழிவை விளங்கிக்கொள்ளுதல்
(2) உடல் இச்சைகளுக்கு அடிமையாகாதிருத்தல்
(3) பிறர் அன்பு உடையவராதல்
(4) தனது நற்பெயரைப் பாதுகாத்துக்கொள்ளுதல்
(5) ஏழைமையைப் பாராட்டுதல்

1.13 புதிய உடன்படிக்கையில் இறைவாக்கினர் என அறிமுகம் செய்யப்படுபவர்கள்
(1) திருமுழுக்கு யோவானின் சீடர்கள்
(2) திருத்தொண்டர்கள் ஏழு பேரும்
(3) தூய ஆவியின் அருளினால் வருங்கால நிகழ்ச்சிகளை எடுத்துரைத்தவர்கள்
(4) பழைய உடன்படிக்கையின் இறைவாக்கினர் போதனைகளை விளக்கியவர்கள்
(5) விசுவாசிகளின் ஒழுக்க வாழ்வைப் பற்றிக் கவனம் செலுத்தியவர்கள்

1.14 புதிய கடல் மார்க்கம் தேடிப் போர்த்துக்கேயர் கீழைத்தேசத்துக்கு வந்தது
(1) கிறிஸ்தவ மதத்தைப் போதிக்க
(2) ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சியின் தாக்கம் காரணமாக
(3) கீழைத்தேய வர்த்தகத்தைத் தமதாக்கிக்கொள்ள
(4) புதிய நாட்டைத் துருக்கியரிடமிருந்து மீட்டுக்கொள்ள
(5) பரிசுத்த தந்தையின் வேண்டுகோளை நிறைவேற்ற

1.15 நாம் கிறிஸ்துநாதரின் பாஸ்கா மறைபொருளில் செயல் மூலம் பங்குகொள்வது
(1) திருவழிபாட்டில் (2) திருப்புகழ் மாலையில்
(3) திருமுழுக்கில் (4) கைகளை வைத்தல் சடங்கில்
(5) அப்பம் பிட்குதல்

1.16 இலங்கைவாழ் மக்களின் எழுத்தறிவை விருத்தி செய்ய ஒல்லாந்தர் மூலம் கிடைத்த பெறுமதி வாய்ந்த சேவை என்ன?
(1) உரோம ஒல்லாந்தச் சட்டத்தைத் தாபித்தல்
(2) முறைசார் கல்வி முறையை ஏற்படுத்துதல்
(3) புதிய சொற்றொகுதி ஒன்றினை மொழியுடன் சேர்த்தல்
(4) அச்சியந்திர தகவலை இந்நாட்டிற்கு அறிமுகம் செய்தல்
(5) பணப் பயிர்ச்செய்கையில் மக்களை ஈடுபடுத்துதல்

1.17 காலத்தின் அறிகுறிகள் மூலம் இன்று இலங்கையில் கிறிஸ்தவ மக்களுக்குக் கிடைக்கும் பிரதான செய்தி
(1) சக்திவாய்ந்த பொதுநிலையினர் குழுக்களை உருவாக்க வேண்டும் என்பது
(2) பல்வேறுபட்ட தொடர்புசாதனங்களின் மூலம் நற்செய்தியை வெளிப்படுத்த வேண்டும் என்பது
(3) முன்மாதிரிகையுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை வாழுவது அவசியம் என்பது
(4) கிறிஸ்தவ திருச்சபை மென்மேலும் பண்பாட்டுமயம் ஆதல் வேண்டும் என்பது
(5) மத உரிமைகள் பேணப்பட வேண்டும் என்பது

1.18 "நீங்கள் விதைப்பது இறந்தாலன்றி அது புதுவாழ்வு பெறமுடியாது" எனப் புனித பவுல் கொரிந்தியருக்கு அறிவுரை வழங்குவது
(1) மனிதன் மரணத்திற்கு முகம் கொடுக்க வேண்டிய முறையை எடுத்துக்காட்ட
(2) மரணம் அனைவருக்கும் பொதுவான நியதி என்பதை உணர்த்துவதற்கு
(3) உலகம் புதிய மாற்றம் அடைவது எவ்வாறு என்பதை விளக்க
(4) சரீர உத்தானத்தைப்பற்றி அறிவுரை வழங்க
(5) விவசாயிகளுக்கு இறை அரசைப் பற்றி ஆழ்ந்த அறிவைப் பெற்றுக்கொடுக்க

1.19 "இவர்கள் திட்டமும் செயலும் மனிதரிடத்திலிருந்து வந்தவை என்றால் அவை ஒழிந்துபோகும். அவை கடவுளைச் சார்ந்தவை என்றால் நீங்கள் அவற்றை ஒழிக்க முடியாது" இவ்வாறு யூதத் தலைவர்களை எச்சரிக்கை செய்தவர்
(1) நிக்கதேமுஸ் (2) கமாலியேல் (3) கொர்னேலியு
(4) நூற்றுவர் தலைவன் (5) அனனியா

1.20 திருச்சபைச் சரித்திரத்தைக் கற்கும்போது அந்தியோக்கிய புனித இன்னாசியாரால் எழுதப்பட்ட தொகுப்பு முக்கியத்துவம் பெறுவது
(1) உரோமைப் பேரரசில் கிறிஸ்தவ கலாபனை ஏற்பட்டதற்கான காரணத்தை எடுத்துக் காட்டியுள்ளதால்
(2) பிரிவினைப்பட்டிருந்த கிறிஸ்தவர்களை ஒன்றுசேர்க்க எடுத்த முயற்சிகள் குறிப்பிடப்பட்டிருப்பதால்
(3) ஆரம்பகாலத்தின் திருவழிப்பாடு பற்றி விடயங்கள் அடங்கியுள்ளதால்
(4) கிறிஸ்தவ சபையில் புதிய சமூகப் பண்புகள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளதால்
(5) கிறிஸ்தவர்கள் கலாபனைகளுக்குத் திடமாக முகம்கொடுத்தமை பற்றி விவரங்கள் தரப்பட்டுள்ளதால்

விடைகள்

01.3	04.3	07.3	10.5	13.3	16.4	19.2
02.2	05.5	08.5	11.3	14.3	17.1	20.5
03.1	06.2	09.1	12.2	15.3	18.4	

பகுதி II

வினா 2. மனிதனைப் படைத்திருப்பது சமுதாயத்தில் ஒருவனாக வாழ்வதற்கே இக்கருத்தைப் பின்வரும் தலைப்புகளின் வரிசையில் 250 சொற்கள் அள்வில் விளக்குக.
(அ) மனிதனுக்கு சமுதாயத்தின்மீதுள்ள கடமைகள்
(ஆ) சமுதாயமாக வாழ்வதன் மூலம் கிட்டும் நன்மைகள்
(இ) சமுதாய வாழ்வு தொடர்பாக இயேசுவின் படிப்பினைகள்
(ஈ) சமுதாய வாழ்விற்கு எதிராக இன்று எழும் சவால்கள்

விடை

(அ) இறைவனின் சித்தத்தை அறிய எப்போதும் விழிப்பாயிருத்தல் மனிதனின் சமூக வாழ்வு நிலை, விலங்குகள் மத்தியில் காணப்படும் கூட்டுத்தன்மையைவிட உயர்ந்ததாகும். சமுதாய சட்டங்களுக்குக் கீழ்ப்படிதல், அவற்றை மதித்தல் வேண்டும். பொது நலன் கருதுதல், அயலார் மட்டில் அக்கறை உடையோராயிருத்தல், சமுதாயத் தலைவர்களோடு ஒத்துழைத்தல், பல சமூகங்களோடு ஒருமித்துச் செயற்படுதல், திருச்சபைச் சமூகத்தில் தமக்குள்ள கடமைகளை நிறைவேற்றுதல்

(ஆ) பொதுக் குறிக்கோளை நிறைவேற்ற முடிதல், சூழலை வெற்றிக்கொள்ள இலகுவாதல், தனித்து நிறைவேற்றிக்கொள்ள முடியாத தேவைகளைக் கூட்டாக நிறைவேற்றிக்கொள்ள முடிதல், பாதுகாப்புப்பெற தனது ஆற்றல்களை விருத்தி செய்து கொள்ள வாய்ப்பு ஏற்படல், சமுதாய வாழ்வின் மூலம் கிடைக்கும் திருப்தி, அபிவிருத்திக்குப் பங்களித்தல்

(இ) திருச்சபையை நிறுவுதல், சமூக அருட்சாதனங்களை அளித்தல், சமூக வாழ்வு பற்றி கற்பித்தல், ஒன்றுகூடி வாழும் இடத்தில் இறைவன் இருக்கிறார்.

(ஈ) போட்டிபோடும் வாழ்க்கை நிலை. சுயநலம் நாடும் குறிக்கோள், தனித்துத் தான் என்று வாழும் அடிமைநிலை, நாகரீக வாழ்வு முறைகளால் வேறுபாடுகளை உருவாக்கி சமூக வாழ்வு சீர்கெடுதல்.

இத்தகைய விடயங்களை உள்ளடக்கி 250 சொற்கள் அளவில் விளக்கம் அளித்து விடை எழுதியிருப்பின் புள்ளிகள் 20 அன்றேல் தகுதியான முறையில் புள்ளி வழங்குக.

வினா 3.
(அ) மனிதன் உலகில் உயர்ந்த படைப்பாகக் கணிக்கப்பட ஏதுவாகும் காரணங்கள் ஐந்தினை முன்வைக்குக
(ஆ) நேர்மையான மனச்சான்றுடன் வாழ்வதற்கு மனிதன் பின்பற்ற வேண்டிய கொள்கைகள் ஐந்து எழுதுக.
(இ) இப்போது மனிதன் சாவைப்பற்றி அங்கலாய்ப்புக் கொள்ளத் தேவையில்லை என்பதனை உறுதிப்படுத்தும் சான்றுகள் ஐந்து எழுதுக.
(ஈ) இறைவனின் படைப்பாகிய மனிதன் நாஸ்திகக் கொள்கைகளுக்கு அடிமையாக ஏதுவாகும் காரணங்கள் ஐந்து தருக

விடை (அ)
i. இறைவனின் சாயலாக மனிதன் படைக்கப்பட்டிருத்தல்
ii. படைப்பை ஆளும் விருத்தி செய்யும் பொறுப்புடையவனாதல்
iii. அறிவு - ஞானம் பெற்றிருத்தல்
iv. புதிய உலகம் படைக்கும் பொறுப்பைப் பெற்றிருத்தல்
v. கலாச்சாரம் ஒன்றை உருவாக்கும் ஆற்றல் கொண்டிருத்தல்
(இவ்வித விடையங்கள்)

(ஆ) i. நேரிய மனச்சான்றுக்குக் கீழ்ப்படிதல்
ii. மனச்சான்று, மனிதனுக்குள் இருக்கும் இறைவனின் குரல் என ஏற்றுக்கொள்ளுதல்
iii. நேரிய மனச்சான்றின்படி வாழ ஆன்ம சக்தியைப் பெற்றுக் கொள்ளல்
iv. மனச்சான்றினைத் தவறற்றதாகப் பாதுகாக்கக்கூடிய வழிகளை பின்பற்றுதல்
v. எவ்வித சந்தர்ப்ப சூழ்நிலையிலும் மனச்சான்றினைத் தட்டிக் கழிக்காது சரி எது பிழை எது எனத் தீர்மானிக்கும் ஆற்றலைப் பெறுதல். *(இவ்வித கொள்கைகள்)*

(இ) i. வாழும் காலத்தில் செய்கின்ற இறவாச் செயல்களால்
ii. பாஸ்கா மறைபொருளினூடாக கிறிஸ்து மரணத்தை வெற்றி கொண்டபடியால்
iv. மரணம் வெற்றியை எங்களுக்கு உரிமையாக்கித் தந்துள்ளதால்
iv. மரணம் வாழ்வின் முடிவு அல்ல என்பதால்
v. மனிதனைப் படைத்திருப்பது நித்திய வாழ்விற்கு என்பதால்
(இவ்வித சான்றுகள்)

(ஈ) i. விஞ்ஞானத்திற்கும் தொழில் நுட்பத்திற்கும் அடிமையாதல்
ii. இலௌகீகத்தில் நாட்டம் கொள்ளுதல்
iii. உலகத்தில் பரவிச் செல்லும் அநீதி - சமத்துவமின்மை என்பன
iv. இறைவிசுவாசம் மனித சுதந்திரத்திற்குத் தடை என நினைத்தல்
v. இறைவனை வழிபடும் சிலரின் துன்மாதிரிகை
(இவ்விதகாரணங்கள்) *(ஒரு பகுதிக்கு புள்ளிகள் 5x4 = 25)*

(தொடர்ச்சி அடுத்த மாத இதழில்)

கறிற்றாஸ் - வாழ்வுதயம்

CARITAS - VALVUTHAYAM (Diocese of Mannar)

மன்னார் மறைமாவட்ட நீதி, சமாதான, மனித முன்னேற்ற நடுநிலையம்

"நான் தாகமாய் இருந்தேன் என் தாகத்தை தணித்தீர்கள்"

CARITAS - VALVUTHAYAM (Diocese of Mannar)

போஷகர்: அதிவந்தனைக்குரிய ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை

இயக்குனர்: அருட்தந்தை பெப்பி சோசை அடிகளார்

Affiliated to National Secretariat for Justice, Peace & Human Development Commission of the Catholic Bishops' Conference in Sri Lanka incorporated by Act of Parliament, No. 17 of 1983 - Caritas - Valvuthayam,
Diocese of Mannar, No. 17, Main Street, Mannar - Sri Lanka. T.P: 023-2222140, Fax : 023-2222893, E-mail : valvum@sltnet.lk

தேசிய சமாதானச் செயற்திட்டம் National Peace Programme

"அமைதியுடன் இணைந்துவாழ்ந்து தூய ஆவி அருளும் ஒருமைப்பாட்டைக் காத்துக்கொள்ள முழுமுயற்சி செய்யுங்கள்" (எபே. 4:3)

கிறிஸ்தவ அடிப்படையில் பணியின் அடித்தளம் கட்டப்பட வேண்டும்

வாழ்வுதயப் பணியாளர்கள் மத்தியில் சேவியர் அடிகளார்

கிறிஸ்தவ அடிப்படையில் பணியின் அடித்தளம் கட்டப்படவேண்டும் என அருட்பணியாளர் சேவியர் அடிகளார் தெரிவித்தார். வாழ்வுதயப் பணியாளர்களுக்கான மாதாந்த சமாதானத் தியானமானது கடந்த 13.01.2009ல் மன்னார் பேராலய மண்டபத்தில் நடைபெற்றபோதே இந்தியாவிலிருந்து வருகை தந்திருந்த அடிகளார் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், யேசுவின் பணிவாழ்வும் இறைவாழ்வும் இணைந்தே காணப்பட்டது. பொதுவாகப் பணம் மனித நேயத்தைப் புறம்தள்ளி சமூக சீர்கேட்டை உருவாக்குகிறது. எந்தப் பணியினைச் செய்தாலும் அது எனக்கு நிறைவையும் வாழ்வையும் தரவேண்டும்.

யேசுவின் வாழ்க்கையில் 'மலை அனுபவம்', 'மக்கள் அனுபவம்' இவை இரண்டும் இணைந்தே காணப்பட்டது. இதைப் பின்பற்றிய திருச்சபைக்கு உலக நாடுகள் பெருந்தொகையான நிதியினை நம்பிக்கையின் அடிப்படையில் ஏழைகளுக்காக வழங்கி வருகின்றது.

ஒரு போர் வீரன் எந்த வேளையிலும் தயாரான நிலையில் உள்ளதுபோல் மனிதநேயப் பணியாளர்களாகிய நாமும் எந்த நேரத்திலும் எமது பணிக்குத் தயாரான நிலையில் இருக்க வேண்டும். வலுவூட்டும் சக்தி மிக்க நிலையில் காணப்படவேண்டும். நற்செய்தியின் நம்பிக்கையுடன் சென்ற புனித இராயப்பர் வீதியில் கிடந்த முடவனை எழுந்து நட என்று கூற அது நிறைவேறியது.

யேசுவும் மனிதர்களை நம்பியே தனது பணிகளை விட்டுச் சென்றுள்ளார். எனவே நாம் அனைவரும் அவற்றைப் பொறுப் பேற்றுச் செய்ய வேண்டும். மிக இறுக்-கமான நிகழ்வுகளை சந்திக்க நேர்ந்தாலும் மனித நேயக் கோட் பாடுகளை உதாசீனம் செய்யக்கூடாது.

அக்கோட்பாடுகளாக சிந்தி, செபி, செயற்படு (Think Pray and Act) என்பவற்றைக் குறிப்பிடலாம்.

1. Look around – எம்மைச் சூழவுள்ளவர்களை முழுமையாக அறிந்துகொள்ளல்.

2. Look Up – மக்களை ஒப்புக்கொடுத்து இறைவனை நோக்கிச் செபித்தல்.

3. Look Out – மற்றவர்களுக்கு யேசுவின் விழுமியங்களைச் சொல்ல வாய்பினை தேடிக்கொடுத்தல்.

4. Look Forward – நம்மோடு பழகுகின்றவர்களுக்கு எப்படி யேசுவைப் பற்றிக் கூறுவது என சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருப்பது.

5. Look after – நற்செய்தி விதைக்கப்பட்ட பின்பு அதனை வாழ்வாக்குகின்றாரா எனப் பார்த்து அவருக்கு உதவுதல்.

எனவே பணியாளர்கள் ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் நற்செய்தி அனுபவத்தின் ஊடாகத் தமது பணிகளை முன்னெடுக்க வேண்டும் என்று கூறித் தனது உரையினை நிறைவுசெய்தார்.

தனித்துநின்று செயற்படுவதை விடுத்து அனைவரும் ஒன்றிணைந்து குரல் கொடுப்போம்

சர்வமதத் தலைவர்களின் ஒன்றுகூடலில் டெஸ்மன் குலாஸ் அடிகளார்

சமயங்கள் தனித்து நின்று செயற்படுவதைத் விடுத்து ஒன்றிணைந்து சமாதானத்திற்காகக் குரல் கொடுக்க வேண்டும் என அருட்பணியாளர் டெஸ்மன் குலாஸ் அடிகளார் தெரிவித்தார்.

கடந்த 28.01.2009 அன்று அளவக்கையில் வாழ்வுதயத்தின் தேசிய சமாதானப் பிரிவினரால் நடாத்தப்பட்ட சர்வமதத் தலைவர்களுக்கான ஒன்றுகூடலின்போதே முருங்கன் மறைக்கோட்ட முதல்வரும் அளவக்கைப் பங்குத்தந்தையுமான அருட்பணி டெஸ்மன் குலாஸ் அடிகளார் மேற்கண்டவாறு கூறினார்:

அவர் தொடர்ந்து கூறுகையில், சமயங்கள் அனைத்தும் நல்லவற்றையே போதிக்கின்றன. சமயங்களின் அதிஉன்னதமான நிலை சமூகத்தில் அன்பைப் போதித்து அதனை வாழ்வாக்குவது. இறைவன் மனிதனை உயர்ந்தவன் என்றோ தாழ்ந்தவன் என்றோ படைக்கவில்லை. ஆனால் மனிதன்தான் ஏற்றத்தாழ்வுகளை உருவாக்கி வாழ்வை நடாத்தி வருகின்றான். இப்பேற்பட்ட சமுதாய ஏற்றத் தாழ்வுகளை எம் சமூகங்களில் களைந்து ஒட்டு மொத்த மனிதத் தினை உருவாக்கி சமாதானத்தைக் கட்டியெழுப்புவோம் என்றும் அவர் கூறினார்.

இந்நிகழ்வில் நானாட்டான் ஸ்ரீ செல்வ முத்து மாரியம்மன் கோவில் குரு ஸ்ரீகார்சர்மா அவர்களும் அளவக்கை பள்ளிவாசல் மௌலவி எம். எஸ். எம். நிலாமுதின் அவர்களும் மற்றும் பள்ளிவாசல் நிர்வாக உறுப்பினர்கள், வாழ்வுதய சமாதான இணைப்பாளர் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

28.01.2009 அன்று அளவக்கையில் நடைபெற்ற சர்வமதத் தலைவர் களுக்கான ஒன்றுகூடலின் போது எடுக்கப்பட்ட படம்.

கறிற்றாஸ் புனர்வாழ்வுப் பிரிவினரின் வாழ்வாதாரப் பணிகள்

வன்னி மண்ணில் அவதியுறும் எம் உறவுகளுக்கு புன்னை, நீராவி, பிரமந்தனாறு, தருமபுரம் கிழக்கு, கல்லாறு ஆகிய இடங்களில் தங்கி இருந்த 936 குடும்பங்களுக்கு உலர் உணவு வழங்கப்பட்டதுடன் வன்னிப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து வண்ணாகுளம் பாடசாலையில் தங்கவைக்கப்பட்டுள்ள 17 குடும்பங்களைச் சேர்ந்த 52 நபர்களுக்கு ஐந்து நாட்களுக்கு சமைத்த உணவு வழங்கப்பட்டுள்ளது. மேலும் வைத்தியச் செலவு, வைத்தியப் போக்குவரத்துச் செலவு, மரண வீட்டுக்கொடுப்பனவு என்பனவற்றுடன் தற்காலிக வீடு அமைப்பதற்கான கிடுகுகளும் வழங்கப்பட்டன.

மனக்காயங்களுக்கு மருந்தளிப்போம்

மன்னார் கறிற்றாஸ் - வாழ்வுதயப் பிரிவுகளில் ஒன்றான உளவள சமூக ஆற்றுப்படுத்தல் பிரிவானது மக்கள் மத்தியில் ஆற்றுப்படுத்தும் பணியினைச் சிறப்பாக ஆற்றிவருகின்றது. மனதில் ஏற்படும் காயங்களுக்கு ஆறுதலான வார்த்தைகள் மூலமும் நல்ல அணுகுமுறைகள் மூலமும் சேவைகள் ஆற்றி வருகின்றது.

தற்கால சூழ்நிலையில் வன்னியிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் உடலுறுப்புக்களை இழந்த நிலையில் வைத்தியசாலைகளில் அல்லலுறுகின்றனர். இவர்களைத் தேடிச்சென்று இவர்களுக்கான ஆற்றுப்படுத்தல் நடைபெற்று வருகின்றது. கை கால்களையும் இழந்த நிலையில் அவதியுறும் மக்களுக்கு உடலால் இயன்ற உதவிகளை உளவளப் பிரிவானது ஆற்றி வருவதுடன் அவர்களின் உடனடித்தேவைகளான உணவு, உடைகள் மற்றும் ஏனைய உதவிகளை நிறுவனத்தின் புனர்வாழ்வுப் பிரிவினூடாக வழங்கி வருகின்றது

உயர் இலட்சியம் கொண்ட மனிதன்

(ஆன்மீகச் சிந்தனைக் கட்டுரை)

- உயர்திரு. சந்திரஜயா, பிரதேச செயலாளர், நானாட்டான் -

மனிதன் படைப்புக்களில் முதன்மையானவன். அவனுக்கு இரண்டு உலகங்கள் உண்டு:
1. உடல் சார்ந்த உலகு (Material World)
2. ஆன்மீகம் சார்ந்த உலகு (Spritual World)

எனவே அவனது வாழ்வு இரண்டும் இணைந்ததாக - ஒன்றோடொன்று சேர்ந்ததாக இருக்க வேண்டும்.

மிருகங்கள் பறவைகள் இயற்கையோடு இணைந்து வாழ்பவை. அவை தத்தமக்குரிய இயல்புநிலைகளைப் பேணி வாழ்பவை. அதனால் அவற்றின் சமநிலை பேணப் படுவதோடு அவற்றின் வாழ்வு குழப்பமடைவ-தில்லை. அவற்றின் வாழ்வைக் குழப்புபவை: 1. மனிதர்களாகிய நாம் 2. இயற்கை அனர்த்தம்

ஆனால் மனிதனின் வாழ்வு வித்தியாசமானது. அவன் இயற்கையை விரோதித்துக்கொண்டும் தன்னையும் பிறரையும் விரோதித்துக்கொண்டும் வாழ்கின்றான். 1. தன் சிந்தனை 2. தன் சொல் 3. தன் செயல் இவற்றினால் குழப்பம் , பிரிவினைகள், அழிவுகள், போராட்டம், உயிர்க்கொலைகள், ஊழல், அபகரிப்புக்கள், சுரண்டல் - இன்னும் பல ஏற்படுகின்றன. இன்று நாம் வாழும் சூழல் இதற்கொரு நல்லுதாரணம்.

இதனால் எப்படியோ வாழ வேண்டிய மனிதனின் வாழ்வு திசை திரும்பியுள்ளது. இறை சாயலாக மனிதப் பண்புகளோடு வாழவேண்டிய மனிதனின் வாழ்வு இன்று திசைமாறியுள்ளது. தனிமனிதன் தான் நல்லவனாக வாழ்ந்தாலும் சமூகத்தின் செயற்பாடுகளினால் துன்பங்களைச் சுமக்கவேண்டியவனாகவும் இருக்கின்றான். இது இன்றைய எமது அனுபவம்.

மனிதன் சிந்திக்கும் தன்மை படைத்தவன். எனவே அறிவாற்றல் பெறுகின்றான். நன்மையானதைப் பகுத்தறியும் வல்லமை உள்ளவன். சுதந்திரமாக சிந்தித்து செயல்படக்கூடியவன். இந்நிலையில் மனித வாழ்வு யாது எனில் - மனித வாழ்வு ஒரு நிறைவல்ல அது நிறைவை நோக்கிய ஒரு வழி, ஊடகம், ஏது எனலாம். (Human Life is not an end but a means to attain an end.)

இங்கே உயர் இலட்சியம் கொண்ட வாழ்வு வாழவேண்டிய மனிதனாக (IDEALIST) நான் இருக்கவேண்டும். உயர் சிந்தனையாளனாக, மாதிரியாக நான் வாழவேண்டும். எனக்கென ஒரு தனித்துவத் தன்மையைக் கொண்டிருக்க வேண்டும். இதனை நாம் மனித நேயம் - மனிதப் பண்புகள் என்கின்றோம்.

நாம் தனித்து வாழ்வதில்லை. குடும்பத்தில், சமூகத்தில் வாழ்கின்றோம். அப்படி வாழ்வதனால் உலகியல், ஆன்மீகம் இரண்டும் இணைந்த தொன்றான சமாதானமான ஒன்றித்த வாழ்வு வாழவேண்டியவர்களாக இருக்கின்றோம். எனவே எனது வாழ்வு மற்றவர்களிலும் வேறுபட்டதாக, வித்தியாசமானதாக இருக்க வேண்டும் என்பது உண்மையே. அப்படியாயின் நான் எவ்வாறு வித்தியாசமானவனாக இருக்க வேண்டும்? யோவான் 1:7 ஒளிக்கு சான்று பகர்தல், யோவான்1:47 கபடற்ற இஸ்ராயலர், லூக்காஸ் 13 : 21 புளிப்பு மா (புளிப்புத் தன்மையைக் கொண்டிருத்தல், சுவையைக் கொடுத்தல், பாதுகாத்தல்) லூக்காஸ் 13 : 34 -35 உப்பு.

என்னைச் சமூகம் வித்தியாசமானவனாகக் கண்டு மரியாதை தருகின்றது. ஏன்?
1. நான் பதவி பணம் கொண்டுள்ளவன் 2. நான் ஆலயத்தில் - குருமனையில் கூடிய பணிகளைச் செய்கின்றேன், வாசகங்கள் வாசிக்கின்றேன், போதிக்கின்றேன், 3. நான் ஒரு போதகர் குரு 4. அரச உயர் பதவி வகிப்பவர்

ஆனால் நான் இல்லாதபோது எனது முரண்பாடான வாழ்க்கை நிலைகுறித்து சமூகம் என்னை விமர்சிக்கின்றது. நான் மேற்சொன்ன வகைகளுக்குள் எனது உண்மை முகத்தினை புதைத்துக்கொண்டு பிழையான வாழ்வை வாழ்கின்றேன்.

இது இன்று நாம் காணும் உலகு. எமது மாவட்டத்தின் நிலை! ஏன் எமது மன்னார் பட்டினத்தின் நிலை!! தலைவர்கள் எனச் சொல்லிக்கொள்வோரின் நிலை!!!

ஆனால் எனது வாழ்வு கலாத்தியர் 5: 22 – 23ல் கூறப்பட்டுள்ளவாறு கனிகள் நிறைந்த வாழ்வாக, தனித்துவமான வாழ்வாக இருக்கின்றதா? அன்றேல் கலாத்தியர் 5: 19 – 21 ல் கூறப்பட்டுள்ளதைப்போன்று ஊனியல்பின் வாழ்வாக இருக்கின்றதா? சிந்திப்போம், செயற்படுவோம்.!

ஜோசப்வாஸ் நகரின் மலசலகூட நிர்மாணப் பணிகள்

விடத்தல்தீவுக் கிராமத்திலிருந்து இடம்பெயர்ந்து மன்னார் ஆயர் அவர்களினால் தோட்டவெளிக் கிராமத்தின் ஜோசப்வாஸ் நகரில் குடியமர்த்தப்பட்டுள்ள மக்கள் கடந்த பத்து வருடங்களாக அடிப்படைத் தேவைகளில் ஒன்றான மலசலகூட வசதிகள் இன்றி சிரமத்தின் மத்தியில் வாழ்ந்துகொண்டிருந்தனர். இந்நிலையில் மன்னார் ஆயர் அவர்களின் அனுமதியுடன் கறிற்றாஸ் கோடேயிட் நெதர்லாந்தின் (Caritas cordaid the Netherlands) உதவியுடன் கறிற்றாஸ் வாழ்வுதயத்தினால் அங்குள்ள மக்களுக்கு 300 நிரந்தர மலசலகூடங்கள் நிர்மாணிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவற்றில் முதல் கட்டமாக 120 மலசல கூடங்களுக்கான வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டு பயனாளிகளின் பாவனைக்கு வழங்கப் - பட்டுள்ளது.

இலக்கியத் தடாகம்

விவிலியமும் தமிழ் இலக்கியமும்

ஒப்பீட்டுத் தொடர் 3.

- அருள் . செல்லத்துரை

திருவிவிலியம்

காக்கும் கடவுள்

5. (அ) 1. தம் நெருக்கடியில் ஆண்டவரைக் கூவி அழைத்தனர் அவர் அவர்களைத் துன்பங்களிலிருந்து விடுவித்தார். திபா 107: 13
2. என் துன்பத்தை நீர் பார்த்திருக்கின்றீர் என் இக்கட்டுகளையும் நீர் அறிந்துள்ளீர். என் எதிரியின் கையில் என்னை நீர் விட்டுவிடவில்லை.– திபா31:7, 8
3. என் அடி சறுக்குகின்றது என்று நான் சொன்னபோது உமது பேரன்பு என்னைத் தாங்கிற்று. – திபா 94: 18

(ஆ) 1. ஆண்டவரை எப்போதும் என் கண்முன் வைத்துள்ளேன் அவர் என் வலப்பக்கம் உள்ளார். எனவே நான் அசைவுறேன். திபா 16:8
2. உன் சுவர்கள் எப்போதும் என் கண்முன் நிற்கின்றன. எசா 49:16
3. இதோ என் உள்ளங்கைகளில் உன்னை நான் பொறித்து வைத்துள்ளேன். எசா 49:16

(இ) நம்மை உயிர் வாழச்செய்தவர் அவரே: அவர் நம் கால்களை இடற விடவில்லை. திபா 66:9

(ஈ) 1. உயரத்தினின்று அவர் என்னை எட்டிப் பிடித்துக்கொண்டார். வெள்ளப்பெருக்கினின்று என்னைக் காப்பாற்றினார் – திபா 18:16

2. பசியுற்றனர், தாகமுற்றனர், மனச்சோர்வுற்றுக் களைத்துப் போயினர். தம் நெருக்கடியில் ஆண்டவரைக் கூவியழைத்தனர். அவர்களுக்குற்ற துன்பங்களிலிருந்து அவர்களை அவர் விடுவித்தார். - திபா 107:5, 6

3. அவர் உன் எல்லைப்புறங்களில் அமைதி நிலவச் செய்கின்றார். உயர்தரக் கோதுமை வழங்கி உன்னை நிறைவடையச் செய்கின்றார் – திபா 147: 14

6. (அ) அவரால் அவன் பாதுகாப்புடன் வாழ்வான். எக்காலமும் அவனை அவர் அரவணைத்துக் காப்பார். அவர் தம் கரங்களுக்கிடையே அவன் வாழ்வான். - இ.ச. 33:12

(ஆ) நான் படுத்துறங்கி விழித்தெழுவேன். ஏனெனில் ஆண்டவரே எனக்கு ஆதரவு – திபா 3:5

7. (அ) ஆண்டவர் தம் மக்களைத் தள்ளிவிடார்: தம் உரிமைச் சொத்தாம் அவர்களைக் கைவிடார். - திபா 94:14

(ஆ) நீர் என்னைக் கைதூக்கி விட்டீர்.- திபா 30:1

(இ) நீர் என்னைப் பாதாளத்திலிருந்து ஏறிவரச் செய்தீர் சாவுக்குழியில் இறங்கிய எனது உயிரைக் காத்தீர் - திபா 30:3.

தமிழ் இலக்கியம்

காக்கும் கடவுள்

5. (அ) 1. மனத் துணையே என்றன் வாழ்முதலே எனக்கு எய்ப்பில் வைப்பே - திருவாசகம் 143
(எய்ப்பில் வைப்பு: துன்ப நெருக்கடியில் உதவும் பொருள்)

2. எனக்கு எய்ப்பில் வைப்பாம் பொன்போல் விளங்கும் புரிசடையானைப் போயடுத்தேன் - திருஅருட்பா 2188

3. ஒசித்தகொடி அனையேற்குக் கிடைத்தபெரும் பற்றே - திருஅருட்பா 4093

4. எய்ப்பிலே கிடைத்த வைப்பது என்கோ - திருஅருட். 4016

5. எனக்கு எய்ப்பில் வைப்பாகும் பதம் - திருஅருட்பா: திருவடிப்புகழ்ச்சி

6. இன்புற நான் எய்ப்பிடத்தே பெற்ற பெரு வைப்பே ஏங்கியபோது என்றன்னைத் தாங்கிய நல் துணையே.- திரு அருட்பா 4092

(ஆ) கண்ணுள் மணிபோல் கருதுகின்ற நல்லோரை எண்ணும் கணமும் விடுத்து ஏகாத இன்னமுதே- திருஅருட்பா 1232

(இ) கட்டமே தவிர்த்து இங்கு என்னை வாழ்வித்த கடவுளே - திருஅருட்பா 3554

(ஈ) இளைக்கின்ற காலத்து என் இளைப்பெல்லாம் ஒழிய வீறிய ஓர் பருவசக்தி கைகொடுத்துத் தூக்கி மேலேறச் செய்து ... உவந்துநடம் புரிகின்ற ஒரு பெரிய பொருளே - திருஅருட்பா 3045

6. புறம்படுத்து தூங்கு தருணத்து என்றன் அருகில் உற்று அன்பினால்..... இருகை மலர் கொண்டு தூக்கி என்றனை எடுத்து அணைத்து ஆங்குமற்றோர் இடத்து இயலுற இருத்தி மகிழ்வாய் - திருஅருட்பா 3683

7. உனையே நம்பினேன் கைவிடேல் எனையே - திருஅரு.3556

இடப்பக்கங்களில் விவிலிய மேற்கோள்கள் வரிசை எண்ணிட்டுக் கொடுக்கப்பட்டுள்ளன. வலப்பக்கங்களில் அவற்றிற்குப் பொருத்தமான தமிழ் இலக்கிய மேற்கோள்கள் அதே வரிசை எண்களில் நேருக்கு நேர் கொடுக்கப்பட்டுள்ளன. ஆயினும் ஒன்றுக்குப் பல பொருத்தங்கள் அமைவதையும் காணலாம். - பதிப்பாசிரியர்

மன்னார் பிரதேசச் செய்திகள்

தொகுத்து வழங்குபவர் – மக்கள் காதர்

மனிதாபிமானப் பணிகளில் 'ஒப்பர்' நிறுவனம்

இந்தியாவிற்குப் புலம்பெயர்ந்து மீண்டும் இலங்கை திரும்பும் தமிழ் மக்களின் பல்வேறு உடனடித்தேவைகளைக் கவனிக்கும் பணிகளில் மன்னார் (Offer) "ஒப்பர்'' நிறுவனம் ஈடுபட்டு வருகின்றது. அதன் ஓர் அங்கமாக கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் சுமார் 350 குடும்பங்களுக்கு மாதாந்த உலர் உணவுப்பொதிகளை இது வழங்கி வருகின்றது.

இப்பொதிகள் சிறுக்கண்டல் முகாமில் வாழும் சுமார் 150 குடும்பங்களுக்கும் களிமோட்டை முகாமில் வாழும் சுமார் 200 குடும்பங்களுக்கும் வழங்கப்படுவதாக மன்னார் மாவட்ட இணைப்பாளர் எம். சிவப்பிரகாசம் ஊடகங்களுக்குத் தெரிவித்தார். இந்த நிவாரணம் வழங்குவதில் தற்போது சிரமங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் இது சம்மந்தமாக மன்னார் கட்டளைத் தளபதியிடம் தெரிவித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

மன்னாரில் மண் அகழ்வுத் தடை

மன்னாரில் மண் அகழ்வுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால் கள்ளச் சந்தையில் டிப்பர் மண் ரூபா 15,000 விலை போகின்றது. கடல் அரிப்பிலிருந்தும் நிலத்தடி நீர் உவராவதிலிருந்தும் மன்னார்த் தீவினைப் பாதுகாப்பதற்காக மண் அகழ்விற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. கடந்த பல ஆண்டுகளாக மண் அகழ்விற்குத் தடை விதிக்கப்பட்டிருந்தும் அத்தடை முறையாக அமுல்படுத்தப்படவில்லை. பல ஆண்டுகளாக மன்னார் மண் வியாபாரிகளால் அள்ளப்பட்டுக் கொள்ளை விலைக்கு விற்கப்பட்டு வந்தது. இதனால் தீவின் கரையோரப் பகுதிகள் அனைத்தும் பெரும் பள்ளங்களாக மாறியதோடு கடல்நீரும் உட்புகுந்து தீவும் விரைவில் கடலுக்குள் மூழ்கும் அபாயத்திலிருந்தது.

எனவே மன்னார் பிரதேச செயலர் திருமதி ஸ்ரான்லி டி மெல் அவர்கள் மண் அகழ்வுக்குக் கடும் தடை விதித்துள்ளார். துரிதமாக அபிவிருத்தியடைந்து வரும் மன்னாரில் மண் தடையால் பல்வேறு வேலைத்திட்டங்களும் தாமதமடைந் - துள்ளன. குறிப்பாக மன்னாரில் வேகமாக அமைக்கப்பட்டுவரும் 'மன்னார் சமாதான பாலம்' அமைப்பதற்குத் தேவையான மண் ஆற்றுப்படுகையிலிருந்தே கொண்டு வரப்படுகின்றது.

உப்பு பற்றாற்குறையினால் தொழில் பாதிப்பு

2004ம் ஆண்டு முதல் மன்னாரில் இயங்கிவரும் 'ஆரோக்கியா இன்டஸ்ரீஸ் அன்ட் மார்கட்டிங் சேர்விஸ் லிமிட்டெட்' மன்னார் மக்களுக்கு சுத்தமான, சரியான நிறையுடன்கூடிய அயடின் மற்றும் அயடின் கலக்காத உப்புப் பொதிகளை விற்பனை செய்து வருகின்றது. வெளியூர்ச் சந்தையிலும் பார்க்கக் குறைந்த விலையில் விற்பனை செய்யப்பட்டு வரும் உப்பை மன்னார் - மாந்தை உப்புக்கூட்டுத்தாபனம் வழங்கி வந்தபோதும் தற்போது அயடின் கலந்த உப்பை மட்டுமே வழங்குவதால் தனது தொழில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக அதன் உரிமையாளர் எஸ். நடராஜா கூறினார்.

தனது நிறுவனத்திற்கு அயடின் கலக்காத உப்பே அதிகம் தேவைப்படுவதாகவும் மன்னாரில் கருவாடு பதனிடும் தொழில் அதிகமாக நடைபெறுவதால் அந்த உப்பே அதிகம் விற்பனையாகும் என்றும் அவர் கூறினார். அத்துடன் அயடின் கலந்த உப்பை கருவாட்டிற்குப் பயன்படுத்தினால் அயடின் சூரிய ஒளியில் மறைந்துவிடும் என்பதால் அது பிரயோசனப்படாது எனவும், எனவே அயடின் கலக்காத உப்பைப் பெறமுடியாதுள்ளதாகவும் அவர் கூறினார்.

அத்துடன் தனது நிறுவனத்தில் சுமார் 25 பேர் வரையில் வேலை செய்வதாகவும் இவர்களில் ஒருவர் வயது குறைந்தவர் என்றும் இவர்கள் தினமும் ரூபா 400 முதல் 500 வரை சம்பளமாகப் பெறுகின்றனர் என்றும் போதிய மூலப்பொருட்கள் கிடைத்தால் மேலும் பலருக்கு வேலை வாய்ப்பு வழங்கவுள்ளதாகவும் அவர் கூறினார். வெளியிலிருந்து வரும் உப்பைவிடத் தனது உப்பு சரியான நிறையுடையதாகவும் மலிவாகவும் தரமானதாகவும் உள்ளது என்றும் அவர் கூறினார்.

மன்னாரில் வடிகாலமைப்புத்திட்டம்

மன்னார் நகர மக்களுக்கு விடிவு காலம் பிறந்துள்ளது. இதுவரை காலமும் மழைக் காலங்களில் நீரில் மூழ்கியிருந்த மன்னார் நகரம் இனிவரும் காலங்களில் அந்த அச்சத்திலிருந்து விடுபடவுள்ளது. சுமார் 63 கோடி ரூபாய் செலவில் நவீன வடிகாலமைப்புத்திட்டமொன்று விரைவில் அமுல்படுத்தப் படவுள்ளது.

- உளவியல் கட்டுரை -

தனிமை ஒரு இனிமையா?

ஏ. அருண் - தலைமன்னார்

அது சனிக்கிழமை இரவு. அந்தப் பையன் அறையில் தனிமையாய் உட்கார்ந்திருந்தான். "வார இறுதி நாட்களை நான் வெறுக்கின்றேன்." என அவன் கத்துகின்றான். ஆனால் பதில் சொல்ல அந்த அறையில் ஒருவரும் இல்லை. ஒரு பத்திரிகையை எடுக்கின்றான். அதில் இளைஞர்கள் கூட்டம் கடற்கரையில் இருக்கும் ஒரு படத்தைக் காண்கின்றான். அந்தப் பத்திரிகையை சுவரில் வீசி எரிகின்றான். கண்களில் கண்ணீர் ததும்புகின்றன. தன் பற்களால் தன் கீழ் உதட்டைக் கடிக்கின்றான். கண்ணீர் தொடர்ந்து வழிந்தோடுகின்றது. இனிமேலும் அடக்க முடியாமல் தன் படுக்கையின்மீது விழுந்து, "நான் ஏன் எப்பொழுதும் தனிமையில் விட்டுவிடப்படுகின்றேன்?" என்று சொல்லி விம்மி அழுகின்றான்.

தனிமையாக இருப்பது பொதுவாகவே வெறுமை, சோகம், விரக்தி போன்ற நிலைகளுடன் இணைத்துப் பேசப்படுகின்றது. "எல்லாத்தையும் விட்டுவிட்டுத் தனியாப் போயிடப் போகிறேன்." "நொந்துபோய் தனியாக அழுதேன்." என்றெல்லாம் நமக்குத் தெரிந்தவர்கள் நம்மிடம் பேசியிருப்பார்கள். தனிமையாக இருப்பது அவ்வளவு துயரம் தரக்கூடியதா?

'தனித்திருத்தல்' 'தனிமை' பற்றி அந்தோனி ஸ்ரோர் (Anthony Storr) என்ற மனநல மருத்துவர் மிக அற்புதமான ஒரு நூல் எழுதியுள்ளார். அதில் அவர் உலகின் சிறந்த படைப்புக்கள் தனிமையில் உருவானவை என்று விளக்குகின்றார். இருந்தாலும் நம்மில் பலர் தனிமையாக இருப்பதை இயங்குவதை ஒரு பாரமாக - ஒரு சுமையாக - ஒரு கொடுமையாக கருதுகின்றார்கள் ஏன்? சிக்மன் ∴ப்ராய்ட் ஒருமுறை மன நலம் குறித்து விளக்குகையில் "மனநலம் என்பது உழைக்கவும் நேசிக்கவும் இருக்கும் ஆற்றல்" என்றார். அவரைப்போன்று பல மன இயல் வல்லுனர்களும் நேசத்தையும் உறவுகளையும் மனித இயக்கத்திலிருந்து இன்றியமையாத ஒன்றாகவே கருதி எழுதியுள்ளனர்.

ஆனால் சரித்திரத்தைப் புரட்டிப் பார்க்கையில் தனிமை என்பது மனிதனைக் கொடுமைப்படுத்துவதைவிட, அவன் உள்ளிருக்கும் ஆற்றலை வெளிக்கொணர வைக்கும் சக்தி வாய்ந்தது என்பது தெரிய வரும். சிறையில் தனியே இருக்கும்போதுதான் நேருவின் மொழி ஆளுகையின் முழுப்பரிணாமமும் வெளிவந்தது. உலக இலக்கிய வரிசையில் இடம்பிடிக்கும் நூல்கள் உருவானது. சிறையில்தான் ஹிட்லர்கூட "மெய்ன் காம்ப்∴" என்ற நூலை எழுதினார். தனிமைச் சிறையில்தான் "டாஸ்டாங்ஸ்கி" என்ற மாபெரும் கலைஞனின் அற்புதமான நாவல்கள் உருவாயின. தனிமையில் 40 வருடங்கள் சிறைவாசம் அனுபவித்ததால்தான் "நெல்சன் மண்டேலா" எனும் மாபெரும் அரசியல் தலைவன் தென் ஆபிரிக்க நாட்டுக்குக் கிடைத்தான். தனிமையில் இருந்து பறவைகள், மிருகங்கள், ஆறுகள், அருவிகள், போன்ற இயற்கையின் ஓசைகளை ரசித்து, அனுபவித்து வாழ்ந்ததால்தான் 1000க்கும் மேற்பட்ட படங்களுக்கு இசை அமைத்த இசை அமைப்பாளன் இசைஞானி இளையராஜா இந்திய தேசத்திற்குக் கிடைத்தான். தனிமையில் இருந்து சிந்தித்து நாம் வாழ்கின்ற வாழ்வுக்கு பொருள் வேண்டுமென்று செயற்பட்டமையால்தான் "விக்ரர் பிராங்" எனும் மாபெரும் மனநல விழிப்புணர்வாளன் தோன்றினான். தனிமை என்பது சிறை அடைப்பில்தான் ஏற்படும் என்பதல்ல. எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் பாடல்களை இயற்ற முடிந்த மகாகவி கண்ணதாசன்கூட சில தத்துவம் மிக்க படைப்புக்களை நகர நெரிசலைவிட்டு வேறோர் இடத்தில் தனியாக இருக்கும்போதே இயற்றியிருக்கின்றார்.

அப்படியென்றால் படைப்புத்திறன் வளர தனியாகவே இருக்க வேண்டுமா? தனிமை என்பது படைப்புத்திறனை ஊக்குவித்து சிந்தனையை அறிவை மெருகேற்ற நிச்சயமாய் உதவுகின்றது. இதனால் படைக்க வேண்டும் என்பதற்காக தனிமையை வேண்டுமென்றே வாழ்வில் உருவாக்கிக்கொள்ள வேண்டியது இல்லை. தனியாக இருப்பவர்கள் எல்லாம் சிறந்த படைப்பாளிகள் ஆவதென்றால் உலகில் கலை, இலக்கிய, விஞ்ஞான படைப்புக்களுக்குப் பஞ்சமே இருக்காது.

படைப்புத்திறன் என்பது தனிமனிதனின் சுய வெளிப்பாடு. தனிமையை மனவியல் ரீதியாக பல வல்லுனர்கள் ஆராய்ந்திருக்கின்றனர். சார்புநிலை (Dependency) என்பதற்கும் நெருக்கம் (Attachment) என்பதற்கும் வித்தியாசம் குறித்து புரிந்துகொள்வது அவசியம்.

குழந்தை பிறந்தவுடன் தாயின் தொட்டிலின் பாதுகாப்பைச் சார்ந்து இருக்கின்றது. அதனால் தனியாய் இயங்க முடியாது. தானே அழ, சிரிக்க, கை கால்களை உதைத்துக்கொண்டு மகிழத் தெரிந்தவுடன் தாயோ, தொட்டிலோ தேவையில்லை. பக்கத்து வீட்டின் வெளித்தரையிலும் குழந்தை மகிழ்ச்சியோடு இருக்கும். ஆனால் அந்தச் சார்புநிலை போனவுடன் சார்ந்திருந்தவர்கள்மீது நெருக்கம் உண்டாகிறது. இது குழந்தையில் பாசம் என்றும் வாலிபத்தில் காதல் என்றும் முதுமையில் நேசம் என்றும் பெயரிடப்படுகிறது.

பல உறவுகள் நெருக்கத்தின் அடிப்படையில் வளர்ந்து பரிணமிப்பதைவிட, சார்புநிலையின் பிடியில் சிக்கிக்கொண்டு தவிப்பதில்தான் தனியே இருப்பது துயரமானதாகிவிடுகிறது. "ஒரு மணி அடித்தால் கண்ணே உன் ஞாபகம், ரெலிபோன் குயிலே வேண்டும் உன் தரிசனம்" என்று பிரமித்துப்போய் இருப்பது சார்புநிலை. இத்தகைய நிலையில் நாம் சார்ந்திருக்கும் நபர் விலகினால், பிரிந்தால், மறைந்தால் நம் தனிமை பிரமாண்டமானதாகின்றது. இதன் முன் நாம் குறுகி நடுங்கி எதுவுமே இனிமுடியாது என்று மயங்கி, குழம்பிப்போய், சோர்ந்து விடுகின்றோம். இந்தச் சோக நிலைக்குக் காரணம் தனிமை அல்ல, சார்பு நிலைதான்.

நம் மனம் நாளும் வளர வேண்டும். உடல் போல வளர்ச்சி என்பது முதிர்ச்சியின் படிக்கட்டு. முதிர்ச்சி இல்லாமல் உறவுகளில் சிக்கினால் வளர்ச்சி தடைப்படும். வாழ்க்கை சிக்கலாகும். தனிமை துயரத்தைத் தரும். (தொடர்ச்சி 19ம் பக்கம்)

பழைய கேள்விகளும் புதிய பதில்களும்

அடிப்படைவாத பெந்தக்கோஸ்தேசபைச் சகோதரர்களின் கேள்விகளுக்கு விவிலிய அடிப்படையில் தெளிவான, அழுத்தமான பதில்களைத் தாங்கி இத்தொடர் வருகிறது.

தருவது தஞ்சை டோமி



தொடர் – 19

கேள்வி : புனிதர்களின் அருளிக்கத்தை வணங்குவது மூடநம்பிக்கை இல்லையா? இறந்தவர்களின் எலும்பிலோ, உடையிலோ என்ன வல்லமை இருக்க முடியும்?

பதில் : திரிதெந்து சங்கத்தின் எண். 25 இப்படிக் கூறுகின்றது: "கிறிஸ்துவின் மறையுடலாகவும், பரிசுத்த ஆவியின் ஆலயமாகவும் வேதசாட்சிகளாக மரித்தவர்களின் புனித உடல்கள் கிறிஸ்துவுடன் வாழ்கின்றன. இவைகளைக் கிறிஸ்து தன் உயிர்ப்பின் மூலம் மகிமையடையச் செய்ததால், மகிமைப்படுத்தப்பட்ட புனிதர்களின் உடல் உறுப்புகளுக்கு, துணிகளுக்கு வணக்கம் செலுத்துவது முறையே என்றும், அதனால் வணக்கம் செலுத்துபவர்கள்மீது இறையருள் பொழியப்படுவதாகவும், இதன் மூலம் புனிதர்களின் அருளிரக்கங்களுக்கு வணக்கம் செலுத்துவது முறையே என்றும் மக்கள் புரிந்துகொள்வார்கள்"

திருச்சபை புனிதர்களின் அருளிரக்கத்தின் வல்லமைமீது நம்பிக்கைகொண்டு இப்போதனையை வழங்கவில்லை. மாறாக விவிலியத்தின் போதனைப்படியே புனிதர்களின் அருளிரக்கம் பற்றி போதிக்கின்றது.

பழைய ஏற்பாடு : பழைய ஏற்பாட்டில் யூதர்கள் சூசையின் எலும்புகளை வணங்கினார்கள். அதேபோல் எலிசேயுவின் எலும்புகளையும் வணங்கினார்கள். இவர் இறந்த மனிதனை உயிர்ப்பித்தவர்.

புதிய ஏற்பாடு : பெரும்பாட்டினால் 12 ஆண்டுகள் பெரும்பாடுபட்ட பெண் இயேசுவின் ஆடையின் விளிம்பைத் தொட்டுக் குணம் பெற்றாள். புனித பேதுருவின் நிழல் பட்டபோது நோயாளிகள் குணமானார்கள். இந்தப் புனிதர்களின் அருளிரக்கத்தை வணங்கும் பழக்கம் கி. பி. 2 ஆம் நூற்றாண்டிலிருந்தே காணப்படுகிறது.

புனித பொலிக்கார்ப் எரித்துக் கொல்லப்பட்டபோது அவருடைய சீடர்கள் அவரது எலும்புகளை பொன்னையும், விலையுயர்ந்த கற்களையும்விட உயர்வானதாகக் கருதி எடுத்து வந்து அதற்குரிய இடத்தில் வைத்து, அங்கு கூடி அப்புனிதரின் வேதசாட்சியான திருநாளைக் கொண்டாடினார்கள் (Mart. Polycarp).

திருச்சபையின் தந்தையர்கள் யாரெல்லாம் சிலை வழிபாட்டை வன்மையாகத் தாக்கினார்களோ அவர்கள்கூட அருளிரக்க வணக்கத்தை ஆதரித்துள்ளனர்.

உதாரணமாக, புனித அகஸ்டின், புனித அம்புரோஸ், புனித எரோணிமுஸ், புனித கிரகோரி, புனித ஜான் கிறிசோஸ்தம் (340-20).

நாம் படைப்புக்களை ஆராதிப்பதோ, வணங்குவதோ வழிபடுவதோ கிடையாது. வழிபாடும் ஆராதனையும் படைத்தவருக்கே உரியது. ஆனால் நாம் புனிதரின் அருளிரக்கத்தை வணங்குவது அவர்களை வேதசாட்சியாக்கின இறைவனை சிறப்பாக ஆராதிக்கவே என புனித எரோணிமுஸ் கூறுகின்றார். **(கேள்விகள் தொடரும்)**

கட்டுரைத்தொடர் – 15

பொதுநிலையினர் வாழ்வில் இறைவார்த்தை

திரு. மாட்டின் டயஸ், (பேசாலை) இளைப்பாறிய கோட்டக் கல்விப் பணிப்பாளர்

நான்காவது மகிமைநிறை மறையுண்மைகள்

தேவதாய் பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றார்

நான்கு வகைச் செபமாலைத் தியானங்கள் உள்ளன. இவற்றில் நாம் 20 மறையுண்மைகளைத் தியானிக்கின்றோம். இவற்றில் 18 மறையுண்மைகள் கிறிஸ்துவின் மீட்புப்பயணத்தின் உண்மைகளாக நற்செய்திக்குள்ளும் திருத்தூதர் பணியினுள்ளும் அடங்கியிருக்க, மகிமைநிறை மறையுண்மைகளின் நான்காம் ஐந்தாம் மறையுண்மைகள் மட்டும் நற்செய்திக்கு வெளியே இருந்து மரியாளைப்பற்றி நமக்குத் தரப்படுகின்றன.

கிறிஸ்துவின் சிலுவை மரணம் - அடக்கத்தில் தேவதாயை நற்செய்தியில் சந்திக்கும் நாம் திருத்தூதர் பணியில் தூய ஆவியின் வருகையின்போது சந்திக்கின்றோம்.

திருச்சபையின் பாரம்பரியம் தேவதாய் மரித்துப் பின் உயிர்த்து ஆன்மாவோடும் உடலோடும் பரலோகத்துக்கு எடுத்துக் - கொள்ளப்பட்டாள் எனக் கற்பிக்கின்றது. தேவதாய் பரலோகத்தில் இறைவனின் அன்னையாக வாழ்ந்துகொண்டிருக்கின்றாள் என்பதற்கான தற்காலச் சான்றுகள் நிறையவே இருக்கின்றன. பாத்திமா நகரும் லூர்து பதியும் வேளாங்கண்ணி போன்ற பல ஆதாரங்கள் தற்காலத் திருச்சபையின் பதிவேடுகளில் உள்ளன. யதார்த்தமும் அதுதான். தாயைச் சந்தித்தவர்கள் அவரோடு உரையாடியவர்கள் அவரால் வரங்களைப் பெற்றவர்கள் நேற்றும் இன்றும் சாட்சிகளாக இருந்து வருகின்றார்கள். நாளைக்கும் இருப்பார்கள்.

தேவதாய் மோட்சத்தில் இறைவனோடு வாழ்ந்துகொண்டு இருக்கின்றார். எப்போது எப்படி மோட்சத்துக்குச் சென்றார்? தேவதாய் ஆத்ம சரீரத்தோடு மோட்சத்துக்குச் சென்றார் என்பதை திருத்தந்தை விசுவாச சத்தியமாகப் பிரகடனப்படுத்தியுள்ளார். இது ஒரு மறையுண்மை. இதை நாம் ஆவணித்திங்கள் 15ம் நாள் பெருவிழாவாகக் (கடன் திருநாள்) கொண்டாடுகின்றோம்.

இறைவனின் மீட்புத்திட்டத்தில் மரியாளுக்கு முக்கிய பங்குண்டு என்பது நமக்குத் தெரியும். இம்மீட்புத் திட்டத்தின் பங்காளராக உருவாக்கப்பட்ட பாத்திரங்களுள் மிகவும் முக்கியமானவர் மரியாள் - தேவதாய்.

இறைவன் ஆதியும் அந்தமுமில்லா அருள்ஜோதி. எல்லையில்லா நல்லவர் - வல்லவர் - ஞானம் நிறைந்தவர். உருவமற்ற இறைவன் ஒரு உருவம் தாங்கித்தான் மீட்புத்திட்டத்தை நிறைவேற்ற வேண்டியிருந்தது. உருவமற்ற செயல்வடிவமற்ற ஈடேற்றப்பணி அர்த்தமற்ற ஒன்றாக இருந்திருக்கும். எந்தப் படைப்பினத்துக்காக மீட்புத்திட்டம் ஈடேற்றப்பட்டதோ அந்தப் படைப்பினத்தின் சாயலை இறைவன் தெரிந்துகொண்டார். இன்னொருவிதமாகச் சொல்வதானால் மனித இனத்தை மீட்பதற்கு மனிதனாக இறைவன் அவதரித்தார்.

மலையுச்சியிலிருந்து இறங்கி வந்து அல்லது மேகங்களிலிருந்து குதித்து, இல்லாவிட்டால் கடலின் ஆழ்நிலைகளிலிருந்து எழுந்து வந்து, "நான்தான் உலக மீட்பர்" என்றால் அது மனித யதார்த்தங்களுக்கு அப்பாற்பட்டிருக்கும். ஆகவே இறைவன் தான் தோன்றுவதற்கு ஒரு உதரத்தைத் தெரிந்துகொண்டார். அந்த உதரம் மரியாளுடையது. கன்னியான மரியாளுடையது. அவர் யூத குலத்தவர், இஸ்ராயேல் வழிமரபினர். இந்த மரியாளை இறைவன் அருள் வரங்களினால் நிரப்பினார். தூயதான உடலும் உள்ளமும் தந்தார். பாவத்தின் அழுக்கோ தாக்கமோ அவரைத் தொடராதவாறு அரண் செய்தார். தலைமுறைகள் தோறும் இவற்றைப் பிரகடனம் செய்தார். தீர்க்கதரிசிகளின் வாயிலாக இவற்றை அறிக்கையிட்டார். காலம் வந்தபோது மரியாளிடம் தேவன் கருக்கொண்டார். "வார்த்தை மனுவானது நம்மிடையே குடிகொண்டது" மரியாள் தேவனின் தாயானார், மீட்பு கல்வாரியில் சிலுவையில் நிறைவேற்றப்பட்டது.

மரியாள் மீட்பரின் தாயானார். தேவனிருக்கும் இடமே தேவ தாய் இருக்கவேண்டிய இடம். மீட்பர் வாழும் இடமே மீட்பரின் தாயும் வாழவேண்டிய இடம். தேவதாயை இறைவன் பரலோகத்துக்கு அழைத்துக்கொண்டார்.

இம்மறையுண்மையில் இருந்து மலரும் ஏனைய சிந்தனைகள்

1. எமக்கான நிரந்தர வதிவிடம் ஒன்றுண்டு

மானிடப் பிறப்பு ஒவ்வொன்றும் நிலையாக இவ்வுலகில் வாழ வந்த ஒன்று அல்ல என்பது யதார்த்தம். இவ்வுலகில் நாம் ஒவ்வொருவரும் பயணிகளே. இறைவனைச் சென்றடைவதுதான் நமது இலக்கு. கிறிஸ்துவே இதற்கு ஆதாரம்.

கிறிஸ்து இவ்வுலகில் வாழ்ந்த நாட்களில் பலமுறை தன் சீடர்களிடம் தான் தன் தந்தையிடம் செல்வதாகவும் சீடர்களுக்கு இல்லிடங்களை ஆயத்தம் செய்வதாகவும் கூறியுள்ளார். தந்தையைச் சென்றடைவதற்கு ஒரே வழி தான்தான் என்றும் கூறினார்.

இயேசு பரலோகத்துக்கு எழுந்தருளிச் சென்றார். சீடர்களான மனிதர்கள் இதற்குச் சான்று. கிறிஸ்து தம் தந்தையிடம் சென்றடைந்துவிட்டார் என்பதற்கான சான்று அவர் பத்தாம் நாளில் பரிசுத்த ஆவியை சீடர்கள்மேல் அனுப்பியமை ஆகும்.

இயேசு கடவுள். அவர் தந்தையிடம் போவது கடவுள் தன்மையில் மிகச் சாதாரணம். மனிதர்கள் நானும் நீங்களும் போக முடியுமா? முடியுமே. எப்படி? போயிருக்கின்றாளே. ஆதாரம் உண்டா? உண்டு. தேவதாய் தான் காட்சி தந்தபோதெல்லாம் இறைவனைப்பற்றி இறையரசைப்பற்றிக் கூறி மனுக்குலத்தை மனம்மாறி இறைவன் பக்கம் வரும்படி அழைப்புவிட்டிருக்கின்றார். அவரிடமிருந்து மானிட இனம் பெற்றுக்கொள்ளும் அளவில்லா நன்மைத்தனங்கள் அவர் கடவுளோடு இருக்கின்றார் என்பதற்கு ஆதாரம் இல்லையா? எம்மையும் தம்மோடு அங்கு வரும்படிதானே அழைக்கின்றார். அவர் அழைப்பையும் அவர் மகன் யேசுவின் அழைப்பையும் ஏற்று இறையோடு வாழுகின்ற புனிதர்களும் பக்தர்களும் இருக்கின்றார்களே.

வேண்டுதல்

மனிதப்பிறவி என்ற இந்தத்துயர சாகரத்தை தேவதாயின் துணையால் கடந்து ஈடேற்றம் அடைய வேண்டுதல்.

11. தேவதாய் பரலோகம் சென்ற முதல் மானிடப் பெண்.

இயேசு தன் சிலுவைப்பலியின் மூலமே மோட்சத்தின் கதவுகளைத் திறந்தார் என்பது திருச்சபையின் நம்பிக்கை. பாவத்தில் இருந்து மனிதர்களைக் கழுவித் தூய்மையாக்க மீட்பரை அனுப்புவேன், அவரை மனிதனாகப் பிறக்கச் செய்வேன் என்ற வாக்குறுதியோடுதான் மீட்புத்திட்டம் ஆரம்பிக்கின்றது. அது சிலுவைப் பலியோடு நிறைவுபெற்ற ஒன்றல்ல. இன்றும் அது நிறைவேற்றப்பட்டுக்கொண்டே இருக்கின்றது. தனிமனிதன் தன் சுய அடிமைத்தனங்களிலிருந்து தன்னை மீட்டுக்கொள்வது, சமுதாயம் தன்னைத்தானே கட்டிக்கொண்ட அடிமைச் - சங்கிலிகளிலிருந்து அதாவது சாதி, மத, இன பேதங்களிலிருந்து மீட்புப்பெறுவது, இவ்வாறு நாடுகள் உலகம் தங்கள் பெலவீனங்கள் அகந்தை, ஆங்காரம் போன்ற அடிமைத்தனங்களிலிருந்து விடுதலை பெறுவது என்னும் பணிகள் மீட்புத்திட்டத்தின் அமுலாக்கங்களே. இதற்குக் கிறிஸ்துவே ஒரே ஒளி, ஒரே வழி.

இம்மீட்பு வரலாற்றிலே கிறிஸ்துவுக்கு முன்னும் பலர் இறையச்சம் உள்ள மக்களாக இறைவனுக்குப் பிரமாணிக்கமாக வாழ்ந்திருக்கின்றார்கள். ஆபிரகாம், சாராள், யாக்கோபு, மோயீசன், திருமுழுக்கு யோவான், சக்கரியாஸ் எலிசபேத், சிமியோன், அன்னாள், சூசையப்பர் போன்றோர் என பலரை வேதாகமம் நமக்கு இனம் காட்டுகின்றது. நீதிமான்களாக வாழ்ந்த இவர்கள் இறைவனைச் சென்றடையவில்லையா? நிட்சயமாகச் சென்றடைந்திருப்பார்கள். எப்போது? கிறிஸ்துவின் சிலுவைக் காணிக்கைக்குப்பின் என்பது நமது நம்பிக்கை. ஆக முதன்முதலாக பரலோகத்துக்குச் சென்றார் என்று ஆதாரத்தோடு நிரூபணம் ஆகின்ற பெண் எமது மரியன்னையே.

வேண்டுதல்

எமது மீட்புப் பயணத்தில் எம்மைக் கரம்பிடித்து அழைத்துச் செல்ல எம் தாயாம் மரியன்னையை வேண்டல்.

111. தேவதாய் மனுக்குலத்தின் நம்பிக்கை நட்சத்திரம்

தேவதாயை விடியற்காலத்தின் நட்சத்திரம் என அழைக்கின்றோம். ஆதவ உதயத்தின் முன் உதயதாரகை தோன்றுவதை நாம் தினமும் கீழ்த்திசையில் காண்கின்றோம். தேவதாய் உலகில் பிறந்துவிட்டார். கிறிஸ்து என்ற அருணன் உதயமாகப்போகின்றான் என்பதற்கான முற்குறியே. நாம் இறையரசைச் சென்றடைய முடியும் என்பதற்கான முற்குறியும் தேவதாயே.

தாய்: மகனே நீ பொறியியலாளராக வந்துவிடுவாயா?
மகன் : வந்து விடுவேன்
அம்மா : எப்படி
மகன் : நன்றாகப் படித்த எங்கள் ரீச்சருடைய மகன் எஞ்சினியராக வந்துவிட்டான்.
அம்மா : உன்னாலும் முடியுமா?
மகன் : அவனால் முடியுமானால் என்னால் ஏன் முடியாது? நன்றாகப் படிப்பேன் எஞ்சினியராக வருவேன்.

நமக்கு முன்பே இறையரசைச் சென்றடைந்த நம் தாய் மரியாள் நம் முன்னோடி. நம் நம்பிக்கை நட்சத்திரம். நாம் அனைவரும் இறைவனை வந்தடைய வேண்டும் என்று சதா ஆசித்து நிற்கும் அன்புத்தாய், பாசமிகு அன்னை. அவள் துணையில் நாம் இறையரசை அடைய முடியும்.

வேண்டுதல்

போரும் சூதும் வாதும் கண்ணீரும் கம்பலையும் நிறைந்த இந்த உலக வாழ்வில் பாவமில்லா தூய வாழ்வு வாழ வழி நடத்த வேண்டல்.

1V. நமக்காகப் பரிந்து பேசுபவர்

ஒரு பசு இரண்டு கன்றுகளை ஈன்றது. துள்ளித்திரிகின்ற பருவத்திலே அவை திக்குக்கு ஒன்றாக ஓடின. இத்தாய்ப் பசு எந்தக் கன்றைத் தேடிப்போகும்.

தேவதாய் மாட்டுத்தொழுவத்திலே மனுக்குல மீட்பராம் இயேசுவைப் பெற்றார். சிலுவையடியிலே பாவச்சேற்றில் வாழும் மனித இனத்தைப் பெற்றார். தூய்மையையும், அன்பையும், தியாகத்தையும், மன்னிப்பையும், கிருபையையும் அணிந்த கிறிஸ்து என்னும் ஒரு மகன்! வன்முறை, அக்கிரமம், சுயநலம், கொடுமை என்பவற்றைக் கொண்ட இன்னுமொரு மனித மகன்! இந்த மனிதகுல மகனுக்காய் தினம் தினம் கண்ணீரோடு தன் இறைமகனின் கருணையை வேண்டி இவர் கரங்களையும் கால்களையும் பற்றிக்கொள்கிறார் மரியன்னை. மனிதகுலப் பாவங்களை, அக்கிரமங்களை மன்னிக்கும்படி தன் திருக்குமாரனை வேண்டும் தேவதாய் மக்களை மனம் திரும்பும்படி தன் காட்சிகளின்போதும் எண்ணங்களிலும் பேசிக்கொண்டிருக்கின்றார்.

நமக்காக நம் தாய் தேவனிடம் பரிந்து பேசுகின்றார். நமது துன்பங்களை எல்லாம் இத்தாய் களைந்துவிடுவாள் என்ற நம்பிக்கை இந்நாட்களில் வலுப்பெற்று வருகின்றது. மனித குலம் இந்நாட்களில் அன்னையின் பாதங்களைப் பற்றிக்கொள்ள மிக மிக ஆவலாக உள்ளது என்பதற்கான ஆதாரம் நிறையவே உண்டு.

வேளாங்கண்ணியிலும் லூர்து பதியிலும் பாத்திமா நகரிலும் திரண்டு வரும் இலட்சோப லட்சம் மக்கள் இதற்கு ஆதாரம். நம் நாட்டில் மடு அன்னையின் அருள் வேண்டி நலம் பெறார் யார்? சாதி மத இன மொழி பேதமின்றி அருளும் தாய் அவர் அல்லவா?

வேண்டுதல்

உலகம் முழுவதிலும் பெண்ணினத்தின் சிறப்பாகத் தாய்மாரின் நலன்கள் பேணப்பட வரம் வேண்டல்.

இயேசுசபை அகதிப்பணியினரின் (ஜே. ஆர். எஸ்.) செய்திகள்

ஜே. ஆர். எஸ். ஆசிரியர்களுக்கான வதிவிடக்கருத்தமர்வு

மன்னார் ஜே. ஆர். எஸ். தனது பணிகளில் முக்கிய பணியாக கல்விப்பணியினை முன்னெடுத்து வருகின்றது. அதன் அடிப்படையில் 30 மாலை நேர மையங்களில் 67 ஆசிரியர்களும், 7 முன்பள்ளிகளில் 10 ஆசிரியர்களும், அவசரகாலப்பணியில் (களிமோட்டை,சிறுகண்டல் முகாம்களில் உள்ள 02 மாலை நேர மையங்கள் மற்றும் 01 முன்பள்ளி இவற்றில் உள்ள) 08 ஆசிரியர்களும் கற்பித்து வருகின்றனர்.

இம்மையங்களில் கற்பிக்கும் ஆசிரியர்களின் திறன்களை வளர்ப்பதற்காகவும், வலுப்படுத்துவதற்காகவும் மன்னார் மாவட்ட இணைப்பாளர் அருட்பணி. எஸ். இராஜநாயகம் அடிகளாரின் வழிநடத்தலில் கல்வித்திட்ட இணைப்பாளர் செல்வன். மோயீஸ் அவர்களின் தலமையில் பணியாளர்களின் ஒத்துழைப்போடு கடந்த பெப்ரவரி மாதம் 17,18,19ம் திகதிகளில் ஆசிரியர்களுக்கான வதிவிடக்கருத்தமர்வு நடைபெற்றது. அவர்களது கற்பித்தலுக்கேற்ப பயிற்சிகளைக் கொடுப்பதற்காக முன்பள்ளி, மாலைநேர மைய ஆசிரியர்கள் ஆகியோர் வெவ்வேறாக வகைப்படுத்தப்பட்டு பிரிக்கப்பட்டனர்.

இவர்கள் 17.02.2009 அன்று முதல் நாள் பூ, இனிப்பு ஆகியவை கொடுத்து வரவேற்கப்பட்டனர். மு.ப 10.30 மணியளவில் நிகழ்வுகள் ஆரம்பமானது. இதனைத் தொடர்ந்து அவர்களுக்கான பொறுப்புக்கள் பிரிக்கப்பட்டதுடன் 'கற்பித்தலின் சவால்கள்' என்ற தலைப்பில் கல்வித்திட்ட இணைப்பாளரினால் முதல் அமர்வு நடாத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து மதிய உணவு இடைவேளையின் பின்னர் மாலைநேர மைய ஆசிரியர்களுக்கு விஞ்ஞான பாடத்தில் புதியமுறைக் கற்பித்தல் எனும் தலைப்பில் உதவிக்கல்விப்பணிப்பாளர் திருமதி. ரி. தயானந்தன் அவர்கள் 2வது அமர்வினை நடாத்தினார். அதேநேரம் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு புதியமுறைக் கற்பித்தல் என்ற தலைப்பில் உதவிக்கல்விப்பணிப்பாளர் திருவாளர் எல். ஆர். குரூஸ் அவர்கள் பாடத்தை நடாத்தினார்.

பின்னர் 18.02.2009 அன்று 2ம் நாள் காலை அருட்சகோதரி சகாயராணி (CIC) அவர்களின் தியானத்துடன் அன்றைய நாள் நிகழ்வுகள் ஆரம்பமானது. தொடர்ந்து மாலை நேர மைய ஆசிரியர்களுக்கு முதல் அமர்வாகக் கணித பாட புதிய கற்பித்தல் முறை என்ற தலைப்பில் மன்/ சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி ஆசிரியர் திருவாளர். ரி. யோன்சன் அவர்களால் வகுப்பு நடாத்தப்பட்டது. அதேநேரம் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு அருட்சகோதரி சகாயராணி 'வாழ்க்கைத் திறன்' எனும் தலைப்பில் பயிற்சிகளை வழங்கினார். தொடர்ந்து மதிய உணவு இடைவேளையின் பின்னர் 3வது அமர்வாகத் திரைப்படம் காண்பிக்கப்பட்டது. அதைத்தொடர்ந்து 4வது அமர்வாக ஆங்கிலப் பாட கற்பித்தல் முறை எனும் தலைப்பில் மன்/ சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை ஆங்கில ஆசிரியரும் ஜே. ஆர். எஸ். ஆங்கிலக் கற்கை மையப் போதனாசிரியருமான திருவாளர். ரி. ஜெபக்கிரீடம் அவர்களால் அனைத்து ஆசிரியர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது.

பின்னர் 19.02.2009 அன்று மூன்றாம் நாள் அன்று இலங்கைக்கான ஜே. ஆர். எஸ். தேசிய இயக்குனர் அருட்பணி கமல் அன்றாடி (சே.ச) அடிகளாரும், மன்னார் மாவட்ட ஜே. ஆர். எஸ். இணைப்பாளர் அருட்பணி. எஸ். இராஜநாயகம் அடிகளாரும் இணைந்து திருப்பலி ஒப்புக்கொடுத்தலுடன் நிகழ்வு ஆரம்பமானது. தொடர்ந்து "இடர் முகாமைத்துவம்" எனும் தலைப்பில் அமர்வு நடாத்தப்பட்டது. இதனைத் தேசிய மனித உரிமைகள் நிகழ்ச்சித்திட்டப் பொறுப்பாளர் (NHRP) திருவாளர் பீற்றர் சிங்கிளாயர் நடாத்தினார். தொடர்ந்து ஜே. ஆர். எஸ். உளநல உதவியாளர்களால் தனிநபர் உளவளத்துணை அளிக்கப்பட்டதுடன் மீளாய்வும் நடாத்தப்பட்டது. தொடர்ந்து வதிவிடக் கருத்தமர்வானது நிறைவுக்குவர ஆசிரியர்கள் விடைபெற்றனர்.

ஆங்கிலக் கற்கைநெறியின் நிறைவுவிழா

மன்னார் இயேசுசபை அகதிப்பணியின் ஆங்கிலக்கற்கை நெறி மையத்தின் நான்காவது பயிற்சிநெறியானது கடந்த 03.11.2008 அன்று மன்னார் அலுவலகத்தில் மன்னார் மாவட்ட இணைப்பாளர் அருட்தந்தை எஸ். இராஜநாயகம் அவர்களின் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. பணியாளர்கள், பொறுப்பாளர்கள் அனைவரும் இணைந்து இதை ஆரம்பித்து வைத்தனர். அருட்தந்தை அவர்களால் எமது இயேசுசபையைப் பற்றியும், இயேசுசபையின் பணிகளைப்பற்றியும், ஆங்கிலக் கற்கை மையத்தின் நோக்கம் பற்றியும் விரிவாக எடுத்துக்கூறப்பட்டது.

மூன்று மாதகாலப் பயிற்சிநெறியாக இப்பயிற்சி ஆரம்பிக்கப்பட்டு, அதன் ஆசிரியராக திருவாளர் ரி. ஜெபக்கிரீடம் அவர்கள் சிறப்பான முறையில் ஆங்கிலக்கல்வியைக் கற்பித்து வந்தார். கடந்த 04.02.2009 அன்று இப்பயிற்சி நெறியின் நிறைவுவிழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

இவ்விழாவானது 04.02.2009 அன்று காலை 9.30 மணியளவில ஆரம்பிக்கப்பட்டு பகல் 12.30 மணியளவில் நிறைவுபெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கோட்டக் கல்விப்பணிப்பாளர் திருவாளர் யூட் பிகிராடோ அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி ஏ. விக்ரர் சோசை அடிகளாரும், இயேசுசபை அகதிப்பணியின் சர்வதேச இயக்குனர் அருட்பணி. பீற்றர் பலாய்ஸ் அடிகளாரும், தெற்காசிய இயக்குனர் அருட்பணி பி. எஸ். அமல்ராஜ் அடிகளாரும், இலங்கைக்கான தேசிய இயக்குனர் அருட்பணி கமல் அன்றாடி அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

இயேசுசபை அகதிப்பணியின் சர்வதேச இயக்குனர் அருட்பணி பீற்றர் பலாய்ஸ் அடிகளார் தனது உரையில் ஆங்கிலக்கல்வியின் முக்கியத்துவம் பற்றியும், போரின் வார்த்தைக்கு செயல்வடிவம் அற்றுப்போய்விட்டது எனவும், ஆகவே போரின் வார்த்தைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, சமாதானத்தின் வார்த்தைகளைக் கடைப்பிடிப்போம் எனவும் எடுத்துக்கூறினார்.

பின்னர் மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி. ஏ. விக்ரர் சோசை அடிகளார் தனது உரையில் ஜே. ஆர். எஸ். மன்னார் மாவட்டத்தில் செய்துவரும் பணிகள் பற்றியும், அதிலும் சிறப்பாகக் கல்விப்பணியில் தமது சேவையினைச் சிறந்த முறையில் ஆற்றுவதற்காக இயேசு சபை அகதிப்பணிக்கும், அதன் பணியாளர்களுக்கும் நன்றியும் பாராட்டும் தெரிவித்தார். பிரதம விருந்தினர் கோட்டக் கல்விப்பணிப்பாளர் திருவாளர் யூட் பிகிராடோ அவர்கள் தனது உரையில் ஆங்கிலக் கல்வியின் முக்கியத்துவம் பற்றியும், அதனால் மாணவர்கள் பெறும் சந்தர்ப்பங்கள் பற்றியும் எடுத்துக்கூறினார்.

இப்பயிற்சியின் இறுதியில் 24 மாணவர்கள் நிறைவான முறையில் இப்பயிற்சியை நிறைவுசெய்து சான்றிதழ்களைப் பெற்றுச் சென்றனர். அடுத்து ஐந்தாவது பயிற்சிநெறியானது 22 மாணவர்களுடன் 10.02.2009 அன்று அருட்தந்தை எஸ். இராஜநாயகம் அவர்களின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது. இதனடிப்படையில் தொடர்ந்து இவ் ஐந்தாவது பயிற்சிநெறியானது ஆசிரியர் திருவாளர் ரி. ஜெபகிரீடம் அவர்களினால் சிறந்த முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. மாணவர்கள் ஆர்வமுடன் தொடர்ந்து இப்பயிற்சியை மேற்கொண்டு வருகின்றனர்.

நிகழ்வுகளின் நிழல்கள்



உங்களுக்குத் தெரியுமா?

மறையறிவுப் பகுதி இல.70

பலஸ்தீனாவும் உரோம் நகரும் வெகுதொலைவில இருந்த நாடும் நகரமுமாகும். கி.பி 57 - 58ம் ஆண்டுகளில் உரோமையருக்கான திருமுகம் எழுதப்பட்டதாகக் கருதப்படுகிறது. அந்நாட்களில் கணிசமான ஒரு தொகுதி மக்கள் கிறிஸ்தவ விசுவாசத்தில் வேரூன்றி இருந்தனர். ஆயினும் அவர்களின் வாழ்வில் பல பிரச்சினைகள் கிறிஸ்தவ சித்தாந்தங்களுக்கு எதிரான செயற்பாடுகள் இருந்ததை அறிந்து, அவர்கள் தூய ஆவியினால் அர்ச்சிக்கப்பட்டு நன்னெறிக்குத் திரும்ப வேண்டும் என்பதற்காக புனித பவுல் திருமுகங்களுடாக அவர்களோடு பேசினார். அவர்களை அன்பு செய்தார்.

கிறிஸ்தவ விசுவாசம் எவ்விதம் உரோம் நகருக்கு வந்தது? "இதோ பேசுகின்ற இவர்கள் அனைவரும் கலிலேயர் அல்லவா? அவ்வாறிருக்க நம்முடைய தாய் மொழிகளில் இவர்கள் பேசுவதை நாம் ஒவ்வொருவரும் கேட்பதெப்படி?" (தி.ப.2:7) என வியந்த மக்கள் கூட்டத்தில் பெந்தக்கோஸ்தே விழாவன்று உரோமையரும் இருந்ததாக விவிலியம் சான்று கூறுகின்றது. திருச்சபை என்று ஸ்தாபிதமாகி நற்செய்திப் பணியை ஆரம்பித்ததோ அன்றே உரோம் மக்களிடம் கிறிஸ்து விதைக்கப்பட்டார்.

உரோம் ஒரு மாபெரும் வர்த்தக நகரம். உலகெங்கும் இருந்து மக்கள் வெள்ளம் உள்ளே வருவதும் போவதும் சாதாரண - வியப்படையக்கூடாத செயல். வேரூன்றிவிட்ட விசுவாசத்துக்கு உரோமில் நீர் ஊற்ற பல மறைபோதகர்கள் உரோமைத் தரிசித்ததும் சாதாரண செயலே. ஆக உரோம் நகரின் எண் திசைகளிலும் கிறிஸ்தவக் குழுக்கள் வாழ்ந்து வந்தன.

அவர்கள் தூய ஆவியினால் அர்ச்சிக்கப்பட வேண்டிய, நெறிப்படுத்தப்பட வேண்டியவர்களாக இருந்ததை இவர்களைப் பற்றி ஆர்வம்கொண்டிருந்த பவுலடியார் அறிந்திருந்ததும் ஆச்சரியப்படக்கூடிய ஒன்றல்ல.

இனி நம்முடைய வினாக்களுக்கு வருவோம். வினாக்கள் 13ம் அதிகாரத்திலிருந்து 15ம் அதிகாரம் வரையான பகுதிகளிலிருந்து தொகுக்கப்பட்டுள்ளன.

1. அதிகாரம் உள்ளவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கும்படி ஏன் பவுலடியார் கூறுகின்றார்?
2. திருச்சட்டங்களின் நிறைவு எது?
3. இரவு முடியப்போகிறது, பகல் நெருங்கி உள்ளது. ஆகவே எவற்றைக் களைந்துவிட்டு எவற்றை அணிந்துகொள்ளும்படி ஆலோசனை கூறுகின்றார் புனித பவுல்?
4. எவரும் தமக்கென்று வாழ்வதும் இல்லை, தமக்காக இறப்பதும் இல்லை என்றால் யாருக்காக வாழ்கின்றோம்? யாருக்காக இறக்கின்றோம்?
5. "நான் என்மேல் ஆணையிட்டுள்ளேன். முழங்கால் அனைத்தும் எனக்குமுன் மண்டியிடும். நாவு அனைத்தும் என்னைப் போற்றும்" இவ்வார்த்தைகள் எதிலிருந்து தரப்பட்டுள்ளன?
6. இறையாட்சி நாம் உண்பதையும் குடிப்பதையும் அடிப்படையாகக் கொண்டதல்ல என்றால் அது எதை அடிப்படையாகக் கொண்டது?
7. மனவலிமை கொண்டவர்களாகிய நாம் எதற்குக் கடமைப்பட்டுள்ளோம்?
8. "பிற இனத்தாரிடையே உம்மைப் போற்றுவேன் உமது பெயருக்குப் புகழ்மாலை சாற்றுவேன் என மறைநூலில் எதைக் குறித்து எழுதப்பட்டுள்ளது?
9. புனித பவுல் தனது குருத்துவப்பணி எதுவெனக் குறிப்பிடுகின்றார்?
10. பவுலடியார் எந்த நாட்டுக்குப் போகும் வழியில் உரோமையில் இருந்து வந்து அத்திருச்சபையோடு மகிழ்ந்திருக்கப்போவதாகக் கூறுகின்றார்?

மாணவர் மறையறிவுப் பகுதி இல. 68 இற்கான கேள்விகளுக்கு 18 பேர் விடையளித்திருந்தனர்.

இவர்களுள் பரிசுக்குரியவராகத் தெரிவுசெய்யப்பட்ட அதிஸ்ரசாலி:

அ. கரோலினி கீர்த்திக்கா

41/1. புனித மரியாள் வீதி. திருகோணமலை

பாராட்டுக்குரியவர்களாகத் தெரிவுசெய்யப்படும் 10 அதிஸ்ரசாலிகள்

01. பொ. டெஸ்மன் இல. 46, வன்னிக்கோட்டம், சிதம்பரபுரம், வவுனியா
02. செ. ஆன் நியூசிக்கா துரம், மரியாள் வீதி, தாழ்வுபாடு.
03. ஏ. அனுஷா, அடைக்கல அன்னை ஆலயம், நேரியகுளம்.
04. அ. சுமா மிராண்டா, வங்காலை.
05. செ. வளன் நிலுஜன் துரம், மரியாள் வீதி, தாழ்வுபாடு.
06. த. ஜனனி லெம்பேட், 1ம் வட்டாரம், வங்காலை.
07. செ. இன்வென்ரா டயஸ், மரியாள் வீதி, தாழ்வுபாடு.
08. கி. ஆன்றிசானா, மன்/ புனித லூசியா ம. வி., பள்ளிமுனை.
09. ரி. எஸ். டக்ஸ்சியா இல. 76/ 100 சாந்திபுரம், மன்னார்.
10 மரிஸ்ரெலா தி. கு. கன்னியர் மடம், தலவாக்கலை.

தவக்காலச் சிறப்புப் பொழிவு

சிறப்புக் கட்டுரை

இயேசுக் கிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் பின்னணியில்

பிலாத்துவின் வகிபாகம்

- ஒரு வரலாற்றுக் கண்ணோட்டம் -

எழுத்துருவாக்கம்

திரு. எஸ். டேவிட், கோட்டக் கல்விர் பணிர்பாளர், முசலி

மனித குலத்தின் மீட்புக்காக இறைவன் மனுவுருவெடுத்து பூமியில் பிறந்து வளர்ந்து, வாழ்ந்து, சிலுவையில் மரித்து, மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தது போன்ற எல்லா நிகழ்வுகளும் வரலாற்றில் பதிவாக்கம் செய்யப்பட்டு இரண்டாயிரம் வருடங்கள் உருண்டோடிவிட்டன. ஆனாலும் உலக வரலாற்று நிகழ்வுகளில் முதன்மையும் முக்கியத்துவமும் வாய்ந்த மாபெரும் நிகழ்வுகளாக இறைமகன் இயேசுவின் பிறப்பும், அவரது போதனைகளும், சிலுவை மரணமும், உயிர்ப்பும் விளங்குகின்றன. உலக வரலாற்றை கிறிஸ்துவுக்கு முன், கிறிஸ்துவுக்குப் பின் என நிலையான கோடு கிழித்துக்காட்டும் அளவுக்கு, இயேசு மாபெரும் வரலாற்று நாயகன் என்பது அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மையாகும்.

இறைமகன் இயேசு மனிதனாகப் பிறந்து பூமிக்கு வந்ததும், வாழ்ந்ததும், சிலுவையில் மரித்ததும், உத்தானம் அடைந்ததும் தந்தையாகிய இறைவன் வகுத்த திட்டத்தின் நிகழ்ச்சி நிரல்களாகும். இதனை இறைவாக்கினர்கள் ஊடாக இறைவன் அவ்வப்போது தெரிவித்துக்கொண்டிருந்தார். எவ்வாறாயினும், இறைமகன் இயேசுவின் சிலுவை மரணத்தைத் 'தீர்மானித்தவர்கள்' தொடர்பாகக் கவனமாகப் பரிசீலிக்கும்போது, அவர்கள் 'இறைவன் வகுத்த திட்டத்தின் கருவிகளாகவே' தென்படுகின்றார்கள்.

இயேசுவின் முப்பத்திமூன்று வருட இவ்வுலக வாழ்வை முடிவுக்குக் கொண்டுவந்த சிலுவை மரணத்துக்குக் காரணமானவர்கள் யார்? அவரைக் காட்டிக்கொடுத்த யூதாஸா? யூதர்களா? உரோமைச் சாம்ராச்சிய சக்கரவர்த்தி சார்பாக அன்றைய யூதேயா மாநிலத்தை நிர்வகித்த ஆளுனன் பிலாத்துவா? என்பது விவாதத்திற்குரிய கருப்பொருளாகவே இன்றுவரை உள்ளது.

இயேசுவின் 'வாழ்வியல் தடங்களை' தொகுத்து நற்செய்திகளாக வடிவமைத்த நான்கு நற்செய்தியாளர்களும் தத்தமது நோக்குநிலையில் நின்று பிலாத்துவின் வகிபாகத்திற்கு எழுத்துருவம் கொடுக்கின்ற அதேவேளை அவரது சிலுவை மரணம் தொடர்பான தகவல்களை ஒரு சமச்சீரான ஒழுங்கின் அடிப்படையிலேயே வரிசைப்படுத்தியுள்ளனர்.

இயேசுவின் வசீகரம் மிக்க போதனைகளால் பொதுமக்களின் திரட்சியானது அவரின் பின்னால் மையம்கொண்டிருந்ததால் காழ்ப்புணர்வடைந்திருந்த யூத உயர் குழாம் (Elits) வர்க்கத்தினர் அவரைக் கொல்லத் துடித்தனர். அதற்கான தகுந்த தருணத்தைத் தேடிக்கொண்டிருந்தனர். முப்பது வெள்ளிக்காசுக்கு ஆசைப்பட்ட அவரது சீடன் யூதாஸ் மூலம் தமது திட்டத்தைக் கனிய வைத்தனர்.

இயேசு இறுதி நாட்களில் ஜெருசலேம் பேராலயத்தில் வியாபாரிகளை ஆக்ரோசமாக விரட்டி அடித்து ஆலயத்தைச் சுத்தப்படுத்திய சம்பவமும், அவரை முன்நிறுத்தி வாழ்த்திப் போற்றி கழுதைமீது அமர்த்தி ஜெருசலேம் நகரை நோக்கி வெகுஜனக் கிளர்ச்சி வடிவிலான தோரணையில் ஊர்வலமாக அழைத்துச் சென்ற வெளிப்படையான நிகழ்வும் யூதத் தலைவர்களின் வயிற்றில் புளியைக் கரைத்தவையாக அமைந்தன. உரோமைப் பேரரசால் தமக்கு வழங்கப்பட்டிருந்த உள்ளூராட்சி அரசியல் அதிகாரங்களை பறிக்கக்கூடிய தலைவராக – மக்கள் தலைவனாக இயேசு முகிழ்த்தெழுந்து வெகுஜன ஆதரவை ஒன்றுதிரட்டுகின்ற ஒரு பலமான மனிதராகவும் அவரைத் தவறாக எடைபோட்டதன் விளைவாகவே அவரை ஒழித்துக்கட்ட முனைந்தனர்.

இந்தப் பின்னணியில் யூதேயா மாநிலத்தில் அன்றைய ஆளுனன் பிலாத்துவின்முன் கொண்டுசென்று மரணத்திற்கு தீர்வையிடுமாறு கூச்சலிட்டதும் பிலாத்துவின் நிர்வாகம், நீதி, தொடர்பான முடிவெடுக்கும் ஆற்றலை தர்ம சங்கடத்திற்குள்ளாக்கியமையும் தொடர்பான சந்தர்ப்பங்களை கருத்தூன்றி நோக்குவதனூடாக இயேசுவின் சிலுவை மரணத்தின் பின்னணியில் பிலாத்துவின் வகிபாகம் என்ன என்பதை அடையாளம் கண்டுகொள்ள முடியும். இக்கட்டுரையின் நோக்கமும் அதுவேயாகும்.

எனினும் இயேசுவின் வாழ்வியல் தடயங்களை நற்செய்திகளாக வடிவமைத்த லூக்கா, மத்தேயு, மாற்கு, யோவான் ஆகிய நான்கு நற்செய்தியாளர்களும் இயேசுவின் மரணம் தொடர்பாக பிலாத்து ஒரு தர்மசங்கடத்துக்குள்ளாக்கப்பட்ட அதிகாரியாகவும், தடுமாற்றமடைந்த – அதேவேளை தனது அதிகாரத்தைக் காத்துக்கொள்ள 'நழுவல் போக்கான தந்திரோபாயத்தைக் கடைப்பிடித்த ராஜதந்திரியாகவும் முன்னிறுத்துகின்றனர். உரோமைச் சட்டதிட்டங்களுக்கு அமைய யூதத் தலைவர்களின் விடாப்பிடியான கோரிக்கையில் இருந்து தப்பித்துக்கொள்ள (உரோமானியச் சட்டத்தின் பிரகாரம்) ஒரு 'சம்பிரதாயத்திற்கான' தீர்ப்பினை வழங்கிய அரசியல் நிருவாகியாகக் காண்பிப்பதன் ஊடாக, இயேசுவின் சிலுவை மரணத்துக்குரிய உண்மையான காரண கர்த்தாக்கள் அவரது இனத்தைச் சார்ந்த யூதத் தலைவர்களே என்பதையும் நற்செய்தியாளர்கள் முன்னிறுத்த முனைவதை அவதானிக்க முடிகின்றது.

இயேசுவின் இவ்வுலக வாழ்வு முடிந்து சில வருடங்களின் பின்னரே நற்செய்தியாளர்கள் நற்செய்திகளை எழுதியதனால் அக்கால இடைவெளியில் யூத மதத்தினருக்கும், கிறிஸ்தவர்களுக்கும் இடையிலான முரண்பாடுகள் முறுகலடைந்திருந்த ஒரு நிலையின் பிரதிபலிப்பாகவே யூதர்களே இயேசுவின் மரணத்துக்குரிய காரண கர்த்தாக்கள் என்பதை வலியுறுத்திக் காட்ட முனைந்திருக்கலாம்.

ஆனால் பிலாத்து குற்றமற்ற ஒரு தூய நிருவாகி என்று நற்செய்தியாளர்கள் எந்த இடத்திலும் கூற முனையவில்லை, எவ்வாறாயினும் இயேசுவை மரணத்திற்குத் தீர்வையிடுவதற்கு முன்னர் பிலாத்து கடைப்பிடித்த சாதுரியமான அணுகுமுறைகள், இந்தச் சில மணி நேரத்து நடத்தைக் கோலங்கள், அவன் வரலாற்றில் பிரபல்யமடைவதற்குக் காரணமாகியதுடன் இயேசு தொடர்பாக அவனது மனைவி கூறிய கனவு எச்சரிக்கைக்குக் கட்டுப்பட்டு தன்மீது குற்றமில்லை எனத் தீர்ப்பின் பின்னர் பகிரங்கமாகக் கைகளைக் கழுவிக்கொண்ட நிகழ்வும், பின்னைய காலங்களில் பிலாத்துவை ஒரு நல்ல மனிதனாகவும் இயேசுவின் மரணத்திற்கான பின்னணியில் பிரதான காரண கர்த்தாவாக இல்லை என்ற ஏற்புடமையின் அடிப்படையிலும் இயேசுவை மையமாகக் கொண்டு உருவாகிய சில ஆதித்திருச்சபைகள் பிலாத்துவையும், அவனது மனைவியையும் தூயவர்களாகக் கொண்டாடும் வழிபாட்டு மரபு இன்றும் உள்ளதாக அறிய முடிகின்றது.

இது பற்றி தியாகுவின் விவிலியக் கலைக் களஞ்சியத்தின் நான்காம் தொகுதியில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. *"பிலாத்துவைப் பற்றிப் பல கிறிஸ்தவப் போலி நூல்கள் பல கதைகளைக் கூறுகின்றன. ஒன்றில் பிலாத்து மறைசாட்சியாக மரிக்கின்றான்..... சில கதைகள் பிலாத்துவின் மனைவியைப் புனிதையாகக் கருதுகின்றன. மத்தேயு நற்செய்தியில் (அதி 27; வச-19ல்) பெயர் குறிப்பிடப்படாத இவள், கதைகளில் புரோக்கை என அழைக்கப்படுகின்றாள். பிலாத்துவும் அவர் மனைவியும் எத்தியோப்பிய திருச்சபையில் புனிதர்களாகக் கருதப்பட்டு விழாவையும் கொண்டாடுகின்றனர். புரோக்கையை கிரேக்க திருச்சபை புனிதையாகக் கொண்டாடுகின்றது."*

ஆனால் கத்தோலிக்க திருச்சபையானது பிலாத்து தொடர்பாக நான்கு நற்செய்தியாளர்களின் மதிப்பீடுகளையே கருத்தில் கொண்டுள்ளது. பிலாத்து தனக்குரித்தான அதிகாரத்தைப் பயன்படுத்தி இயேசுவின் மரணத்திற்குத் தீர்வையிட்ட கதாபாத்திரமாகவே கருதப்படுகின்றான். இதனால்தான் கத்தோலிக்க திருச்சபையின் திருப்பலியின்போது சொல்லப்படுகின்ற விசுவாசப்பிரமாணச் செபத்தில், "..... மேலும் நமக்காகப் போஞ்சியூ பிலாத்துவின் அதிகாரத்தின்கீழ் பாடுபட்டு சிலுவையில் அறையுண்டு மரித்து அடக்கம் செய்யப்பட்டார்." என்ற வரிகள் இறைமகனுக்கு மரணத்திற்கான தீர்ப்பு வழங்கிய - மறக்கப்பட முடியாத உரோமானிய காலனித்துவ நிருவாகி பிலாத்து என்பது காலங்காலமாக நினைவுகூரப்பட்டு வரப்படுகின்றது.

சட்டத்தை மதிக்கின்ற உண்மையான ஒரு நிருவாகியின் கரங்களில் நீதி வழங்கும் பொறுப்பையும் கையளிக்கும்போது அந்த நிருவாகி உண்மையான நீதியாளனாக நின்று குற்றங்களைத் தீர விசாரித்து உண்மையான, நீதியான தீர்ப்பினை வழங்க வேண்டும். ஆனால் பிலாத்து குறுகிய ஒரு சந்தர்ப்ப வேளையிலேயே இயேசுவை 'குற்றமற்றவர்' என்பதைத் துல்லியமாக அறிந்துகொண்டாலும் அவனால் நீதியின் பிரகாரம் நடந்துகொள்ள முடியவில்லை. எந்த ஒரு நீதியாளரும் ஒரு நபர் குற்றமற்றவர் என்பதை அறிந்த பின்பும் அவரைக் குற்றவாளியாகத் தீர்பிடமாட்டார். ஆனால் இயேசுவின் விடயத்தில் பிலாத்து நடந்துகொண்ட விதத்தைத் துல்லியமாக நோக்குகின்ற போது, அவன் ஒரு அரசியல் அயோக்கியன் என்றுதான் கருத வேண்டும்.

ஏனெனில் பிலாத்து தொடர்பான பிற்கால வரலாற்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்ற தகவல்கள் அவனது கொடூரமான நடத்தைக்கோலங்களையும் நிருவாக நடவடிக்கைகளையும் வெளிப்படையாக விமர்சிக்கும் வகையில் அமைந்துள்ளன. எனினும் யூதர்களால் கைதுசெய்யப்பட்டு அபாண்டமான குற்றச் சாட்டுக்களுடன் பிலாத்துவின் முன்னிலையில் மரணத்திற்குத் தீர்வையிடுமாறு இயேசு முன்னிறுத்தப்பட்டபோது அவனது அணுகுமுறை வித்தியாசமானதாகப் படுகின்றது. பிலாத்துவின் அணுகுமுறையில் ஓரளவு மென்போக்கு காணப்படுகின்றது. யூத தலைவர்களால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களை கருத்தூன்றி பரிசீலித்தானோ இல்லையோ, உண்மையில் இயேசுவின் அகத்தின் தெய்வீக அழகை முகத்தில் தரிசித்திருக்கலாம். 'அந்த நீதிமான் பொருட்டு' அவனது மனைவி கண்ட கனவின் தாற்பரியம் அவனது மனச்சாட்சியை விறாண்டியிருக்கலாம், இன்னுமாக, "இவன் தன்னை இறைமகன் என்று கூறுகின்றான்" என்ற பரிசேயரின் குற்றச்சாட்டின் உண்மைத்தன்மையை ஆழமாகக் கருத்தில் கொண்டிருக்கலாம். 'எனது அரசு இந்த உலகைச் சார்ந்ததல்ல' என்ற இயேசுவின் பதிலும் 'நான் உண்மைக்குச் சாட்சி பகரவே இவ்வுலகிற்கு வந்தேன்" என்ற ஆழம் காண முடியாத மற்றொரு பதிலும் அவனுக்கு உள்ளார்ந்த நடுக்கத்தை ஏற்படுத்தி இருக்க வேண்டும். இதனால்தான் யூதர்களின் கோரிக்கையை மழுங்கடிக்க, இயேசுவின் உயிருக்குப் பங்கமற்ற வகையில் "இரக்கம் பிறக்கக்கூடிய அளவுக்கு குருதி வடியும்" கசையடித் தண்டனையை வழங்கி விடுதலை செய்ய முனைகின்றான். ஆனாலும் பிலாத்து தனது அணுகுமுறையில் தோற்றுப்போனான். அவனது பின்வாங்கலுக்கு நழுவலுடன்கூடிய காரணங்கள் இருந்திருக்கலாம். பிற்கால வரலாற்று ஆசிரியர்களால் 'இரக்கமற்ற குருரமான அரசியல் நிர்வாகி' என நோக்கப்படுகின்ற பிலாத்து இயேசுவின் விடயத்தில் குறைந்த அளவிலே மென்போக்கான அணுகுமுறையைக் கடைப்பிடித்தமை ஆச்சரியத்தை அளிக்கிறது.

இயேசுவை எதிர்கொண்டதன் மூலம் 'வரலாற்றில் பிரபல்யமடைந்த' இந்தப் பிலாத்து யார்?

இறைமகன் இயேசுவின் புனிதமான இவ்வுலக வாழ்வைப் பதிவுசெய்த நான்கு நற்செய்தியாளர்களின் நற்செய்திகளிலும் பிலாத்து தொடர்பான தகவல்கள் காணப்படுகின்றன. இவை தவிர வரலாற்று எழுத்தாளர்களான பிளேவியல்ஸ் ஜோசி.ஃபஸ் என்பவரும் ஃபிலோ என்பவரும் ஆன் ரோ என்பவரும் குறிப்பிடத் தக்கவர்களாக கணிப்பிடப்பட்டுள்ளனர். அதற்கும் மேலதிகமாக பிற்காலத்தில் பிலாத்துவின் மரணம் தொடர்பாக பல கோணங்களில் இருந்தும் ஊகங்களின் அடிப்படையில் பல்வேறு கிறிஸ்தவ கதைகளும் வளர்ச்சி அடைந்ததாக அறியமுடிகின்றது.

உலக வரலாற்றில் கிறிஸ்துவுக்கு முன் 63ம் வருடத்தில் பலம் பொருந்திய உரோமைச் சாம்ராச்சியம் பலஸ்தீனப் பிரதேசம் உள்ளிட்ட மத்திய தரைக்கடலின் கரையோரப் பிரதேசங்களைச் சூழவிருந்த நிலப்பிரதேசங்களில் தனது குடியேற்றவாத வலையை ஆழமாக விரித்திருந்தது. உரோமரால் கைப்பற்றப்பட்ட இத்தகைய குடியேற்ற மாநிலங்களில் அந்தந்தப் பிரதேசங்களைச் சேர்ந்த அரசியல் தலைவர்கள் உரோமைப் பேரரசின் பிரதிநிதிகளாக நிருவாகத்தில் அமர்த்தப்பட்டனர். இந்த அணுகுமுறை இத்தகைய மாநிலங்களில் அரசியல் கிளர்ச்சிகள் தலைதூக்காத வண்ணம் மேற்கொள்ளப்பட்ட உரோமைப் பேரரசின் தந்திரோபாயமாக அமைந்தது. இயேசு பிறந்த வேளையில் உரோமைப் பேரரசனாக அகஸ்டஸ் சீசர் என்ற மன்னனும் அவனது ஆளுகைக்கு உட்பட்ட பலஸ்தீனப் பிரதேசத்தில் பிரதிநிதியாக மகா ஏரோது என்ற ஆளுனனும் அரசியலை அலங்கரித்தனர். இயேசுவைக் கொல்லத் தேடிய ஏரோது என்ற ஆளுனன் இவனே.

எனினும் மகா ஏரோதுவின் காலத்தில் பலஸ்தீன மண்ணில் உரோமைக்கு எதிரான கிளர்ச்சிக் குழுக்கள் முளைவிடத் தொடங்கின. இதனால் பலஸ்தீனப் பிரதேசம் தொடர்ச்சியான சர்ச்சைக்குரிய மாநிலமாக உரோமைப் பேரரசால் இனங்காணப்பட்டது. இதனால் மகா ஏரோதுவின் மரணத்தின் பின்பு பலஸ்தீன மண்ணில் வாழ்ந்த மக்கள் அரசியல் பலத்தை உடைக்கும் வகையில் பலஸ்தீன மாநிலமானது யூதேயா, கலிலேயா, வடமாநிலம் என மூன்று வலயங்களாகத் துண்டாடப்பட்டு ஒவ்வொரு பிரதேசத்திற்கும் ஒரு ஆளுனர் என்ற வகையில் மகா ஏரோதுவின் மூன்று புதல்வர்களும் உரோமைப் பேரரசரால் நியமிக்கப்பட்டனர்.

குறிப்பு : (Enlarged Kingdom created a sound administrative system. Herad the Great Deth in 4 BC. Reestablishment of direct Roman Government . Agustus dicided later that year in the presence of three surviving sons of Herod. 1. That Archelaus Shoul rule Judea 2. Herod Antipas rule Galilee 3. Herod Philip rule North area. -
(The New Encyclopaedia Britannica)

யூதேயாவுக்கு ஏரோது ஆர்கொலாவுஸ் என்பவனும் கலிலேயாவுக்கு ஏரோது அந்திப்பாஸ் என்பவனும் வடமாநிலத்திற்கு ஏரோது பிலிப் என்பவனும் ஆளுனர்களாக நியமிக்கப்பட்டனர்.



(மகா ஏரோது மற்றும் அவனது புதல்வர்கள் ஆட்சிக்கால பலஸ்தீன ஆள்புலத்தைக் காட்டும் வரைபடம். ஆதாரம் - The New Encyclopaedia Britanica

எனினும் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த யூதேயாவின் ஆளுநனான ஏரோது ஆர்கொலாவுளின் அணுகுமுறைகளால் மக்கள் அவனுக்குப் பலத்த எதிர்ப்புக்காட்டி கலகம் செய்தனர். கிளர்ச்சியை முடிவுக்குக் கொண்டுவர உரோமைப் பேரரசின் யூதேயாவை தனது நேரடி ஆளுகையின்கீழ் கொண்டுவரும் பொருட்டு உரோம இனத்தைச் சார்ந்த ஆளுனர்களை அங்கு நியமிக்கும் நடைமுறையை அமுலாக்கினான்.

(தொடர்ச்சி 16ம் பக்கம்)

பிலாத்துவின் வகிபாகம்

15ம் பக்க தொடர்ச்சி

எனினும் யூதேயாவில் உரோமரின் நேரடி ஆட்சி தொடங்கிய நாளில் இருந்து அங்கு அரசியல் கொந்தளிப்பு தொடர்ச்சியாக சூடுபிடித்தது. இதனால் உரோமானிய ஆட்சிக்கு எதிராகக் கிளர்ந்த புரட்சிவாதிகள் அவ்வப்போது பதவிக்கு வந்த உரோம ஆளுனர்களால் கொடூரமான முறையில் நசுக்கப்பட்டனர். அத்தகைய ஆளுனர்களில் ஒருவன்தான் பிலாத்து. உலக இரட்சகரின் மரணத்திற்குத் தீர்வையிட்டதனால் வரலாற்றில் கொட்டை எழுத்துக்களில் பதிவாகியுள்ள பிலாத்து யூதேயாவில் ஆளுனனாக கி. பி. 26ல் பதவியேற்று கி. பி. 36ம் ஆண்டுவரை யூதேயாவின் ஆளுனனாகப் பதவியிலிருந்தான். இக்காலத்தில் உரோமைச் சக்கரவர்த்தியாக திபேரியுஸ் செசார் ஆட்சிபுரிந்தான்.

ஆங்கிலத்தில் Pontius Pilate (பொந்தியூ பைலட்) என்று குறிப்பிடப்படும் பிலாத்துவைப்பற்றி நான்கு நற்செய்தியாளர்கள் கூறுகின்ற விதமும் பிற்கால வரலாற்று எழுத்தாளர்கள் கூறுகின்ற விதமும் முரன்நிலையுடையதாகத் தென்படுகின்றது. நற்செய்தியாளர்கள் இயேசுவின் மரணத்திற்கான தீர்வையிடும் சந்தர்ப்பம்வரை பிலாத்துவின் நடத்தைக்கோலங்களை சீரான நோக்கில் மதிப்பீடு செய்ய, வரலாற்றாளர்கள் பிலாத்துவின் வாழ்வின் அடியத்திவாரங்களை கிண்டிக் கிளறி தகவல்களை வெளிக்கொணர்ந்துள்ளனர். வரலாற்று எழுத்தாளர்களின் பார்வையில் பிலாத்து ஒரு கொடூர ஆட்சியாளனாகவே சுட்டிக் காட்டப்படுகின்றான்.

பிலாத்துவின் பூர்வீக தேசம் ஸ்பெயின் என்று ஒரு கருத்து நிலவினாலும் உண்மையிலும் அவன் ஒரு உரோமானியன் என்பதை அவனது பெயரில் இருந்தே அறிய முடிகின்றது. இத்தாலியின் தென்பகுதி மாநிலத்தில் சாம் நைட் என்ற உயர் குடியைச் சேர்ந்த இவன் தான் சார்ந்த பாண்டிஸ் என்ற இனக் குழுமத்தின் நாமத்தைத் தனது பைலைட் அல்லது பிலாத்து என்ற பெயருக்கு முன்னால் பொருத்தியுள்ளமைதான் உண்மை நிலைப்பாடாகும். இதனால் இவனது பெயர் பான்டீஸ் பைலட் பொந்தியூ பிலாத்து, போஞ்சியூ பிலாத்து என்றெல்லாம் உச்சரிக்கப்படுகின்றது.

பிலாத்துவின் அரசியல் பிரவேசம்

பிலாத்துவின் அரசியல் பிரவேசத்தை அவனது வீரதீரமிக்க இராணுவச் சேவையூடாக வரலாற்றாசிரியர்கள் அடையாளம் காண முனைந்துள்ளனர். இதன்பிரகாரம் உரோமைப் பேரரசின் இராணுவக் கட்டமைப்பின் குதிரைப்படையில் இணைந்து சிறந்த வீரனாக வளர்ச்சி அடைந்து வந்த இவன் குறுகிய காலப் பகுதிக்குள் தனது திறமையினால் இராணுவத்தில் இளநிலை அதிகாரியாகப் பதவி உயர்வுபெற்றான். அடுத்தடுத்துக் கிடைத்த பதவி உயர்வுகளால் அவனது 30வது வயதுக்குள் யூதேயாவின் ஆளுனனாகப் பதவி உயர்வு பெற்றான்.

உரோமானிய சாம்பிராச்சியத்திற்குத் தலையிடியைத் தொடர்ச்சியாகக் கொடுத்துக்கொண்டிருந்த யூதேயாவிற்கு பொருத்தமான இராணுவக் குணாதிசயங்களை கொண்ட கடின இதயம் படைத்த பிலாத்துவை நியமிப்பது மிகப்பொருத்தமானது என உரோமைப் பேரரசன் கருதியிருக்கலாம்.

பத்து வருடங்களாக யூதேயாவின் ஆளுநனாக பதவி வகித்த பிலாத்து, தனது அரசியல் கருமங்களை ஜெருசலேம் நகரில் இருந்து மேற்கொண்டாலும் அவனது பாதுகாப்பு வியூகங்கள் நிறைந்த உத்தியோகபூர்வ வாசஸ்தலம் துறைமுகப்பட்டினமான செசாரியாவிலேயே அமைந்திருந்ததாம். பிற்காலத்தில் கண்டெடுக்கப்பட்ட எழுத்துப் பொறிக்கப்பட்ட கற்பலகை ஒன்று பிலாத்துவின் இந்த வாழ்விடம் தொடர்பான உண்மையினை வெளிகாட்டும் சான்றாக உள்ளது.

செசாரியா துறைமுக நகரில் கண்டுபிடிக்கப்பட்ட இந்த எழுத்துப் பொறிப்பு யூதேயாவின் ஆளுனரான பொந்தியு பிலாத்துவை அடையாளம் காட்டுவதாகக் கருதப்படுகிறது.

செசாரியா நகரத்தில் பிலாத்து தனக்கு நெருக்கமான அரசியல் ஆலோசகர்கள், தூதுவர்கள், ஆயிரம் பேரைக் கொண்ட போரில் கைதேர்ந்த கலகமடக்கும் படையினர் மற்றும் ஐநூறு வீரர்களைக் கொண்ட குதிரைப் படையணி சகிதம் தனது மனைவியுடன் இராஜபோக வாழ்க்கை வாழ்ந்தான் என அறியப்படுகின்றது.

அக்காலத்தில் உரோமைப் பேரரசுக்கு எதிராகக் கலகம் நிகழ்ந்த மாநிலங்கள் 'அரசியல் நாகரீகத்தில் பின்தங்கிய பிராந்தியங்களாக' உரோமைய உயர் அதிகாரிகளினால் இனங்காணப்பட்டதால் அத்தகைய பிரதேசங்களில் எழும் கிளர்ச்சிகளை முளையிலேயே நசுக்கிவிடப் பிலாத்து போன்ற கைதேர்ந்த இராணுவ நிர்வாகிகளே பொருத்தமானவர்களாக இருந்தனர். யூதேயாவை அத்தகைய பிராந்தியமாகவே கருதினர். இதனால் பிலாத்து அங்கு சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட கடுமையான அணுகுமுறைகளைக் கடைப்பிடித்தான். வரிவசூலிப்பு, நீதி விசாரணை போன்ற விடயங்களில் கடுமையான கொள்கைகளைக் கடைப்பிடித்தான். அனைத்திற்கும் மேலாக, உரோமானிய அரசியல் கலாச்சாரத்தை வெளிப்படையாக உட்புகுத்த அவன் எடுத்த முயற்சிகளுக்கு யூதத் தலைவர்களிடம் இருந்து பலமான எதிர்ப்புக் கிளம்பியது. பல இடங்களில் வெடித்த கிளர்ச்சிகளை பிலாத்து படையணிகளை அனுப்பி உடனுக்குடன் நசுக்கினான். உதாரணமாக ஸ்பாட்டகஸ் என்பவனின் தலைமையில் நடந்த புரட்சியை நசுக்குவதற்கு உரோமானியர்கள் 6000 பேரை அடிமைகள் என்ற அந்தஸ்தில் வைத்து கழுவேற்றினர்.

பிலாத்து தனது ஆட்சிக் காலத்தில் தனது அரண்மனையில் உரோமைப் பேரரசின் பட்டயங்களைத் தொங்கவிட்டிருந்தான். மேலும் உரோமரின் பாரம்பரியச் சிலை வணக்கத்தை அறிமுகப் படுத்த எடுத்த நடவடிக்கைகளும், நகருக்குள் தன்னிச்சைப்படி நீரைக் கொண்டுவருவதற்கான கால்வாய் அமைக்கும் திட்டமும் பொது மக்கள் மத்தியில் இருந்து பலமான எதிர்ப்புக்கள் எழக் காரணங்களாக அமைந்தன. சிலை வணக்கத்துக்காக எடுத்த முயற்சிக்கு எதிரான மக்களின் சுற்றிவளைப்புக் கிளர்ச்சிக்கு பிலாத்து பணிந்துபோனாலும், நகரத்துக்கு தண்ணீரைக் கொணர்வதற்கான கால்வாய் வெட்டும் அவனது திட்டத்திற்கு சுயநலமிக்க யூதத்தலைவர்களின் மறைமுக ஆதரவு இருந்ததனால் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தோர் கொடூரமாகக் கொல்லப்பட்டனர்.

உண்மையில் பிலாத்துவின் நிருவாக நடவடிக்கைகளுக்கு யூத சமுதாயத்தின் உயர்நிலை வர்க்கத்தினரின் ஆதரவு இருந்துள்ளதாகவே கருதமுடியும். அவர்கள் ஆலய நிருவாகம், உள்ளூர் நிருவாகம், உள்ளூர் வழக்குகளை விசாரித்தல் போன்றவற்றில் ஆதிக்கம் செலுத்தி பல சலுகைகளையும் பெற்று வந்தனர். (உரோமை ஆட்சிக்கு எதிராகக் கிளர்ந்தவர்கள் எல்லோரும் உண்மையில் மண்ணின் மைந்தர்களேயாவர்.) இயேசுவைத் தாமதம் இன்றி கொலை செய்வதற்கான (சிலுவை மரணம்) தீர்ப்பினை வழங்குமாறு பிலாத்துவின்மீது பலமான அழுத்தம் பிரயோகிக்கும் அவர்களின் அணுகுமுறை இருந்ததனால் ஆளுனருடன் கொண்டிருந்த நெருக்கமான செல்வாக்கினையே இது வெளிப்படுத்துகிறது.

பொதுவாக, உண்மையான வரலாற்று எழுத்தாளர்கள், குறித்த ஒரு விடயம் தொடர்பாக உண்மைத்தரவுகளை ஆராய்ந்து முடிவெடுத்த பின்பே தமது இறுதியான கருத்துக்களை முன்வைப்பர். இந்த அடிப்படையில் பிலாத்துவின் அரசியல் நிருவாக நடவடிக்கைகளைப்பற்றி ஆழமாய் ஆய்வுத் தேடல்களைக் கண்டறிந்த பின்பே தமது கருத்துக்களை முன்வைத்திருக்க முடியும். பிலாத்து நிருவகித்த ஆட்சி மண்டலம் அரசியல் ரீதியாக 'கொதி நிலையில்' இருந்த பிரதேசமாகக் காணப்பட்டதால் அங்கு அடிக்கடி நிகழ்ந்த கிளர்ச்சிகளை அடக்கி ஒடுக்க நிச்சயமாகத் தனது கைதேர்ந்த இராணுவ நிருவாக அணுகுமுறைகளைக் கடுமையாகக் கடைப்பிடித்திருப்பான் என்பதில் மாறுபட்ட கருத்து இருக்க முடியாது. இதுகுறித்து ஆன் ரோ என்ற அரசியல் எழுத்தாளர் பின்வருமாறு கருத்து வெளியிட்டுள்ளார், "*பிலாத்து யாரையும் மதிக்காத சந்தேகப் பேர்வழி. அவன் மக்களின் மனங்களில் பல யுகங்களை எழுப்பிக்கொண்டிருக்கும் ஒரு வரலாற்றுக் கதாநாயகன். சிலருக்கு அவர் புனிதர். வேறு சிலருக்கோ அவர் மனித பலவீனத்தின் ஒரு குறியீடு. பதவியைக் காப்பாற்றிக்கொள்ள ஒரு நபரைப் பலி கொடுக்கக்கூடத் தயங்காத அரசியல்வாதிக்கு மிகப் பொருத்தமான எடுத்துக்காட்டு*" மேலும் பிலாத்துவைப்பற்றி மதிப்பீடு செய்யும் ஜோஸி.ஃபஸ் என்ற மற்றொரு வரலாற்றாளர் இவ்வாறு கூறுகின்றார். "*பிலாத்து கொடூரமானவன், முரடன், கொலைகாரன் பல நீதிமான்களைக் கொன்றவன்*" என்று அவனது கேடுகெட்ட மிருகத்தனமான நடவடிக்கைகளை வரிசைப்படுத்தியுள்ளார். உரோம வரலாற்று ஆசிரியரான டாஸிடஸ் என்பவரின் கருத்தின் பிரகாரம் 'பிலாத்துதான் இயேசுவைக் கொலை செய்ததாகவும், ஃபீலோ என்பவர் பிலாத்து தொடர்பான குணவியல்புகளைப் பற்றிக் கூறுகையில்' பிலாத்து ஒரு கொலைகாரன், கற்பழிப்பில் வல்லவன் எனக் குறிப்பிட்டுள்ளதாக தியாகு தனது விவிலியக் கலைக் களஞ்சியத்தில் பதிவுசெய்துள்ளார்.

இவ்வாறு வரலாற்று எழுத்தாளர்களின் கருத்துக்கள் முன்வைக்கும் செய்திகளை நோக்குகின்றபோது, உரோம சாம்ராச்சியத்துக்கு உட்பட்ட யூதேயா மாகாணத்தில் பல வருடங்களாக இராணுவ நிருவாக ஆட்சியே நடைமுறையில் இருந்து வந்துள்ளது என ஊகிக்கலாம். அங்கு நிலவிய இராணுவ நிருவாகத்தை நெறிப்படுத்தியவர்களில் பிலாத்து முக்கியத்துவம் வாய்ந்த நிருவாகியாக வரலாற்றில் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நற்செய்தியாளர்களின் நோக்கு நிலையில்

இயேசு மூன்று வருடங்களாக பகிரங்க வாழ்வு நடத்தி போதனைசெய்துகொண்டிருந்ததைப் பிலாத்து தனது வேவுத் தரவுகள் மூலம் அறியாதிருந்திருக்க முடியாது. அவர் உரோம அரசுக்கு எதிராகச் செயல்படவில்லை என்ற உண்மையினையும் தெரிந்து வைத்திருக்கலாம். ஆனால் குற்றம்சாட்டப்பட்ட இயேசுவைப்பற்றி அப்போதுதான் தெரிந்தவன்போல அதிசயமாக நோக்கி "இவன் ஒரு கலிலேயனா?" என்று அப்பாவித்தனமான வினாவை எழுப்பி தந்திரமான முறையில் குற்றத்தின் கனதியை அறிந்து தீர்ப்பிடும் பொறுப்பை கலிலேயா ஆளுனன் ஏரோது அந்திப்பாஸிடம் சுமத்திவிட அவன் தந்திரமாக மேற்கொண்ட முயற்சி பலன் அளிக்காத நிலையில் மீளவும் பிலாத்திடமே இயேசு திருப்பி அனுப்பப்படுகிறார். இறுதியில் குற்றம்சாட்டியோரின் பிடிவாதத்தால் இயேசுவைக் கொலைக் களத்துக்கு அனுப்பத் தீர்ப்பு அளித்தான் என்ற வகையில் தூய லூக்காவின் நோக்கு நிலையில் இருந்து ஊகிக்க முடிகின்றது.

தூய மாற்குவின் பார்வையில்

இயேசுமீதான குற்றங்களைப்பற்றி விசாரணை செய்ததில் பிலாத்து பக்கச் சார்பற்றவனாகவும், இயேசுவைப்பற்றி எதுவும் தெரிந்துகொள்ளாதவனாகவும் நோக்குவது தெளிவாகிறது. இயேசு சிலுவையில் அறையப்பட்டதற்கான கொலைக்குற்றத்தைக் காட்டவில்லை. இதனூடாக பிலாத்து இது விடயத்தில் எவ்வித கவலையும் அற்றவனாகக் காணப்பட்டதாக மாற்கின் நோக்குநிலையில் பிலாத்து தென்படுகின்றான்.

தூய மத்தேயுவின் பார்வையில்

இயேசுவின் சிலுவை மரணத்துக்கு யூதர்கள்தான் காரணம் என்ற வகையில் அணுகுமுறை அமைகின்றது. இதற்கு ஆதாரமாக "இவன் இரத்தம் எங்கள் மேலும் எங்கள் பிள்ளைகள் மேலும் இருக்கட்டும்" என்று கூறிய யூதத் தலைவர்கள் இயேசுவின் கொலைக்கான பழியையும் பாவத்தையும் தாம் ஏற்றுக்கொள்வதாக அடையாளப்படுத்துகின்றனர்.

தூய யோவானின் பார்வையில்

பிலாத்து இரண்டு தடவைகள் இயேசுவை விசாரணை செய்தும் அவர் 'குற்றமற்றவர்' என்பதைக் கண்டுகொள்கிறான். அவரைக் கசையடிகளால் வருத்திக் காட்டி விடுதலை செய்ய முயன்றும் யூதர்களின் கடின மனங்களை கசியவைக்க அவனால் முடியவில்லை. இதனால் இறுதியில் யூதர்களே இயேசுவின் மரணத்திற்குக் காரணமானவர்கள் என்ற கருத்தை வலியுறுத்துவதன் ஊடாக பிலாத்துவுக்கு இது விடயத்தில் சம்மந்தம் இல்லை என்பதைக் காண்பிக்க முனைகின்றார்.

எவ்வாறெனினும் இறைமகன் இயேசுவின் இறுதி வேளையில் ஏறத்தாள 18 மணித்துளிகளுக்குள் அவர் கைது செய்யப்பட்டு, விசாரிக்கப்பட்டு, நையாண்டி செய்யப்பட்டு, குற்றம் சாட்டப்பட்டு, விசாரணைகளுக்காக அங்கும் இங்கும் அலைக்கழிக்கப்பட்டு, கசையடிகளால் குருதி வழிந்தோட வேடிக்கைபார்க்கப்பட்டு, இறுதியில் சிலுவைப் பயணம் ஊடாக கல்வாரியில் மரித்த சம்பவங்கள் வரை பலரது பங்களிப்பு இருந்துள்ளது என்பது வெளிப்படையான உண்மையாகும்.

இதில் பிலாத்து இயேசுவின் மரணத்திற்கான தீர்வையிட்ட விடயத்தில் நியாயமாக நடந்துகொள்பவன்போல பாவனை காட்டினாலும் "இவனை விடுதலை செய்தால் நீர் செசாருக்கு நண்பனாக இருக்க அருகதையற்றவர்" என்ற யூதத் தலைவர்களின் சொல் வீச்சுக்களால் அதிர்வடைந்து தன் பதவியைத் தக்கவைத்துக்கொள்ளவும், எதிர்ப்பலைகளைக் தணிக்கவும் முனைந்தான். இறுதியில் தனது மனச்சாட்சியையும் நீதியையும்விட தன் பதவிக்கே முதன்மையளித்து 'உறை நிலையில் நின்ற' உண்மையின் வடிவமான இறைமகன் இயேசுவுக்கு சிலுவை மரணத்துக்கான தண்டனையை வழங்கி தனது ஆட்சிக்காலத்தின்போது செய்த கொலைகளால் குருதிக்கறை படிந்த கொடிய கரங்களை கழுவிக் கொண்டதுமன்றி வரலாற்றில் என்றென்றும் பேசப்படக்கூடிய நிலைமையினையும் தனதாக்கிக்கொண்டான். தான் வரலாற்றில் பேசப்படுவோம் என பிலாத்து நினைத்தானோ இல்லையோ மனித குலத்தின் விடிவுக்காக இறைமகன் இயேசு சிலுவையில் குருதி சிந்துவார் என்ற இறைத் திட்டத்தில் பிலாத்து ஒரு கருவியாக இருந்துள்ளான் என்பதுவே யதார்த்தம்.

பிலாத்துவுக்கு இறுதியில் என்ன நடந்தது?

இயேசுவுக்கு மரணத் தீர்வையிட்டதன் மூலம் வரலாற்றில் இடம்பிடித்த பிலாத்துவின் ஆட்சி நிர்வாகம் பின்னர் நிச்சயமாகச் சோபித்திருக்க முடியாது. அவன் மனச்சாட்சியால் அலைக்கழிக்கப் பட்டிருக்கலாம். எனினும் தொடர்ந்து அவன் இரண்டரை வருடங்கள் யூதேயாவை நிருவகித்துள்ளான்.

சமாரியாவில் கெரேசிம் மலைமீது மோயீசன் புதைத்துவைத்த பொக்கிசங்களைத் தேடும் நம்பிக்கையில் பல்லாயிரக்கணக்கான சமாரியர்கள் கைகளில் ஆயுதங்களுடன் கூடிநின்றதை உளவாளிகள் மூலம் அறிந்து அவர்களின் நிலைப்பாட்டைத் தனக்கு எதிரானதாகக் கருதி அவர்களை வகைதொகை இன்றி வெட்டிச் சாய்க்கக் கட்டளையிட்டான். பிலாத்துவின் இந்த முட்டாள்தனமான நடவடிக்கை குறித்து துணிச்சல் மிக்க சமாரியத் தலைவர்கள் சீரியாவின் உரோமைப்பிரதிநிதி லூக்கியுஸ் விடேலியுஸ் என்பவரிடம் முறையிடவே உடனடியாகவே பிலாத்து உரோமை நகருக்கு உள்வாங்கப்பட்டான் என வரலாறு கூறுகின்றது. ஆனால் பிலாத்து உரோமைக்கு சென்றடையும் முன்பு திபேரிஸ் பேரரசன் இறந்துவிட்டான் எனவும் கூறப்படுகின்றது. *(குறிப்பு 1. : இதுபற்றி The New Encyclopaedia Britanica வில் பின்வருமாறு இரத்தினச் சுருக்கமாக உள்ளது. "The region under the Archelaus rule became the Province of Judaea and passed to series of undistinguished Roman Prefects the last of whom (Ponitus Pilate - (AD 26 - 36) under whom Jesus was crucified) lost office for the unnecesary massacre of some Samaritans. Palastine finally was united under the emperor Caligulas Protege.*

குறிப்பு 2. : பிலாத்து அநாவசியமான முறையில் சமாரிய மக்களைப் படுகொலை செய்ததனால் எழுந்த கொந்தளிப்பின் காரணமாக திலேரிட்டிஸ் பேரரசனின் மரணத்திற்குப்பின் பதவிக்கு வந்த பேரரசன் சலிகுலா பிரிக்கப்பட்டிருந்த பலஸ்தீன மாகாணங்களை மீண்டும் ஒன்றிணைத்து ஒரே நிர்வாகத்தின்கீழ் கொணர்ந்தான்.)

இதன்பின்னர் பிலாத்து தொடர்பான உண்மையான வரலாற்றுப்பதிவுகள் எதுவும் சொல்லப்படாவிட்டாலும் பிலாத்து தொடர்பான ஏராளமான கட்டுக்கதைகள் உருவாக்கப்பட்டன. பிற்காலத்தில் எழுந்த தனித்துவமான சில திருச்சபையைச் சார்ந்தவர் பிலாத்துவுக்கு சார்பான இலக்கியங்களைப் படைத்தனர். எத்தியோப்பிய திருச்சபை பிலாத்துவையும் அவன் மனைவியையும் புனிதர் அந்தஸ்தில் வைத்து மரியாதை அளிக்கும் மரபை வளர்த்தெடுத்தன. எனினும் பிலாத்து எவ்வாறு மரணமடைந்தான்? என்பதைக் குறித்து உண்மையான விளக்கம் எதுவும் இல்லை என்றே சொல்லப்படுகின்றது. எனினும் பிலாத்து யூதாசைப்போலவே ஆழ்மன அதிர்வுகளால் அலைக்கழிக்கப்பட்டு தற்கொலை செய்துகொண்டதாக அனேகர் நம்புகின்றனர். இந்த நம்பிக்கைக்கு ஊக்கமளித்தவர் ஜோஸே.ஃபியூஸ் என்ற வரலாற்று ஆசிரியராகும்.

மேலும் பிலாத்து கலிகுலா என்ற உரோமைப் பேரரசன் காலத்தில் தற்கொலை செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டதாகவும் மற்றொரு தகவலின்படி உரோமைப் பேரரசன் நீரோவின் ஆட்சிக் காலத்தில் தலைவெட்டிக் கொல்லப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. எவ்வாறெனிலும் உண்மைக்குச் சாட்சிபகர உலகுக்கு வந்த இறைமகனின் 'தூய்மையை' புரிந்துகொண்ட பின்னரும் யூதத் தலைவர்களின் கோரிக்கைக்கு அடிபணிந்து சிலுவை மரணத்துக்கான தீர்வையிட்டு பின்னர் தன் கரங்களை கழுவிக் கொண்டதுடன் கழுவிய நீரில் நழுவிய மீனாக தனது சுய ரூபத்தை வெளிப்படுத்தி இறுதியில் ஒரு கோழையாகவே மாறிவிட்டதாக வரலாற்று ஆசிரியர்கள் விமர்சித்துள்ளனர்.

எனினும் பிலாத்து ஏதோ ஒரு வகையில் கொலைத் தண்டனைக்கு உட்பட்டிருக்க வேண்டும் என்ற பலமான ஊகமே உண்மையாக இருக்க முடியும். உண்மையின் பக்கம் எவ்வாறானதாக இருந்தாலும் யூதேயாவில் ஆளுநனாகப் பதவி வகித்த காலத்தில் எவ்வளவுதான் உரோமைப் பேரரசுக்கு விசுவாசியாகச் சிறந்த முறையில் நிருவாகம் புரிந்திருந்தாலும் இயேசுவை மட்டும் பிலாத்து சந்தித்திருக்காவிட்டால் அவன் வரலாற்றில் பிரபல்யமாகியிருக்க முடியாது என்பதே உண்மை.

தவக்காலச் சிறப்புப் பொழிவு

உண்மையான தவம்

– அருட்பணி. ஏ. இரபேல் –

"தவம் என்பது கிறிஸ்தவ அருள் இயக்காற்றலாகிய மனமாற்றத்தின் பரிமாணம் ஆகும். குறிப்பாகச் சொல்லவேண்டுமானால் பாவத்தையும் தீமையையும் எதிர்த்து நிற்கும் மனப்பான்மை அல்லது நற்பண்புதான் தவம் எனலாம்."

உண்மையான தவம் என்றால் என்ன என்பதைக் குறித்து விவிலிய, இறையியல் கண்ணோட்டத்தில் விளக்கும் கட்டுரை இது!

முன்னுரை

கிறிஸ்துவின் பாடுகள், இறப்பு, உயிர்ப்பு ஆகிய பாஸ்கா மறைபொருளில் பங்கெடுத்த மீட்பின் மக்களாக உய்வடைய நாம் மனமாற்றம் பெறுமாறு திருச்சபை அழைப்புவிடுக்கிறது. இம்மனமாற்றத்திற்காக நாற்பது நாட்களை ஏற்படுத்தித் தவக்காலம் எனத் திருச்சபை அழைக்கிறது.

கிறிஸ்தவ வாழ்வு எல்லாக் காலங்களிலும் தவத்தை உள்ளடக்கியதாக இருக்கவேண்டும் என்றாலும் இச்சிறப்புக் காலத்தில் சிறப்பான முறையில் தவங்கள் செய்திடத் திருச்சபை வலியுறுத்துகிறது. பழைய ஏற்பாட்டில் யோவானின் அருளுரை கேட்டு நினிவே மக்கள் தவம் செய்தது போலவும் (யோனா 3:1-10), இயேசுபிரான் தம் பணி வாழ்வைத் தொடங்குமுன் 'நாற்பது நாள் இரவும் பகலும் நோன்பிருந்தது' போலவும் (மத். 4:2) நாம் நோன்பு செய்திடத் திருச்சபை வகை செய்துள்ளது.

பழைய ஏற்பாட்டில் மனமாற்றம் சடங்குபூர்வமான செயல்களுடன் தொடர்புகொண்டிருந்தது. உண்ணா நோன்பு, கோணி உடுத்திக்கொள்ளல், சாம்பலில் உட்கார்ந்திருத்தல், அழுதல் ஆகியவை இச்சடங்குகளாகும். "தாவீது உண்ணா நோன்பு மேற்கொண்டு இரவெல்லாம் தரையில் படுத்துக்கிடந்தார்" (2 சாமு 12:16). நினிவே நகர மக்கள் கடவுளின் செய்தியை நம்பி எல்லோரும் நோன்பு இருக்க முடிவு செய்தார்கள். நினிவே அரசன் தன் அரியணையை விட்டிறங்கி, அரச உடையைக் களைந்துவிட்டு, சாக்கு உடை உடுத்திக்கொண்டு, சாம்பல்மீது உட்கார்ந்தான் (யோனா4:5-6). இஸ்ராயேல் மக்களின் வழிபாட்டில் பாவம் பற்றிய மனம் வருந்துதல் அழுகையாகக் கலந்திருந்தது.

இவ்வகைச் சடங்குகளில் ஆழமான மனமாற்றம் இருக்க வேண்டும் என அடிக்கடி வலியுறுத்தப்பட்டாலும், பெரும்பாலும் இவை பாவம் குறித்த ஒரு சிறு மனம் வருந்துதலாகவும் நடந்த நிகழ்வுகளின் விளைவுகளினின்று தப்புவதற்கான விருப்பமாகவும் மட்டுமே இருந்தன. கடவுளுடன் புது உறவை ஏற்படுத்தவோ, நீதியின் வழியில் நடக்கவோ வேண்டும் எனும் உணர்வு அவ்வளவாக இருந்ததில்லை. ஆனால் இறைவாக்கினர்கள் மனமாற்றத்திற்காகக் கொடுத்த அழைப்பில் இதயபூர்வமான மாற்றத்தை வலியுறுத்தினர். "இப்பொழுதாவது உண்ணா நோன்பிருந்து, அழுது புலம்பிக்கொண்டு, உங்கள் முழு இதயத்தோடு என்னிடம் திரும்பிவாருங்கள்" (யோனா 2:12-13). மனமாற்றத்திற்கான இத்தகைய அழைப்பு மனிதனின் இருப்பையும், கடவுள் முன்னால் அவனுடைய நிலைப்பாட்டையும் வலியுறுத்தியது. இத்தகைய அழைப்பு கடவுளுடன் உள்ள உறவை வலியுறுத்தியது. வரலாற்று நூல்கள் இஸ்ரயேல் எனும் இனத்தின் மனமாற்றத்தை வலியுறுத்தின. ஆனால் இறைவாக்கினர் நூல்கள் தனிப்பட்ட நபர்கள் கடவுளுக்கெதிரான கீழ்ப்படிதலற்ற வாழ்வை விட்டுவிட்டு கடவுளை நம்பிட அழைப்பு விடுத்தன. முக்கியமாக எரேமியா, எசேக்கியா நூல்கள் இக்கருத்தை வலியுறுத்தின. (எரோ4:1; 16:3; 36:3;எசே18:21-28 ஓசே 6:1-6)

இறைவாக்கினரின் இத்தகைய அழைப்பு திருமுழுக்கு யோவானின் போதனையில் எதிரொலிக்கிறது. அவரது போதனைப்படி மனமாற்றத்திற்கான காரணம் இறையாட்சியின் வருகையாகும் (மத். 3:2). இயேசுபிரான் இவ்வழைப்பை மீண்டும் உறுதிப்படுத்தினார் (மத்:4:17). அது சீடத்துவத்திற்கான அழைப்பாகவும் மாறியது. இது நாம் குழந்தைகளாக மாறுவதற்கான அழைப்பாகவும் (மத் 18:3) எல்லாவற்றையும் விட்டுவிடுவதற்கான அழைப்பாகவும் (லூக் 14:33) அமைந்தது.

திருத்தூதர்கள் இவ்வழைப்பை மீண்டும் உறுதிப்படுத்தினர். (திப 3:19); 26:20) பிற இனத்தாருக்கான போதனையில் இம் மனமாற்றம் தாங்கள் தொழுதுவந்த கடவுளை மறந்து உண்மைக் கடவுளையும் இயேசுவையும் ஏற்றுக்கொள்வதாகவும் அமைந்தது. அது இருளிலிருந்து ஒளிக்கு வருதலாகும் (திப 26:18). தெசலோனிக்கேயரைப் பொறுத்தவரை இது சிலைகளை விட்டுவிட்டு உண்மையான, வாழும் கடவுளுக்கு ஊழியம்புரியக் கடவுளிடம் திரும்பிவருதல் ஆகும் (1தெச. 1:9).

மனமாற்றத்தையும் அதனை அடையாளப்படுத்தும் தவத்தையும்பற்றி திருவிவிலியம் மேற்கண்ட கருத்துகளைக் கொண்டுள்ளது. இத்தகைய கருத்துக்களின் ஒளியில் திருச்சபை மேலும் பல கருத்தாக்கங்களைத் தருகின்றது. இப்பின்னணியில் தவம் குறித்து நாம் சற்றுச் சிந்திக்கலாம்.

தவத்தின் இலக்கணம்

தவம் என்பது கிறிஸ்தவ அருள் இயக்காற்றலாகிய மன மாற்றத்தின் பரிமாணம் ஆகும். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் பாவத்தையும் தீமையையும் எதிர்த்து நிற்கும் மனப்பான்மை அல்லது நற்பண்புதான் தவம் எனலாம். கிறிஸ்தவ அருள்வாழ்வு திருச்சபை வாழ்வுடன் பின்னிப் பிணைந்தது. எனவே தவம் எனும் நற்பண்பு அருட்சாதனக்கொண்டாட்டத்துடன் நெருங்கிய தொடர்புகொண்டதாக உள்ளது. (பழைய ஏற்பாட்டின் சடங்கு முறைகளும் இங்ஙனம் இருந்தன எனக் கண்டோம்) ஒரு காலத்தில் விவிலியம் கூறும் மனமாற்றம் தவம் என்று மட்டுமே பார்க்கப்பட்டது. தவம் தனி நபர் சம்பந்தப்பட்டதாகவும் பாவத்திற்கான வெறுப்பாகவும் அதற்கான பரிகாரமாகவும் பார்க்கப்பட்டது. தவம் என்பது ஒருவரின் கடந்த காலப் பாவத்திற்கான பரிகாரமாகவும் ஒறுத்தலாகவும் அருட்சாதன - முறையான தனிப்பாவ அறிக்கையாகவும் பார்க்கப்பட்டது. எனவே தவத்தை மனம் வருந்துதலாகவும் பாவத்திற்குப் பரிகாரம் செய்யும் முயற்சியாகவுமே அருள் வாழ்வு கருதியது.

தவம் என்பது நீதி மற்றும் பிறரன்பு ஆகிய நற்பண்புகளுடன் தொடர்புப்படுத்திப் பார்க்கப்பட்டது. கடவுளோடு உள்ள உறவு, அடுத்திருப்போருக்கான நம் கடமை ஆகியவை வலியுறுத்தப்பட்டன. தற்காலச் சிந்தனை இத்தகைய கருத்துக்களை உள்ளடக்கினாலும் புதிய ஆழமான விளக்கங்களையும் தருகின்றது. தற்கால அருள்வாழ்வுச் சிந்தனையாளர்கள் தவத்தைச் சமுதாயக் கடமைகளுடன் இணைத்துப்பார்க்கின்றனர். தவம் என்பது எப்போதோ ஒருமுறை மட்டும் நடக்கிற அல்லது அவ்வப்போது மட்டும் நடக்க வேண்டிய செயலன்று. தனிப்பட்ட மற்றும் திருச்சபை சார்ந்த பொறுப்பை ஒருவரின் செயற்பாடுகள் பிரதிபலிக்க வேண்டும். ஆவியின் வழிகாட்டுதலில் கிறிஸ்துவின் சாயலில் நாம் வளர வேண்டும். இத்தகைய கண்ணோட்டம் கிறிஸ்தவத் தவத்திற்கு முக்கியத்துவம் நல்குகின்றது.

அருள் வாழ்வில் வளர்ச்சி என்பது பாவம் பற்றிய உணர்வைக் கொண்டதாக இருக்கிறது. இது நம் தனிப்பட்ட பாவம் பற்றியது மட்டுமன்று, மற்றவர்களின் பாவத்தையும் பற்றியதாகும். அத்துடன் சமூகத்தில் மலிந்துள்ள தீமையைக் குறித்த உணர்வும் இதில் உள்ளடங்குகின்றது. மேலும் கடவுளின் அன்பை உணர்தல், மற்றவர்களுடன் நமக்குள்ள உறவுகளை உணர்தல் ஆகியவை நம்மை வெட்க உணர்விற்கும், அச்சத்திற்கும், குற்றப்பழி உணர்வுக்கும் தள்ளலாகாது; மாறாக பாவத்தையும், நம்மிடத்திலும் சமுதாயத்திலும் இருக்கும் தீமையையும் செயலூக்கத்துடன் எதிர்க்கும் நோக்கத்தைத் தரவேண்டும்.

நம் பாவத்திற்கோ அல்லது அடுத்தவரின் பாவத்திற்கோ பரிகாரம் செய்வது என்பது ஒருவர் தன்னையே தண்டிப்பதோ அல்லது கடவுளுக்கு ஒரு நேர்ச்சைக் கடன் செலுத்துவதோ அன்று; மாறாக ஒருவரின் கடமைகளையும், தூய வாழ்விற்கான அழைப்பையும் இதயபூர்வமாக ஏற்றுக்கொள்வது; இதில் தொடரும் தடைகளை ஏற்றக்கொள்வது; இக்கடமைகளையும் அழைப்பையும் நிறைவேற்ற நன்முயற்சி எடுப்பது. இதில் மற்றவர்களின் கடமைகளைப் பகிர்ந்துகொள்வதும் அடங்கும்.

பழைய காலங்களில் இது நோன்பிருத்தல், புலால் உண்ணாமை அல்லது மற்ற ஒறுத்தல் முயற்சிகளாகப் பார்க்கப்பட்டன. தற்கால அருள்வாழ்வு தவத்தின் தனிநபர் சார்ந்த மரபுகளை உள்ளடக்கிக்கொண்டே அதனை விரிவாக்கி அடுத்திருப்போருடனான உறவுகளையும் மற்றவர்கள் மட்டில் நமக்குள்ள பொறுப்புக்களையும் வலியுறுத்துகிறது. பழைய காலங்களில் பரிகாரச் செயல்கள் பற்றி அதிகம் பேசப்பட்டது. தற்போது அடுத்தவருக்கு நாம் செய்த தீங்கினை விடுவிப்பது குறித்தும் பேசப்படுகிறது.

சங்க ஏடுகளும் திருத்தந்தையர் மடல்களும்

இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்குப் பிறகு தவத்திற்கும் சமூக நீதிக்கும் இடையே உள்ள தொடர்பு மிகுதியாய் வலியுறுத்தப்படுகிறது. திருவழிபாடு பற்றிய இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடு தவக்காலம் பற்றிக் கூறுகையில் திருமுழுக்கு மனமாற்றத்தையும் தவத்தின் சமூகப் பரிமாணத்தையும் வலியுறுத்துகிறது. தவக்காலம் திருமுழுக்கை நினைவிற்குக் கொணர்தல் அல்லது இதற்கென ஆயத்தப்படுத்துதல், ஒப்புரவாதல் ஆகியவையே இப்பண்புகள் (திருவழிபாடு 109).

தவக்கால ஒப்புரவு முயற்சிகள் அகம் சார்ந்தவையாகவும் தனி மனிதர் சார்ந்தவையாகவும் மட்டுமிராமல், புறம் சார்ந்தவையாகவும் சமூகப் பண்புடையவையாகவும் இருக்க வேண்டும். நாம் வாழும் காலத்திற்கும் வேறுபட்ட மண்டலங்களுக்கும், நம்பிக்கை கொண்டோரின் நிலைமைகளுக்கும் ஏற்ற ஒப்புரவு முயற்சிகளை ஆதரிக்க வேண்டும் எனவும் அந்த ஏடு கூறுகிறது. (திருவழிபாடு 110)

திருத்தந்தை 6ம் பவுல் வெளிப்பட்ட பெனித்தேமினி எனும் மடல் மனமாற்றத்தின் சமூகப் பரிமாணத்தையும் தவத்திற்கும் உலகின் முன்னேற்றத்திற்கும் இடையேயான தொடர்பையும் வலியுறுத்துகிறது.

மத்தியகால மற்றும் திரிதெந்தின் சங்க போதனைகளான ஒறுத்தல், தன்னல மறுப்பு ஆகியவை குறித்து இம்மடல் பேசினாலும் தவமுயற்சிகளைச் சமூகச் செயல்பாடாகவும் காண்கிறது. தவம் என்பது நம்பிக்கையைக் காத்தல், தன் வாழ்வின் நிலைக்கேற்ற கடமைகளைச் செய்தல், தன் பணியில் ஏற்படும் துன்பங்களைத் தாங்குதல், வையக வாழ்வின் சோதனைகளைப் பொறுமையுடன் தாங்குதல் ஆகியவற்றில் அடங்கியிருக்கிறது என இம்மடல் கூறுகிறது. (அதி 2-3).

மேலும் நோயினாலும், ஏழ்மையினாலும் துர்அதிஷ்டங்களாலும் பாதிக்கப்பட்ட திருச்சபையின் உறுப்பினர்கள் அல்லது நீதிக்கான ஆர்வத்தின் காரணமாகத் துன்புறுத்தப்பட்டோர் தங்கள் துயரங்களைக் கிறிஸ்துவின் பாடுகளுடன் இணைப்பதிலும் தவம் அடங்கியுள்ளது. இதன்மூலம் தவத்திற்கான கட்டளையை நிறைவேற்றுவது மட்டுமன்று சகோதரர்களுக்கும், தங்களுக்கும் அருள்வாழ்வைப் பெற்றுத்தர இயலும். அவ்வருள் வாழ்வு நற்செய்தி போதிக்கும் பேறுபெற்ற நிலையாகும் எனவும் இம்மடல் கூறுகிறது. (அதி 3-B) திருத்தந்தை 6ஆம் பவுல் பரிபூரண பலன்கள் குறித்த புதுக்கருத்துக்களையும் 'இந்துல் ஜென்கியரும் தோக்திரினா'- (Indul Gentiarum Doctrina) எனும் மடலில் தந்துள்ளார். அதில் பாவநீக்கம் குறித்த புதுவிளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. கடவுளுடன் உள்ள உறவைப் புதுபித்தலும், பாவத்தினால் வலுவிழந்துபோன தனிமனித மற்றும் சமூக மதிப்பீடுகளைப் புதுப்பிக்கச் செய்தலும் அதில் வலியுறுத்தப்பட்டுள்ளன. (எண் 2-3)

திருத்தந்தை 2ம் ஜோன் போலும் தம் உரைகளிலும் மடல்களிலும் இத்தகைய கருத்துக்களை நல்கியுள்ளார். இவை அனைத்திலும் தவம் என்பது திருச்சபையின் சமுதாயம் குறித்த போதனைகளுடனும், சமுதாயப் பணிகளுடனும் பார்க்கப்படுகிறது.

தவமும் ஒப்புரவு அருள்சாதனமும்

அருள்வாழ்வின் பரிமாணமாகிய தவம் எனும் பண்பை மன்னிப்பு வழிபாடு மற்றும் ஒப்புரவு அருட்சாதனச் சூழலில் நன்கு புரிந்துகொள்ளலாம். ஒப்புரவு அருள்சாதனம் என்று பெயரிட்டு அழைப்பதே அதன் உறவுத் தன்மையையும் சமூகப் பண்பையும் வலியுறுத்துவதற்குத்தான்.

மனமாற்றம் என்பது ஒரு தொடர் செயல் எனவும் இது அன்றாடக் கிறிஸ்தவ வாழ்வு மற்றும் சமூகப் பொறுப்பு ஆகியவற்றின் ஒரு பகுதி எனவும் ஒப்புரவு அருட்சாதனம் வலியுறுத்துகிறது.

ஒப்பரவு அருட்சாதனம் சமூக நீதியையும் வலியுறுத்துகிறது. இது திருச்சபை சார்ந்த பொறுப்பையும் வலியுறுத்துகிறது. இவ்வாறு ஒப்பரவு அருள்சாதனம் மற்றும் மன்னிப்பு வழிபாடு திருச்சபையின் நற்செய்திப் பணி மற்றும் வழிபாடுகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளன. ஒப்பரவு அருள்சாதனத்தைத் தனிமனிதர் தூய்மையாக்கலாக மட்டும் பார்த்தலாகாது. இது திருவழிபாட்டுக் காலச் சுழற்சியுடன் பார்க்கப்பட வேண்டும். ஆகவே ஒப்புரவு அருள்சாதனம் கூறும் தவமும் திருச்சபையின் ஒட்டு மொத்த வளர்ச்சியுடன் தொடர்புபடுத்திப் பார்க்கப்பட வேண்டும்.

முடிவுரை

தவத்தின் அடையாளமாக யூதர்கள் மூன்று காரியங்களை எண்ணியிருந்தனர். தர்மம் செய்தல் (லேவி 23:22; இச 24:19 - 22), செபித்தல் (விப 20:3; திபா 63:6-8), நோன்பு இருத்தல் (1சாமு 7:6; யோவே 1:14 யோனா 3:5-9; லேவி 16:29-34; செக் 8:19; நீதி 2:26; 2குறி20:3-4;1 சாமு 31:13; 2சாமு 1:12)

இயேசுபிரான் இம் மூன்று பண்புகளையும் குறித்துப் புது விளக்கமளித்தார். அவை தர்மம் செய்தல் (மத் 6:2-4) இறை வேண்டல் செய்தல் (மத் 6:5-6) நோன்பு இருத்தல் (மத் 6:16-18) ஆகியன. இவை வெளிவேடக்காரரின் செயல்கள்போல் இருத்தலாகாது என வலியுறுத்தினார் இயேசு. இதன் மூலம் தவத்தின் உண்மையான நோக்கத்தை அவர் தெளிவுபடுத்தினார்.

திருச்சபையின் இறையியல் சிந்தனையில் இந்நோக்கம் ஆழமாகப் பார்க்கப்பட்டு திருச்சபை நலன், சமூதாய நலன் ஆகிய கண்ணோட்டங்கள் வலியுறுத்தப்பட்டன. "பசித்தோருக்கு உங்கள் உணவைப் பகிர்ந்துகொடுப்பதும், தங்க இடமில்லா வறியோரை உங்கள் இல்லத்திற்கு அழைத்துவருவதும் ..... அன்றோ நான் விரும்பும் நோன்பு!" என இறைவாக்கினர் எசாயா மூலம் உரைத்த ஆண்டவர் (எசா 58:7) இயேசுபிரான் மூலமும் திருச்சபை மூலமும் உண்மைத் தவத்தைச் சமூக அக்கறையுடன் மேற்கொள்ளவும் சமூக நீதியுடன் மேற்கொள்ளவும் இன்றும் அறைகூவல் விடுக்கிறார்.

மருத்துவப் பொழிவு

தாக்கம் ஏற்பட்ட ஒருவருக்கு வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லும்வரை செய்யக்கூடிய காப்பு நடவடிக்கையும் சித்த ஆயுர்வேத சிகிச்சை முறையும்

Dr. எஸ். லோகநாதன் B.S.M.S, R.A.M.P
சித்தவைத்திய நிபுணர், மன்னார்

தொடர் – 10

13. விஷத்தால் ஏற்படும் அபாயம் (ACUTE POISON)

விஷப்பொருட்களைத் தெரிந்தோ தெரியாமலோ விழுங்குவதாலும், குடிப்பதாலும் உயிராபத்து ஏற்படுகின்றது. கூடுதலாக இந்நிகழ்வானது குழந்தைகளுக்கே ஏற்படுகின்றது.

தற்கொலை செய்பவர்கள் இதனைப் பயன்படுத்துவர். தற்செயலாகவும் விஷப்பொருட்களால் இந்நிகழ்வு நடக்கிறது. விஷப்பொருட்களை ஒருபோதும் சோடாப் போத்தல்களிலோ, மருந்துப்போத்தல்களிலோ அடைக்கக்கூடாது. இதனைத் தவறுதலாக வயோதிபர்களும், மற்றும் கண் தெரியாதவர்களும் கையாளக்கூடும். எலிப்பாசணம், நுளம்புக்கொல்லி மருந்து, (D,D,T) பூச்சிக்கொல்லி மருந்துகள், சலவைப் பவுடர், குளோரின் பவுடர், வர்ணப்பூச்சுக்கள், வாணிஷ் முதலிய பொருட்களால் அபாயம் ஏற்படுகின்றது. இதைவிட சில மூலிகைகளினாலும் உயிராபத்து ஏற்படுகின்றது. அம்மூலிகைகளில் அலரி விதை, நாபிக்கிழங்கு, குன்றிமணி, சேராங்கொட்டை, எருக்கலம்பால், கள்ளிப்பால், கஞ்சா, ஊமத்தை, பிரம்மதண்டு, அபின், எட்டிவிதை, ஆமணக்கு, கற்பூரம், வெண்கொடிவேலி முதவியவை அடங்கும்.

முதலுதவி :-

1. மேற்குறிப்பிட்ட விஷம் அருந்தியவரின் வாயில் அடித்தொண்டைவரை கையைவிட்டு வாந்தி எடுக்கவைக்க வேண்டும். அதிக உப்புப்போட்ட இளஞ்சூட்டு நீரைப் பருகினால் வாந்தியாகும்.
2. நஞ்சருந்தியவர் சுய நினைவிழந்திருந்தால் வாந்திவரச் செய்விக்கக்கூடாது.
3. சுவாசத்தடை ஏற்பட்டால் வாய்க்கு வாய்வழி சுவாசம் செய்விக்க வேண்டும்.
4. மண்ணெண்ணெய், பெற்றோல் மற்றும் வீரியம் மிக்க அமிலம் அருந்தினால் வாந்தி செய்விக்காமல் குதம் வழிமூலம் பேதி செய்வித்தல் வேண்டும்.
5. வயல்களில், தோட்டங்களில் மருந்து தெளிப்பவர்கள் மருந்து தெளிக்கும்போது முகமூடி அணிதல் அவசியமாகும்.

சித்த மருத்துவம்:-

1. தேங்காய்ப்பாலை அதிகளவு உள்ளுக்குக் குடிக்க கொடுத்து வாந்தி செய்வித்தல் அவசியமாகும்.
2. அருந்திய நஞ்சினை முறிக்கக்கூடிய தகுந்த மூலிகைச் சாற்றினை உள்ளுக்குள் குடிக்க வழங்க வேண்டும்.

14. பாம்புக்கடி (SNAKE BITE)

எல்லாப் பாம்புகளும் விஷப்பாம்புகள் இல்லை. பொதுவாக விஷப்பாம்புகள் ஐந்து வகைகளாகக் காணப்படுகின்றன. அவையாவன. 1. நல்ல பாம்பு, 2. நாக பாம்பு, 3. சுருட்டைப் பாம்பு, 4. விரியன் பாம்பு, 5. புடையன் பாம்பு. இவ் 5 வகையான பாம்புகளின் நச்சுத்தன்மையானது உயிருக்கே ஆபத்தை விளைவிக்கக்கூடியவை. இந்நச்சுவகை 2 வகைகளில் அடங்கும்.

1. இரத்தத்தைத் தாக்கும் நஞ்சு (HAEMO TOXIN)
2. நரம்பைத் தாக்கும் நஞ்சு (NEURO TOXIN)

1. இரத்தத்தைத் தாக்கும் நஞ்சு (HAEMO TOXIN)

இந்நஞ்சானது இரத்தச் சுற்றோட்டத்தில் பாதிப்பினை ஏற்படுத்திக் குருதியை உறையவிடாமல் தடுக்கின்றது. இந்நஞ்சினை புடையன் பாம்பும், விரியன்பாம்பும் கொண்டிருக்கும். விரியன் பாம்பானது கட்டுவிரியன், கண்ணாடி விரியன் என இரண்டு வகைப்படும். இவ்வகைப் பாம்புகள் கடித்தால் தலைவலி, மயக்கம், குமட்டல், வாந்தி, இரத்தம் கலந்த சளியுடன் கூடிய இருமல், இரத்தம் கலந்த சிறுநீர், தோலுக்கு அடியில் இரத்தப்பெருக்கு, ஆகிய குறிகுணங்கள் காணப்படும். மற்றும் அதிக இரத்தப் போக்கினால் அதிர்ச்சியும் மரணமும் சம்பவிக்கும்.

2. நரம்பைத் தாக்கும் நஞ்சு (NEURO TOXIN)

நரம்பு மண்டலத்தில் பாதிப்பினை ஏற்படுத்தி நரம்பு மண்டலத்தின் செயலை இழக்கச் செய்கின்றது. இந்நரம்பு மண்டலத் தொகுதியில் பாதிப்பை ஏற்படுத்தும் நஞ்சினை நல்ல பாம்பும், நாகப்பாம்பும், சுருட்டைப் பாம்பும் கொண்டிருக்கும். இவ்வகைப் பாம்புகள் கடித்தால் தலைச்சுற்றல், தசையில் தளர்ச்சி, கண்கள் செருகி அரைக்கண் தூக்கம், இரட்டைப்பார்வை, தசை கைகால்களில் விறைப்பு, மூச்சுத்திணறல் ஆகியவை ஏற்பட்டு மரணம் சம்பவிக்கும்.

பாம்புக்கடியில் காணப்படும் பொதுவான குறிகுணங்கள்

1. கடிதடம்
2. கடிதடத்திலிருந்து இரத்தம் கசிதல்
3. கடிதடத்தைச் சுற்றியுள்ள தோலின் நிறமாற்றம்
4. கடிதடத்தைச் சுற்றி வீக்கமும் வேதனையும் காணப்படும்.

முதலுதவி

1. கடிபட்ட இடத்தை அசைக்க விடக்கூடாது.
2. கடிபட்ட பகுதிக்குச் சற்றுமேலாக ஒரு துணியினால் இறுக்கிக் கட்ட வேண்டும்.
3. சுத்தமான புதிய கூரிய கத்தியினாலோ அல்லது புதிய சவர அலகினாலோ விஷப்பல் பதிந்த இடத்தில் ஒரு சதம் மீட்டர் நீளமாகவும், அரைச் சதம் மீட்டச் ஆழமாகவும் கீறிப் பதினைந்து நிமிடம் வரை வாயில் காயமோ, புண்ணோ இல்லாதவர் விஷத்தை உறிஞ்சித் துப்ப வேண்டும்.

சித்த மருத்துவம்:-

1. பாம்பு தீண்டியவருக்கு உடனடியாக ஆடு தீண்டாப்பாளை வேரை வாயிலிட்டுச் சுவைக்கச் செய்தால் அவர் உணரும் சுவையினையும் அறிகுறியையும் கொண்டு எவ்வகையான பாம்பு அவருக்குக் கடித்தது எனக் கண்டுபிடிக்கலாம். உதாரணமாக இனிப்புச் சுவையாக இருந்தால் நல்ல பாம்பு கடித்ததென்றும், பல சுவைகள் காணப்பட்டால் புடையன் பாம்பு கடித்ததென்றும், புளிப்புச் சுவையின் பின்னர் உறைப்புச் சுவை காணப்பட்டால் விரியன் பாம்பு கடித்ததென்றும் பேச முடியாமல் நாக்கு சுருண்டால் சுருட்டைப்பாம்பு கடித்ததென்றும் தலைநடுக்கம் காணப்பட்டால் நாகப்பாம்பு என்றும் அறிந்துகொள்ளலாம்.
2. கண்ணிற்கு சொட்டு மருந்தாக (EYE DROPS) பேய்ப்பீர்க்கஞ் சாறு விடலாம்.
3. அவுரி இலைச்சாறோ அல்லது உந்தாமணி (வேலிப்பருத்தி) இலைச்சாறோ அல்லது குப்பை மேனி இலைச்சாறோ இவைகளில் ஒன்றினை மூக்கில் விட்டு நசியமிடவேண்டும்.
4. காய்ந்த வாழைத்தண்டு அல்லது இலுப்பைப்பழம் (காய்ந்தது) அல்லது உலர்ந்த காட்டாமணக்கினை இவற்றில் ஒன்றைப் பொடியாக்கி மூக்கில் ஊதவும் அனைத்துப் பாம்பு விஷமும் நீங்கும். இது ஒரு நல்ல நசியமுறையாகும்.

(தொடரும்)

நினைவு நிலைவுகள்

1ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 11 05 1944 | உதிர்வு 02 04 2008



திரு. செபஸ்தியான் சந்தியோகு (இரத்தினம்)

மாதிரிக்கிராமம், நறுவிலிக்குளம்

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வான்" (யோவான் 11:25)

எம் இனிய தந்தையே, இவ்வுலக வாழ்க்கையில் இன்ப துன்பங்களை ஏற்று எமக்காக வாழ்ந்து வந்தீர். கடல்கடந்து சென்ற எம்மை (இந்தியாவில்) பாதுகாப்பாய் வாழவைத்தீர். உடல் நோய்கள் பாராது ஓயாது உழைத்துக் காத்தீர். பல குடும்ப சுமைகளைப் பண்போடு ஏற்று வாழ்ந்தீர். இறைவனின் நிலைவாழ்வில் அமைதிபெற அருள்வேண்டி பிரார்த்திக்கின்றோம். "நித்திய இழைப்பாற்றியை அளித்தருளும் ஆண்டவரே"

பிரிவால் வருந்தும் :

மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், மருமக்கள், சகோதரங்கள், உற்றார், உறவினர்.

31ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 22 01 1951 | உதிர்வு 11 02 2009

திரு. இ. ஜேம்ஸ் அன்ரனி பெனான்டோ (அருமை)

(முன்னாள் தபால் ஊழியர், முருங்கன்)

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்." (யோவா 11:25)

அன்பின் உருவாய் பாசத்தின் உறைவிடமாய் எம்முடன் வாழ்ந்து யுத்தத்தின் கோரப் பிடியில் சிக்கி எம்மைவிட்டு இறைபதமடைந்த எம் அன்பு மகனின் ஆன்ம சாந்திக்காக இறைவனிடம் வேண்டி நிற்கின்றோம்.

இவரது பிரிவால் துயருறும்

பெற்றோர், மனைவி, மகள், பேரப்பிள்ளைகள், மருமக்கள், சகோதரர், உற்றார், உறவினர்.

தகவல்: வி. ஈ. சாமுவேல் முருங்கன்பிட்டி,முருங்கன்.

நினைவு நிலைவுகள்

10ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 20 07 1949 | உதிர்வு 06 04 1999

ச. ஜெரோம் எமிலியானுஸ் வாஸ்

கிராம அலுவலர் (வங்காலை)

எம் குடும்பத்தில் பூத்த முத்த மலரே
எமக்காய் வாழ்ந்து உதிர்ந்து பத்து ஆண்டுகள் போயினும் நாம் உம்மை மறவோம்.
உம் ஆன்ம சாந்திக்காக வேண்டுகிறோம்.

பிரிவால் துயருறும்

சகோதரிகள், மைத்துனன்மார், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

1ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 16 04 1940 | உதிர்வு 23 03 2008



திருமதி. சந்தான் கத்தறீன்

உயிர்த்தராசன் குளம், முருங்கன்.

ஆண்டொன்று கடந்து சென்றாலும் அம்மா
உம் அன்பினை மறக்க முடியவில்லையே
பாசத்தை எம்மீது பொழிந்திட்ட அம்மாவே
உடலால் எம்மைவிட்டுப் பிரிந்து சென்றாலும் எம்
உள்ளங்களில் என்றுமே உறைந்து இருக்கின்றீர்கள்
இவரது ஆன்மா இறைவனில் சங்கமிக்க
இரந்து வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,

(தகவல்: மகன். ச. அமலதாசன்)

2ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 16 11 1962 | உதிர்வு 31 03 2007

செபமாலை கிறீஸ்துராசா – சீமான்

பரிகாரிகண்டல், முருங்கன்.

"நான் ஆண்டவருக்காகப் பொறுமையுடன் காத்திருந்தேன் அவரும் என் பக்கம் சாய்ந்து என் மன்றாட்டைக் கேட்டருளினார்."

இவரது ஆன்மசாந்தித் திருப்பலி பரிகாரிகண்டல் திருஇருதய ஆண்டவர் ஆலயத்தில் 31.03.2009 மாலை 5.00 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும்.

பிரிவால் வருந்தும்

மனைவி, பிள்ளைகள், சகோதரர், உற்றார், உறவினர்.

(தகவல்: மகன். யூட் அன்ரனிஸ்)

விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.83 எசாயா 34-44

உங்கள் விடைகளை 20. 04. 2009க்கு முன் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதிய மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். (பதிப்பாசிரியர்)

01										02
				03		✱	04			
			05					06	✱	
	✱			07						
			08		09			✱		
	✱	10					11		12	
				13						✱
						14		15		
	16							17		
	18				✱				19	
20				21						22

இடமிருந்து வலம்

1. அதன் புகை ..... எழும்பிகொண்டிருக்கும்.
4. உமக்குப் பிறக்கும் புதல்வர் .....கைது செய்யப்படுவர்.
5. நீ வந்த வழியே உன்னைத் ..... விடுவேன்.
7. நீர் உம் வீட்டுக் ..... ஒழுங்குபடுத்தும்.
11. துணைவேண்டிக் ..... கதறினேன்.
16. நீங்கள் ..... யாரும் கேட்டதுமில்லை.
18. நான் அறியாத ..... வேறு உண்டோ?
20. அவர்கள் நடப்படுகிறார்கள் .....ப் படுகிறார்கள்.
21. அவன் அதிலிருந்து கொஞ்சம் எடுத்துக் ..... காயப் பயன்படுத்துகிறான்.

மேலிருந்து கீழ்

1. மக்களினங்களின் தெய்வங்களில் ..... அசீரியா அரசனின் கையிலிருந்து தன் நாட்டை விடுவித்ததுண்டோ?
2. ஆண்டவரே அசீரிய மன்னர்கள் அனைத்து நாடுகளையும் அவற்றின் .....யும் பாழடையச் செய்தது உண்மையே.
7. பாதை வழியே ..... படாது செல்கின்றான்.
8. உனக்கெதிராய் வெகுண்டெழுவோர் அனைவரும் மானக்கேடுற்று ..... அடையார்.
9. யாக்கோபு என்னும் புழுவே! இஸ்ராயேல் என்னும் கொடிப் ..... அஞ்சாதே.
10. வறண்ட ..... நீரோடைகள் ஓடச்செய்வேன்.
(இறுதி எழுத்து 1வது எழுத்துக்கு மேலே உள்ளது)
11. அவற்றைத் தூற்றுவாய் ..... அவற்றை வாரிக்கொண்டு போம்.
12. அவர் மக்களினங்களுக்கு நீதி ..... வார்.
13. அது குள்ளநரிகளின் குடியிருப்பாகும் ..... களின் வாழ்விடம் ஆகும்.

வலமிருந்து இடம்

2. வறண்ட ..... நீரோடைகள் பாய்ந்தோடும்.
3. மூன்றாம் ஆண்டோ ..... அறுவடை செய்வாய்.
5. வந்த வழியே அவன் .....ச் செல்வான். (1ம், 2ம் எழுத்துக்கள் மாறியுள்ளன)
7. மண்ணுலகின் புழுதியை மரக் ..... அளந்தவர் யார்?
8. அவர் ஆண்டவரின் ..... சென்று ஆண்டவர் திருமுன் அதை விரித்துவைத்தார்.
17. அஞ்சாதே! ஏனெனில் நான் ..... இருக்கின்றேன்.
19. நீர் நிலைகள் வழியாக நீ .....போது நான் உன்னோடு இருப்பேன்.
22. பொட்டல் மேடுகளைப் பிளந்து ..... தோன்றச் செய்வேன்.

கீழிலிருந்து மேல்

6. எனக்கு உடல் ..... நல்கி நான் உயிர் பிழைக்கச் செய்வீர். (இறுதி எழுத்து 1வது எழுத்துக்கு முன்னே உள்ளது)
9. அவர்கள் மகிழ்ச்சியும் ..... அடைவார்கள்.
11. இதோ நீ வாழும் ..... இன்னும் பதினைந்து ஆண்டு மிகுதியாக்குவேன்.
12. பாலைநிலத்தில் ஆண்டவருக்காக ..... ஆயத்தமாக்குங்கள்.
14. வானின்வெளி ஏட்டுச் .....ச் சுருட்டப்படும்.
15. எந்தச் ..... அவருக்கு நிகராகக் கொள்வீர்கள்.
16. பாலைநிலமும் அதன் நகர்களும் கேதாரியார் வாழ் ஊர்களும் ..... எழுப்பட்டும்.
20. உலகின் ..... மீது வீற்றிருப்பவர் அவரே.
22. ஒருவன் சேற்றைக் குழைப்பதுபோலும், குயவன் களிமண்ணை மிதிப்பதுபோலும் அவன் ..... களை நடத்துவான்.

தனிமை ஒரு இனிமையா?.....

12ம் பக்கத் தொடர்ச்சி

உண்மையில் மனிதன் எதையும் சார்ந்திருக்க வேண்டியதில்லை, தன்னைத் தவிர. ஆனால் சமூக நியாதிகளை நாம் புரிந்துகொள்வதில் ஏற்படும் தவறுகளில்தான் மனதில் குழப்பங்கள் உருவாகின்றன. பெரும்பாலான குழப்பங்கள், சோகங்கள், சிக்கல்கள் நாம் சில விஷயங்களில் சார்ந்திருப்பதால்தான் ஏற்படுகின்றன. சார்புநிலை மனிதரிடம்தான் இருக்க வேண்டும் என்பதில்லை. பொருள்மீதும், பதவிமீதும் இருக்கலாம்.

அடிப்படையில் மனிதன் தனிமையானவன்தான். அதீதமான அழகுள்ள மலரைப் பூத்த செடி எப்படி மலர் உதிர்ந்தாலும், தொடர்ந்து உயிர்வாழ்ந்து இன்னொரு நாள் மலரை உருவாக்க முடியுமோ, அதேபோல மனித மனமும் எவ்வளவு நெருக்கமான உறவின் இழப்பாயிருந்தாலும் மீண்டும் எழுந்து மறுபடியும் இயங்கி புது உறவுகளை உருவாக்கி வாழ முடியும். இந்த இடைப்பட்ட காலத் தனிமையைக் கண்டு அச்சம், குழப்பம், கவலை கொள்ளாமல் வருந்திப் பிரியாவிடை கொடுப்பதன் மூலம் புதிய வாழ்வு, புதிய உறவை நாம் மீட்டெடுக்க முடியும்.

கோடி மக்களின் மனங்களை வருடும் கவிதைகளை உருவாக்கிய தாகூர் அவற்றைப் படைத்தது தனிமையில்தான், தன் முதல் மகிழ்ச்சிக்காகத்தான். இவ்வுலகின் சிறந்த தலைமைத்துவவாதியாகச் செயற்பட்ட எம்பிரான் இயேசுகூட அதிகாலையில் தனிமையிலே இருந்து பரலோக் தந்தையிடம் செபித்ததாகவும், தமது பாடுகளைப் பரலோக தந்தையிடம் பகிர்ந்து மீட்பை உண்டாக்கியதாகவும் நற்செய்திகள் கூறுகின்றன.

தனிமை சிறப்பு வாய்ந்தது, சக்தி வாய்ந்தது என்பதற்காக ஊக்குவிக்கும் - உற்சாகமூட்டும் உறவுகளை உதறிவிட வேண்டும் என்பதில்லை. எந்த நெருக்கமான பிணைப்பு முறிந்தாலும் மனிதன் தனியே வாழ, வளர மீண்டும் மகிழ முடியும் என்பதை உணர்த்துவதே தனிமையின் சக்தி.

"உன்னை அறிந்தால் நீ உன்னை அறிந்தால் உலகத்தில் போராடலாம்" என்று கவிஞன் கூறியபடி நம்மையறிவது, நம் நெருக்கங்களை அடையாளம் காண்பது, நாம் சார்ந்திருப்பவற்றை தெரிந்து, புரிந்து, சார்புநிலையை விளங்கிக்கொள்வது, நாம் தனியாகவும் வாழ, வளர, படைக்க, வெல்ல முடியும் என்பதை உணர்ந்துகொள்வதாகும்.

மன்னா சந்தா விபரம்

உள்நாடு : ரூபா 600.00 (இலங்கை ரூபா)
வெளிநாடு : ரூபா 2500.00 (இலங்கை ரூபா)

சந்தாப்பணத்தை மன்னா பணியகத்தில் நேரடியாகவோ அல்லது காசுக்கட்டளை மூலமாகவோ அல்லது காசோலை மூலமாகவோ செலுத்தலாம்.

காசோலை மூலம் செலுத்துவதாயின்;
வங்கியின் பெயர் :
Hatton National Bank Ltd. (Mannar Branch)
பணம் பெறுபவரின் பெயர்:The Editor - 'MANNA'
வங்கிக் கணக்கு இலக்கம்: S/A No. 02 -1678001-5

இளைஞர் பாசறை .....

4ம் பக்கத் தொடர்ச்சி

அந்த வகையில் பம்மைமடுப் பங்கு இளைஞர் கருத்தமர்வின் வளவாளர்களாக வவுனியா கல்வியியல் கல்லூரியின் பீடாதிபதி திருவாளர் பேனாட் மற்றும் அதே கல்லூரியின் விரிவுரையாளர் திருவாளர் சுவர்னறாஜ் அவர்களும் நானாட்டான் மற்றும் அரிப்பு பங்குகளின் இளைஞர் கருத்தமர்வின் வளவாளர்களாகக் கலந்துகொண்ட வவுனியா கல்வியல் கல்லூரியின் முன்னாள் உபபீடாதிபதி திருவாளர் இன்பதேவராஜா அவர்களும் மற்றும் செட்டிகுளம் பங்கு இளைஞர் கருத்தமர்வின் வளவாளராகக் கலந்துகொண்ட அமலமரித் தியாகிகள் சபையைச் சார்ந்த அருட்தந்தை விமல் அடிகளாரும் எமது பாராட்டிற்கும் நன்றிக்கும் உரியவர்கள்.

நடைபெற்ற மூன்று கருத்தமர்வுகளிலும் இளைஞர் எதிர்கொள்ளும் சவால்கள் பற்றியும் அச்சவால்களை இளைஞர் சமுதாயம் கையாளும் முறைகள் பற்றியும் விளக்கப்பட்டன. மனித விழுமியங்களை, சிறப்பாக நற்செய்தி விழுமியங்களை அடிப்படையாக வைத்து இவை நடாத்தப்பட்டன. இந்நிகழ்வில் பங்குகொண்ட இளைஞர்கள் மிகவும் உற்சாகத்துடன் செயற்பட்டமையை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

உரைகள், கலந்துரையாடல்கள், தியானங்கள், விளையாட்டுக்கள், குழு ஆய்வு, பொது அமர்வு, குழுஆய்வு, அறிக்கைகள் சமர்ப்பித்தல் போன்ற வகையில் இக்கருத்தரங்குகள் நடைபெற்றன. மன்னார் மறைமாவட்ட இளைஞர் ஆணைக்குழு இயக்குனர் அருட்திரு. பி. ஜேசுறாஜா அவர்களின் வழிகாட்டலில் மன்னார் மறைமாவட்ட இளைஞர் ஆணைக்குழுவின் நிர்வாக அமைப்பினால் நெறிப்படுத்தப்பட்ட இக்கருத்தமர்வுகளை இப்பங்குகளின் பங்குத்தந்தையர்கள் மற்றும் உதவிப்பங்குத் தந்தையர்களான அருட்தந்தையர்கள் அன்ரன் செபமாலை, எம். ஏ. ஜெயசீலன், எஸ். ஜெயபாலன், சவுல் நாதன், செலஸ்ரீன் மஸ்கறீஞ்ச மற்றும் முரளிதரன் ஆகியோர் அவரவர் பங்குகளில் ஒழுங்குப்படுத்தியிருந்தனர்

மேற்குறிப்பிட்ட பங்குகளில் மேற்குறிப்பிடப்பட்ட தினங்களில் இக்கருத்தமர்வுகளில் பங்கெடுத்தோரின் வயிற்றுப்பசியைப் போக்கும் நோக்கோடு உணவுப்பொதிகளை வழங்கிய பங்கு மக்களும் எமது நன்றிக்குரியவர்கள்.

நீத்தார் நினைவு, பிறந்த நாள், திருமண யூபிலி போன்றவற்றைப் பிரசுரிப்பதற்கான புதிய கட்டண விபரம்

கறுப்பு வெள்ளை நிறத்தில் : - ரூபா 4,000.00
பல நிறத்தில்: - ரூபா 7,500.00

முக்கிய குறிப்பு: உங்கள் விடயங்கள் எந்த மாதத்தில் பிரசுரிக்கப்படவேண்டும் என விரும்புகிறீர்களோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 15ம் திகதிக்கு முன்னர் எமக்கு கிடைக்கக்கூடியதாக விடயங்களை அனுப்பவேண்டும்.

- பதிப்பாசிரியர்

விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 81ல்

சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசு பெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:

முதலாம் பரிசு:

ஜே. நிவேதன் லெம்பேட்
5ம் வட்டாரம்
வங்காலை

இரண்டாம் பரிசு:
கே. ரம்யா
இல. 80A, மடுக்கரை,
நானாட்டான்.

மூன்றாம் பரிசு:
T. S. டக்ஷன்
இல. 76/100
சாந்திபுரம், மன்னார்.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 107 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 98 பேர்.

விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.81ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் 50 அதிஸ்ரசாலிகள்

1. அ. சுபைஷன் 54/6, கொழும்பகம் சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
2. செ. றொபின்சன் மழுவராயர் கட்டையடம்பன், மடுறோட்.
3. எஸ். வினோதினி, நறுவிலிக்குளம், வங்காலை.
4. தேவிகா பத்மராஜா, மடுமாதா வீதி, பெற்றா, மன்னார்.
5. ஜே. ஜெயறூபினி, இல. 161, மடுக்கரை, நானாட்டான்.
6. தி. றேக்கா சாளம்பன், நானாட்டான், மன்னார்.
7. கமலா கிறிஸ்தோப்பர், மடுமாதா வீதி, சின்னக்கடை, மன்னார்.
8. எ. மேரி சூசையம்மா லெம்பேட், 8ம் வட்டாரம், வங்காலை.
9. பி. றெமூந்துப்பிள்ளை, கங்காணிதீவு, நானாட்டான்.
10. சாந்தன் சிந்து, 5ம் வட்டாரம், வங்காலை, மன்னார்.
11. ஐடா பற்றிக், பிரதான வீதி, மன்னார்.
12. செ. இன்வென்ரா டயஸ், மரியாள் வீதி, தாழ்வுபாடு.
13. அனுஷா, அ. அன்னை ஆலயம், துட்டுவாகை, நேரியகுளம்.
14. செ. ஆன் நியூக்கா துரம், மரியாள் வீதி, தாழ்வுபாடு.
15. சி. பாஸ்கர் றோச், பள்ளிமுனை, மன்னார்.
16. சூ. இராக்கினி லீனா, மரியாள் வீதி, தாழ்வுபாடு.
17. அ. கவினா, தாமோதரம் வீதி, தாழ்வுபாடு, மன்னார்.
18. யோ. பெலின் சவிஷன், ஆவணம், நானாட்டான்.
19. பி. ஜே. சிந்துஜா, எழுத்தூர்.
20. எ. டொறின் ஜீவதி லெம்பேட், 8ம் வட்டாரம், வங்காலை.
21. றெ. பி. மரிய டினேஷன், கங்காணிதீவு, நானாட்டான்.
22. செ. வளன் நிலுஜன் துரம், மரியாள் வீதி, தாழ்வுபாடு.
23. நோ. ஆன் யூலியானி றோச், பள்ளிமுனை, மன்னார்.
24. அ. இசைக்கியேல், யோசவ்வாஸ் நகர், தோட்டவெளி.
25. திருமதி தே. ஜீவதி சோசை, வங்காலை - 2
26. ஜே. சோபியா லெனின், யோசப்வாஸ் நகர், தோட்டவெளி.
27. தே. கயன்சன், யோசவ்வாஸ் நகர், தோட்டவெளி, மன்னார்.
28. ஜே. எமோரஞ்சியா லெம்பேட், 5ம் வட்டாரம், வங்காலை.
29. ஜே. ஜெனிறோ யோசவ்வாஸ் நகர் தோட்டவெளி மன்னார்.
30. அ. அலைக்ஸ் பிவீசன் மன்/புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி
31. குணமணி சேவியர், பெரியகடை, மன்னார்.
32. ஜே. சுவேதன் லெம்பேட், 5ம் வட்டாரம், வங்காலை.
33. க. கீர்த்திக்கா, 41/1 புனித மரியாள்வீதி, திருகோணமலை
34. திருமதி. மெ. அ. லெம்பேட், வங்காலை 2
35. திருமதி. ரி. எஸ். லீலாவதி இல. 76/100 சாந்திபுரம், மன்னார்.
36. J. மேரி துஷானி லெம்பேட், 5ம் வட்டாம், வங்காலை.
37. யே. மேரிகொண்செப்ரா, யோசப்வாஸ் நகர், தோட்டவெளி.
38. கி. அன்றிசானா இல.2. 50 வீட்டுத்திட்டம், பள்ளிமுனை.
39. திருமதி. பொ. அ. லெம்பேட், வங்காலை 2
40. ஜே. டினுசாந், யோசவ்வாஸ் நகர், தோட்டவெளி, மன்னார்.
41. ஸ்ரலின் நிரோஷன், ஆவணம், நானாட்டான்.
42. யே. ஜெலின்ரன், யோசவ்வாஸ் நகர், தோட்டவெளி, மன்னார்.
43. அ. தி. அன்புராஜ் லெம்பேட், வங்காலை -2
44. யோ. டொறின் யாழினி, ஆவணம், நானாட்டான்.
45. Sr. மேரி பற்றிசியா புனித அந்தோனியார் ஆலயம் ரம்பவ அனுராதபுரம்
46 வி. வேஜின் டிலக்ஷனா தொழிநுட்ப கல்லூரி முகாம் வவுனியா
47. தி. ஸ்ரீபன் சாளம்பன், நானாட்டான், மன்னார்.
48. அ. லவ்சாயினி இல. 5. முதலியார்குளம் செட்டிகுளம்.
49. அ. அலைக்ஸ் டால்டன் வங்காலை மன்னார்.
50. ஜே. நிஷாந்தன் லெம்பேட், 5ம் வட்டாரம், வங்காலை.

விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி 81 இற்கான சரியான விடைகள்

அ[1]	க	ம	கி	ழ்	வோ	டு	து	த்	கை	தி[2]
ண்	வ[3]	ழி	ம	ர	பு	ண்	தி[4]	ரா	சை	ட்
மை	ல்	✱	ல	கி	மே	ரு	வ	எ[5]	✱	ட
யி	ல	ம்	க	க்	ர	இ[6]	ளை	ஞ	ரை	மே
ல்	வ	க	க்	று	✱	ளை	ம்	ர	க	ந[7]
✱	ன்	க்	டை	பொ[8]	க	ப்	ர்	வ	ரு	ஒ[9]
ழ	ம்	ல	அ[10]	சே	ரா	பா	ம[11]	தி	ல்	ரு
ற	ரோ	க[12]	ரி	வு	தி	றி	ம்	னு	எ[13]	வ
பி	ர	த	ந்	ற	எ[14]	✱	வ[15]	ய	ல்	ன்
றி	வீ[16]	றி	து	தி[17]	ரா	ட்	சை	ழ	லை	நி
நெ[19]	டு	ஞ்	சா	லை	✱	டி	கா	க்	ழ	வ[20]

விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 82ற்கான முடிவுகளை 2009ம் ஆண்டு ஏப்ரல் மாத மன்னாவில் எதிர்பாருங்கள்.

மன்னா

அருட்பணி. விமல் அ.ம.தி. அவர்களின்
'பயமில்லையே' இசைத் தொகுப்பு வெளியீடு

யாழ் மாகாண அமதிகள் குடும்பத்தைச் சேர்ந்த அருட்பணியாளர் விமல் (அ.ம.தி.) அவர்களின் "பயமில்லையே" என்ற இசைத்தொகுப்பு வவுனியா அமதிகள் கலைத் தொடர்பக வெளியீடாக வெளிவந்துள்ளது.

கடந்த 28.02.2009 அன்று முருங்கன் டொன் பொஸ்கோ மாணவர் இல்லத்தில் இவ் இசைத்தொகுப்பின் வெளியீட்டு விழா இடம் பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக அருட்பணி. சேவியர் குரூஸ் அடிகளார் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினர்களாக வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி திரு. க. பேர்ணாட், நானாட்டான் பிரதேச செயலாளர் திரு. க. இ. சந்திர ஐயா, முருங்கன் மறைக்கோட்ட முதல்வர் அருட்பணியாளர் டெஸ்மன் குலாஸ், முருங்கன் டொன் பொஸ்கோ மாணவர் இல்ல இயக்குனர் அருட்பணியாளர் பயஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வின்போது வரவேற்புரையை முருங்கன் பங்குத்தந்தை அருட்பணியாளர் எஸ். ஸ்ரீபன் ராஜா அவர்களும், தலைமை உரையை யாழ் அமதிகள் குழும ஆலோசகர் அருட்பணி அற்புதராஜா அவர்களும், வெளியீட்டு உரையை வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரிப் பகுதிநேர விரிவுரையாளர் அருட்பணியாளர் ஜெயந்தன் பச்சேக் (அ.ம.தி). அவர்களும் வழங்கினர்.

(தொடர்ச்சி 5ம் பக்கம்)

வாழ்த்துகிறோம்

கடந்த பெப்ரவரி மாதம் 12ம் திகதி மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்களால் மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் குருவாக திருநிலைப்படுத்தப்பட்ட எம் அன்புச் சகோதரன் அருட்பணியாளர் ரஜனிகாந் அவர்களை இறைவனின் அருள் நிறைவாக பொழியப்பட வாழ்த்திப் பாராட்டி மகிழ்கின்றோம்.

வாழ்த்துபவர்கள்

டென்மார்க்கில் வசிக்கும் சித்தப்பா ஜெகநாதன், சித்தி மற்ரின், தம்பி உசாந்தன், தங்கை யூற்ரிசா, நோர்வேயில் வசிக்கும் அண்ணா நீலாம்ஸ்றோங், அண்ணி அனுகீத்தா, மகன்மார் ஆகாஸ் எதல்வேட், ஆசாப் எடின்வேட்.

"யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்"
உங்கள் உறவினர் நண்பர்களுக்கு மன்னாவை அறிமுகப்படுத்துங்கள்

உங்கள் அன்புக்குரியவர்களுக்கு சிறந்த பயனுள்ள பரிசுப்பொருள் ஒன்றை வழங்க விரும்புகின்றீர்களா? அப்படியாயின் உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ உள்ள உங்கள் அன்புக்குரியவர்கள் மன்னாவைப் பெற நீங்கள் ஏன் வழிசமைக்கக் கூடாது? உங்கள் அன்புக்குரியவர்களுக்கு மன்னா பத்திரிகை சென்று சேர நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்.

உங்கள் அன்புக்குரியவர்களின் பெயர், முகவரி ஆகியவற்றைத் தெளிவாக எழுதி ஒரு வருடத்திற்குரிய சந்தாப் பணத்தையும் எமக்கு அனுப்பிவையுங்கள். உங்கள் அன்புக்குரியவர்களின் வீடு தேடி மன்னா பறந்து செல்லும்! உள்நாட்டு வெளிநாட்டு சந்தா விபரங்களை 19ம் பக்கத்தில் பாருங்கள்.

நீங்காத நினைவுகள்

31ம் நாள் நினைவு

மலர்வு 11 01 1945

உதிர்வு 06 02 2009

திரு. செபஸ்ரியான் நசரேனு (J.P)

(ஓய்வுபெற்ற குவாசிக்கோட் செயலாளர், பதிவாளர் திணைக்களம், கொழும்பு.)
(உதவிப் பதிவாளர், ஓய்வுதிய சங்கம், மன்னார்.)

அன்புத்தந்தையே! அருளின் வடிவான குணவாளனே
அண்டிவரும் அன்பர்க்கு ஆதரவுடன் உதவும் வள்ளலே
எத்திணைக்கள வேலைகளானாலும்
இயக்காற்றலுடன் செய்து முடிக்கும் செயல் வீரனே!
ஆம் எங்களின் பப்பா.....
உங்களைக் கொடிய நோய் வடிவில்
காலன் கவர்ந்து சென்றானோ?
படுக்கையதில் முடங்காது எம்முடன்
பேசிக்கொண்டே விடைபெற்றீரே! ஐயகோ!
எம் உறவுகளின் உற்சவங்களில் நீங்களோர் விருட்சம்
மக்களின் ஒன்றுகூடலில் நீங்களோர் நிறைகுடம்
இனிமேல் யார் அவ்விடத்தை ஈடுசெய்வார் என
ஏங்குகின்றோம் தந்தையே!

பிரிவால் துயருறும் :– நசரேனு மேரிறீறா குடும்பத்தினர்

3ம் ஆண்டு நினைவு

திருமதி. இந்திரா அல்பிறட் — திரு. அல்பிறட் விஜயரட்ணம்

மலர்வு : 26 - 05 - 1950 — மலர்வு : 10 - 07 - 1943
உதிர்வு : 01 - 02 - 2006 — உதிர்வு : 02 - 01 - 2006

"சீவியத்தில் எம்மை நேசித்தவர்களே
மரணத்திலும் எம்மை மறவாதிருப்பீர்களாக"

இல்லறத்தை நல்லறமாக்கி
எமக்கெல்லாம் வழிகாட்டி
பண்பாய், நேசமாய், பாசமாய்
அரவணைத்து உயர்வாழ்வு தந்த
அம்மா, அப்பாவே உங்கள் ஆன்மா
சாந்திபெற உளமாற வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும் :
பிள்ளைகள், உற்றார், உறவினர், நண்பர்கள்

1ம் ஆண்டு நினைவு

மலர்வு 10 02 1953

உதிர்வு 28 03 2008

திருமதி. யோ. அக்னெஸ் [சரஸ்]

[பனங்கட்டுக் கொட்டு மேற்கு, மன்னார்.]

"நானே உங்களைத் திக்கற்றவர்களாக விடமாட்டேன்
உங்களிடம் திரும்பி வருவேன்" (யோவான் 14:18)

ஆண்டொன்று சென்றாலும் அம்மா உங்கள் நினைவு
எம்மைவிட்டு அகலவில்லை.
தாய் இழந்த கன்றுகளாய் தவிக்கின்றோம் அம்மா
அன்பான பாசத்தால் அனைவரையும் அரவணைத்தீர்கள்.
குடும்பத்தின் குலவிளக்காய் விசுவாசத்தின் வெளிச்சமாய்
ஒளிதந்து எங்களை வாழவைத்தீர்கள்.
ஏனம்மா எங்களைவிட்டுப் பிரிந்தீர்கள்?
ஒவ்வொரு நொடியும் உங்களுக்காக ஏங்குகின்றோம்
இறைப்பேரின்ப வான்வீட்டில் இன்பமாக நீங்கள் இருக்க
இறைவனிடம் அனுதினமும் வேண்டுகின்றோம்.

ஏன்றும் உங்கள் நினைவுகளுடன்
கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்

28-03-2009 அன்று காலை 5.45 மணிக்கு மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் நடைபெறும் திருப்பலியில் கலந்து ஆத்ம இளைப்பாறுதிக்காக மன்றாடவும்.

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு, கொழும்பு 14, பிரீன்ஸ் ஒப் வேல்ஸ் அவனியூ, 784ஷ1 இலக்கத்திலுள்ள கிறேஸ் என்ரபிறைசஸ் அச்சகத்தில் அச்சிடப்பட்டு பதிப்பாசிரியரால் வெளியிடப்பட்டது